மலர்:20 இதழ்: 7
ஜூலை – 2020
Date of Publication
25th day of Every month
தனிப்பிரதி விலை : ₹ 15/–

# செங்குந்த மித்திரன்



## தமிழ்த் திரை உலகின் முன்னோடி

# மாடர்ன் தியேட்டர் T.R.சுந்தரம்

வாழ்க வாழ்க
செங்குந்தர்

வெல்க வெல்க
செங்குந்தம்

# செங்குந்தர் உறுதிமொழி

நாம் செங்குந்த குலக்கடவுள் அருள்மிகு முருகப்பெருமான் ஆணையாக, மனசாட்சியுடன் கீழ்க்கண்டவாறு உறுதி பூணுகிறோம்.

1. நாம் இந்தியக் குடிமக்களாய் இருப்பதை, பெருமையாகக் கருதுகிறோம். நமது நாட்டின் அரசியல் அமைப்புச் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, நாட்டின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடுவோம்.

2. நாம், செங்குந்தர் என்ற உணர்வுடன் ஒன்றுபட்டு, நமது சங்கத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு சமூக, பொருளாதார, கல்வி, தொழில், கலாச்சார முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம். சமூக நலம் காப்போம்.

3. நாம் மற்ற இனத்தவரிடம், மனித நேயம் கொண்டு, நட்புடனும், அன்புடனும் பழகுவோம்.

4. நாம், நமது உரிமைகளைப் பாதுகாக்க எப்பொழுதும் விழிப்புடன் செயல்படுவோம்.

5. நாம் நமது சங்கம் நிறுவிய சான்றோர்களை நினைவில் கொண்டு, சங்கத்தை நாளும் வளர்த்திடுவோம்.



# தலைவர் மடல்

எதையும் தேடிப் போகாமல் நமக்கு நிறைய தகுதி இருக்கின்றது என்று தன்னம்பிக்கையுடன் உள்ள செங்குந்த சொந்தங்களுக்கு வணக்கம்.

அனைவருக்கும் சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்!

வரும் ஆகஸ்ட் 7ஆம் தேதி 'தேசிய கைத்தறி தினத்தை' கைத்தறி ஆடை வாங்கிக் குடும்பத்துடன் கொண்டாடுங்கள்.

செங்குந்தர் குலச் செம்மல்கள் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் ஆகியோரின் பிறந்த தினத்தை சமூக இடைவெளியோடு சிறப்பாகக் கொண்டாடுங்கள்!

பதவிக்காக ஆசைப்படாதீர்கள், நீங்கள் அதைக் கேட்டுப் பெற்றால் அதனிடம் நீங்கள் ஒப்படைக்கப்படுவீர்கள்! நீங்கள் கேட்காமலேயே அப்பதவி உங்களுக்கு கிடைத்தால் அதன் பொறுப்புகளை நிறைவேற்ற உங்களுக்கு உதவி கிடைக்கும். இது உலக நியதி.

செங்குந்த சமுதாயத்திற்கு பணியாற்றிட பல்வேறு அணிகளில் தங்களை இணைத்துக் கொண்டு சமுதாயத்திற்கு தங்களால் ஆன சேவைகளை செய்து உங்களுக்கும், சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்திடுங்கள்

*திறமை என்பது கடவுளால் கொடுக்கப்பட்டது -*
*அடக்கத்துடன் இருங்கள்..!*
*புகழ் என்பது மனிதர்களால் கொடுக்கப்படுவது -*
*நன்றியுடன் இருங்கள்..!*
*அகம்பாவம் என்பது நமக்கு நாமே கொடுத்துக்கொள்வது -*
*எச்சரிக்கையுடன் இருங்கள்..!*

அன்புடன்

KPK செல்வராஜ்





தருமபுரி அருள்மிகு கல்யாண காமாட்சியம்மன்



# மூன்று கோயில்கள் ஒருங்கே அமைந்த தருமபுரி கோட்டை காமாட்சியம்மன் திருக்கோயில்

கொடை வள்ளல் அதியமான் ஆட்சிபுரிந்த 'தகடூர்'தான் இன்றைய தருமபுரி. அன்னை, கல்யாண காமாட்சியாக எழுந்தருளியுள்ள தலம்.

"கோட்டைக் கோயில்" - "கோட்டை ஈஸ்வரன் கோயில்" - "தகடூர் காமாட்சி கோயில்" என்று கேட்டால்தான் மக்களுக்குத் தெரிகிறது. "கோட்டை சிவன் கோயில்" என்றே இக்கோயில் வழங்கப்படுகிறது.

தலமரம் வேளா மரமாதலின் (ஒரு காலத்தில் வேளா மரக்காடாக இருந்திருக்கலாம்) இப்பகுதிக்கு வேளாவனம் என்றும்; சுவாமிக்கு வேளாலீஸ்வரர் என்ற பெயரும் சொல்லப்படுகிறது. வேளா மரம் தற்போதில்லை.

கோயிலில் "காடு வெட்டிச் சித்தரின்" ஜீவ சமாதி என்று சொல்லப்படும் சித்தலிங்கேஸ்வரர் (சிவலிங்க) சந்நிதியுள்ளது. ஒவ்வொரு மாதப் பிறப்பிலும் முதல் வழிபாடு இவருக்குத்தான் நடத்தப் பெறுகிறது.

## தல சிறப்பு

கன்னிராசியில் அஸ்த நட்சத்திரக்காரர்கள் வணங்கவேண்டிய தலம் இது. ஐராவதம், ராமர் துர்வாசர், அர்ச்சுனன் முதலியோர் வழிபட்ட தலம். சுந்தரர் தேவாரப் பாடலில் வைப்புத் தலமாக பாடப்பட்ட பெருமையுடையது.

இத்தல இறைவன் மல்லிகார்ச்சுனர், இறைவி கல்யாண காமாட்சி.

மாங்காட்டில் தபஸ் காமாட்சியாகவும், காஞ்சியில் யோகக் காமாட்சியாகவும் அருளும் அன்னை தகடூரில் ஐக்கியக் காமாட்சியாக அமர்ந்து அருள்பாலிக்கிறாள்.

நுளம்பர் கட்டிய பல கோயில்களில் இக்கோயில் குறிப்பிடத்தக்கது. இவர்கள் கி.பி. எட்டு ஒன்பதாம் நூற்றாண்டுகளில் இக்கோயிலை கட்டியுள்ளனர். இக்கோயில் இறைவனை பழங்கல்வெட்டுகள் சாணாயிரமுடையார் எனக் குறிப்பிடுகின்றன.

## தல வரலாறு

ராவண வதம் முடித்தபிறகு பிரம்மஹத்தி தோஷம் ராமரைப் பற்றியது. அதைப் போக்க ராமேஸ்வரத்தில் சமுத்திர மணலை எடுத்து ஈசனை லிங்க உருவில் குழைத்து நாள் தவறாது பூஜித்தார். கடல் அலைகள் பிரம்மஹத்தி தோஷத்தை தம்மோடு கரைத்துக் கொண்டன.



தோஷம் விடுபட்ட ராமர், சூரியனாக ஜொலித்தார். ஆயினும், பிரம்மஹத்தி தோஷத்தின் வீர்யம் புகை போன்று சுழன்று கொண்டிருந்தது. அகத்தியரை நாடினார். தீர்த்தமலை சென்று வந்தால் தோஷம் பரிபூரணமாக நீங்கும். கல்யாண காமாட்சி கலக்கம் தீர்ப்பாள், அகத்தியர் என்று வாக்கருளினார்.

அதேசமயம், குமார சம்பவம் நடைபெற வேண்டுமென தேவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். மன்மதன் தன் தூண்டுதலால் அது நிகழும் என்று சற்று கர்வம் கொண்டிருந்தான். ஈசனை தன் ஆளுமையில் கொண்டுவரத் துடித்தான். ஈசனை சூழ நினைத்தான். ஆனால் சிவனின் ஞானாக்னி மன்மதன் எனும் காமத்தை பொசுக்கியது. உடலற்றவனானதால் அனங்கன் என்று அழைக்கப்பட்டான். பார்வதி இச்செயலைக் கண்டு வருந்தினாள். மன்மத பாணமே தோற்றுவிட்டதால் தான் ஈசனுடன் இணைய இயலாது போய்விடுமோ என்று மனம் உடைந்தாள். பூவுலகில் தவம் செய்து ஈசனோடு மீண்டும் இணைய உறுதி கொண்டாள். தகடூரில் ஸ்ரீசக்ரம் அமைத்து மா தவத்தில் ஆழ்ந்தாள் அன்னை. ஈசனும் அந்த தவத்தில் கரைந்து தரிசனம் தந்து ஆட்கொண்டார். மன்மதனையும் உயிர்ப்பித்தார்.

மன்மதனைக் காத்த கல்யாண காமாட்சி போக காமாட்சியாக சக்தி பீடத்தின் மத்தியில் அமர்ந்து பேரருள் பெருக்கினாள்.

இந்தத் தலத்திற்குத்தான் ராமனையும் சென்றுவரச் சொல்லி, வசந்த நவராத்திரி பூஜை முறைகளையும் உபதேசித்தார் அகத்தியர். ராமர் சக்தி பீடத்தை நெருங்கியபோதே பிரம்மஹத்தி தோஷமானது முற்றிலுமாக மறைந்தது.

## மூன்று கோயில்கள்!

தகடூர் கோட்டைக் கோயிலுக்குள்ளே மூன்று தனிக்கோயில்களாக காட்சி தருபவை, மல்லிகார்ஜுனேசுவரர் சந்நதி, கல்யாண காமாட்சியம்மன் சந்நதி மற்றும் இன்று சித்தேசுவரர் என்று அழைக்கப்படும் சோமேசுவரர் சந்நதிகள் என மூன்று கோவில்கள் அமைந்துள்ளன.

## கோவில் அமைப்பு

கொடிமரம், பலிபீடம், நந்தி ஆகியவற்றைக் கடந்து மகாமண்டபத்தை அடைகிறோம். நான்கு வரிசைகளில் 16 தூண்களைக் கொண்டது அது. பாசுபதம் பெற்ற அர்ச்சுனன், சிவபக்த ஆஞ்சநேயர், சம்பந்தர் பெருமான் இப்படி ஒவ்வொரு தூணிலும், அழகிய சிற்பங்கள்.

கல்யாண காமாட்சி அம்பிகை உடனாகிய அருள்மிகு மல்லிகார்ஜுனேஸ்வரர் திருக்கோயில் பிராகாரத்துக்குள் வரிசையாக மூன்று பிரதான சந்நிதிகள் அமைந்துள்ளது.

சித்தலிங்கம் என வழங்கப்படும் 'காடுவெட்டி சித்தர்' சோமநாதர் சந்நிதி ஒரு தள விமானம்.

மல்லிகார்ஜுனர் எனப் போற்றப்படும் திருவேளாலீசர் சந்நிதி இருதள விமானம்.

இரண்டுக்கும் இடையே 50 அடிக்கும் மேலாக உயர்ந்து ஸ்ரீசக்ரமேடைமேல் மூன்றுதள விமானத்துடன், தன்னிகரில்லா பெருமையுடன் தகடூர் அன்னை கல்யாண காமாட்சி கோயில் கொண்டுள்ளாள்.

தென்கோடியில் வீரபத்திரர் சிலையைக் கடந்து சென்றால், நிருத்த மண்டபம். `ஐராவத

மண்டபம்' என்றும் இதனை அழைப்பர். பழமையும் புதுமையும் சேர்ந்து, அவற்றின் காலத்தை நிர்ணயிக்க முடியாத நிலை.

கருவறையையொட்டி அமைந்ததே நவரங்க மண்டபம். தெய்வீகக் கலைத்திறனும், கலாசாரப் பெருமையும் ஒன்றையொன்று மிஞ்சிடும் நிலை. நுளம்ப பல்லவர் காலத்துச் சிற்பிகளின் கைவண்ணம்!

கருவறையில், நான்கடி உயரத்தில் சிவலிங்கத் திருமேனியராக மூலவர் மல்லிகார்ஜுனேஸ்வரர் லிங்க வடிவில் அருள்பாலிக்கிறார். ஆவுடையார் சதுர பீடமாக உள்ளது.

சிவாகம முறையில் 36 தத்துவங்களுக்கும் 36 பட்டினங்களுடன் கூடியது. இயற்கை ஒளி, லிங்கத்தின் மீது பட்டுப் பிரதிபலிக்கிறது.

மூலவர் சந்நிதிக்கு முன்பு, மகா மண்டபத்திலுள்ள இரு தூண்களின்





அமைப்புகளும் நம் கவனத்தைக் கவரக்கூடியதாகும்.

தூணின் அடியில் ஒரு காகிதத்தை விட்டால் அது மறுபுறத்துக்கு வந்துவிடுகிறது.

ஒவ்வொரு தூணின் எடையும் இரண்டரை டன் இருக்கும். இவற்றை, தொங்கும் தூண்கள் என்றும் அழைக்கிறார்கள்.

இந்தத் தூண்களில் நாட்டியப் பெண்களின் நளினமான உருவங்கள் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன.

விதானத்தில் வட்ட வடிவமான அமைப்பில், அஷ்டதிக் பாலகர்களின் திருவுருவங்கள் அழகுற வடிவமைக்கப்பட்டுள்ளது.

நடுவில் ஊர்த்துவ தாண்டவமூர்த்தியும் அற்புதமாகக் காட்சியளிக்கிறார்.

மூலவரின் கருவறை வாயிலுள்ள எண்கர கஜலட்சுமியின் உருவம் அற்புதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

விநாயகரின் உருவம், அவரது சந்நிதிக்கு



மேலுள்ள சிறு விமானம் ஒரே கல்லில் வடிவமைக்கப்பட்டதாகும்.

காமாட்சியம்மன் கோயில், ஈஸ்வரன் கோயிலைக் காட்டிலும் உயரமான விமானத்தை உடையது. காமாட்சியம்மனை மையமாகக் கொண்டு இருபுறமும் மல்லிகாஜுனேஸ்வரர், சோமேசுவரர் ஆகிய இரு லிங்க சந்நதிகள் உள்ளன.

பதினெட்டுப் படிகளில் ஏறிச்சென்றால், அழகிய விமானத்துடன் நான்கு கால் மண்டபம். தாமரை மலரைப் போல 48 இதழ்கள், மூலைகள், 44 தளங்கள், 43 கோணங்கள் கொண்ட அந்தக் கருவறையை 18 யானைகளின் மத்தகங்கள் தாங்கி நிற்பது போன்று கலைநயமிக்க வடிவமைப்பு.

சோமசூத்திர பிரதட்சணம் போல, வலமிருந்து இடப்புறமாகச் சுற்றி வந்தால், அதிஷ்டானத்தின் அடிவரிசையிலே, ஓர் அடி உயரமும், இரண்டடி நீளமும் கொண்ட பலகைச் சிற்பங்களாக ராமாயண காதை காட்சிகள் அழகுற வடிக்கப்பட்டுள்ளன. மொத்தம் முப்பத்தைந்து சிற்பங்களில் முழு இராமயணக் கதையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது வியப்பில் ஆழ்த்தும் கலையம்சமாகும்.

ஈசனின் கருவறையை விட பெரியதாக அமைந்துள்ளது அன்னை காமாட்சியின் கருவறை. அவள் அழகும், கருணையும் எல்லையற்றவை. தங்கக் கவசம் சார்த்திய கோலத்தில் அன்னையைத் தரிசித்திட பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

பிற ஆலயங்களில் ஸ்ரீசக்கரம் அம்மனுக்கு முன்பாகவோ, கீழ்ப்பகுதியிலோ பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும். இக்கோவிலில், அம்மன் சந்நிதியே ஸ்ரீசக்கரத்தின்மீது நிறுவப்பட்டிருக்கிறது. சக்திபீடமான மேருவின்மேல் எழுந்துள்ளதால், இச்சந்நிதி உயரமாக அமைந்துள்ளது.

நான்கு கரங்களோடு, அபய வரத ஹஸ்த கோலம் கொண்டுள்ள அன்னை காமாட்சி, கருணை ததும்பும் தனது பார்வையினாலேயே நமது அத்தனை கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளும் அருட்கோலம் அது.

பதினெட்டுப் படிகள் ஏறி சாட்சியம் சொல்வதும், சத்தியப் பிரமாணம் செய்வதும் அந்த நாட்களில் வழக்கமாக இருந்ததாம். கல்யாண காமாட்சி முன்னே உள்ள `உலோகத்தினால் ஆன கிளி' ஒன்று அதற்கு சாட்சி. ஊர்ப் பஞ்சாயத்தில், காமாட்சியே கிளி வடிவில் பறந்து சென்று சாட்சி சொன்னாளாம்.

பிரதோஷ காலத்தில், சிவம் சக்தியுடன் ஐக்கியமாகி தம்மைத் தாமே வலம் வரும் வகையில் ஐக்கிய காமாட்சியைத் திருவலம் வருவது எந்தச் சிவாலயத்திலும் பார்த்திராத சிறப்பாகும்.



சற்று வித்தியாசமாக, வட்ட வடிவில் அமைந்த பலகைச் சிற்பமாக பைரவர் சிலையையும் இங்கு காணலாம்.

## ஸ்ரீ ராஜ துர்காம்பிகை

இத்தலத்தில் அருளும் ராஜதுர்க்கை 'சூலினி' எனப் போற்றப்படுகிறாள். தர்மர் இருபத்தேழு மூல மந்திரங்களால் வழிபட்ட மூர்த்தினி இவள்.

சங்கு சக்ரம் ஏந்தி மகிஷனை வதைக்கும் கோபரூபத்தில் இவள் இருந்தாலும் நாடிவரும் அன்பருக்கு நலங்கள் பல சேர்ப்பவள். செவ்வாய் தோஷம் போக்குபவள்.

ஒவ்வொரு தை மாதமும் சண்டிஹோமம் கொண்டருளுகிறாள் சூலினி. இங்கு ப்ரத்யங்கிரா தேவியும் சிறப்பாக வழிபடப்படுகிறாள்.

சூலினி ராஜ துர்காம்பிகை சூலம், சங்கு ஏந்தி மகிஷனை வதம் செய்யும் தோற்றத்தில் எருமைத் தலையும், மனித உடலும் கொண்ட மகிஷன் கத்தி, கேடயங்களுடன் கீழே விழுந்திருப்பது போலவும், மகிஷனின் கொம்பை ஒரு கரத்தில் பற்றியும், இடது காலால் மகிஷனின் கழுத்தை மிதித்தபடியும் சம்ஹாரத் தோற்றத்தில் அருள்புரியும் திருக்காட்சி மூலஸ்தான கருவரையில் கிழக்கு நோக்கி இருப்பது இந்தக் கோயிலின் சிறப்பாகும்.

'ராகுவை போல் கொடுப்பார் இல்லை"எனும் முதுமொழிபடி ராகு கிரக அதி தேவதை ஸ்ரீ துர்க்கையை ஸ்ரீ தர்மர் முதலானோர் வழிபட்டு, இழந்த நாடு முதல் அனைத்தையும் பெற்றுள்ளார்.

## சித்தேசுவரர்

மூன்று கோயில்களில், வடபுறம் அமைந்துள்ள சந்நதியே `சித்தேசுவரர்' என இன்று அழைக்கப்படும் சோமேசுவரர் சந்நதி. சந்திரனுக்கு அருள் செய்தவர். மனக்குழப்பம் நீங்க, உள்ளத் தெளிவு பெற, சோமேசுவரரை வழிபடுதல் பயன்தரும்.



இவை தவிர, கோஷ்ட தெய்வங்கள், சண்டிகேசுவரர், நவகிரகங்கள் எல்லாம் கோட்டை காமாட்சியம்மன் கோயிலில் உண்டு. வில்வ மரத் தடியில் நாகர் சிலைகளும், ரேணுகாதேவி சிலையும் உள்ளன.

சனத் குமார நதியைத் தவிர, மூன்று அழகிய திருக்குளங்கள் இருந்ததாம். அவற்றில் ஒன்று மட்டும் உருமாறி, பெயர் மாற்றத்துடன் ஒரு குறுகிய சந்தில் உள்ளது.

இங்குள்ள பைரவர் சந்நிதி விசேஷமானது. வாகனத்துடன், சூரிய சந்திரர் இருபுறமும் விளங்க, கோயிலின் குபேர பாகத்தில் எழுந்தருளியுள்ளார்.

## வேண்டுதல் - விழாக்கள்

காரண, காரணி, அதற்கான பலன் எனும் மூவகை பயன்களை அருளும் இக்கோயிலில் உள்ள சூலினி துர்க்கை அம்மனின் முழு உருவத்தை சந்தனக் காப்பு தோற்றத்தில் வருடத்தில் ஆடி 3ம் செவ்வாய்க்கிழமை மாலை 4.35 முதல் இரவு 8.30 வரை சந்தனக் காப்பு அலங்காரத்தில் தரிசிக்கலாம்.

காமாட்சியம்மன் சந்நிதியில் ஞாயிறு, செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் ராகுகால வழிபாடு நடக்கிறது. சண்டி ஹோமம், திருவிளக்கு பூஜை, நிசிபூஜை ஆகியவை நடைபெறுகின்றன. பௌர்ணமியில் காமாட்சிக்கும், அமாவாசையில் ராஜதுர்கைக்கும் சிறப்பு வழிபாடு நடக்கிறது. அமாவாசைகளில், மாலை 5 முதல் 6.30 மணி வரையிலான 18-ஆம் படி வழிபாட்டை பெண்கள் மட்டுமே செய்கின்றனர் என்பது இந்தக் கோயிலின் தனிச் சிறப்பாகும்.

கல்யாண காமாட்சி கோயிலில், திருமணத் தடை அகல்வதற்காக ஆண்கள் மற்றும் பெண்களுக்குத் தேய்பிறை அஷ்டமியில் காலை 10 முதல் மதியம் 2.30 மணி வரை கல்யாண மாலை பூஜை செய்து, கால பைரவர் சந்நிதியில் கந்தர்வ ராஜ கல்யாண மாலை தருகிறார்கள்.

தேய்பிறை அஷ்டமி வேளையில் வேண்டுதல் நிறைவுற்றவர்களுக்காகவும், மன அமைதி பெறவும் ஸ்ரீசரபேஸ்வர, ஸ்ரீப்ரத்யங்கரா தேவி ஸ்வர்ணாகர்ஷண பைரவ ஹோமம் 5 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறுகிறது.

## அமைவிடம்:

தர்மபுரி கோட்டை கோயில் எனப் புகழ் பெற்ற இத்தலம் தர்மபுரி பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

## திங்கள் ஒரு திருக்குறள்




புல்லறிவாண்மை

(சிற்றறிவினர் தம்மைப் பெரிதாக மதித்தல்)

849



காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டான்ஆம் தான்கண்ட வாறு.

தான் அறியான், ஆனால் அறிந்தது போலக் காட்டுவான். அறியாத அவன், அறிந்தவர் கூறினால், ஏற்றுக்கொள்ளாமல் , தான் அறிந்ததே உண்மை எனவும் வாதிடுவான்.

கருத்தோவியம்: **சிவன்மலை பித்தன் நடராசன்**

# சாதனை மாணவிக்கு வாழ்த்துக்கள்

**2019-2020 +2 பொதுத்தேர்வில்**

**விருத்தாச்சலம் கல்வி மாவட்டத்தில் முதலிடம்**
**கடலூர் மாவட்டத்தில் இரண்டாம் இடம்**
**மாநிலத்தில் சிறப்பிடம்**

## R.பிரியங்கா

பெரியார்நகர், காட்டுமன்னார்கோயில்



## சாதனை

**588/600**

**100/100** பொருளியல் மற்றும் கணக்குப்பதிவியல் பாடத்தில்




| | |
|---|---|
| தமிழ் | 91 |
| ஆங்கிலம் | 99 |
| பொருளியல் | 100 |
| வணிகவியல் | 99 |
| கணக்குப்பதிவியல் | 100 |
| கணினி பயன்பாடு | 99 |



வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!! வாழ்த்துக்கள்!!!

**செங்குந்த மகாஜன சங்கம்**
**செங்குந்தர் இளைஞர் நற்பணி மன்றம்**
உடையார்குடி, கடலூர் மாவட்டம்.

PREM

# மழலைகளுக்கு பிறந்தநாள் வாழ்த்து

ஜூலை 31

**V. ஹர்ஷா**

தந்தை: **வெற்றிச் செல்வன்**

தாய்: **சாந்தி**

காஞ்சிபுரம்.



## சென்ற மாதங்களில் மலர்ந்த செங்குந்த மழலைகள்

கடலூர் மாவட்ட செயற்குழு உறுப்பினரும், இளைஞரணி துணை அமைப்பாளருமான **திரு. அ.அறிவழகன் - திருமதி அ.உமா** தம்பதியருக்கு 09.07.2020 வியாழக்கிழமை அன்று ஆண் குழந்தை பிறந்துள்ளது.

ஆந்திர மாநில செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவரும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் துணைத் தலைவருமாகிய ஏகாம்பரகுப்பம் **திரு. P.G.செல்வராஜ் - திருமதி P.S.ஜெயந்தி** ஆகியோரின் மகன் **Dr. S.ஜெயக்குமார் - Dr. P.பிரியங்கா** தம்பதியருக்கு 12-07-2020 அன்று ஆண் குழந்தை பிறந்துள்ளது.

குழந்தைகள் நீள் ஆயுள், நிறை செல்வம், உயர் புகழ், மெய்ஞானம் பெற்று சிறந்து வாழ தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் வாழ்த்துகிறோம்.



## வாழ்த்துக்கள்

31.07.2020 அன்று மணிவிழா கொண்டாடும் காஞ்சிபுரம் மாவட்ட தலைமை சங்க செயற்குழு உறுப்பினர் **Ln.D. தணிகாசலம் செங்குந்தர் - திருமதி Ln.T. தயாநிதி** ஆகியோருக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.




02.07.2020 வியாழக்கிழமை அன்று திருப்பூரில், திருப்பூர் தாலுக்கா செங்குந்த மகாஜன சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களின் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தெ.செ.ம.சங்கத்தின் தலைவர் கைத்தறிக் கதிரவன் திரு. K.P.K.செல்வராஜ் அவர்கள் தலைமையிலும், தாலுக்கா செயலாளர் மணமாலை திரு.G.ஸ்ரீனிவாசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

தமிழகம் முழுவதும் உள்ள செங்குந்தர் திருமண மையங்களை "செங்குந்தர் திருமணத் தகவல் மையம்" என்ற பெயரில் ஒன்றிணைக்கப்பட்டு 100 திருமணத் தகவல் மையங்கள் நடத்தலாம் என தீர்மானிக்கப்பட்டு, அதற்கு முதன்முதலாக திருப்பூர் தாலுக்கா செங்குந்த மகாஜன சங்கத்திற்கு தெ.செ.ம.சங்கத்தின் தலைவர் திரு.K.P.K.செல்வராஜ் அவர்கள் சங்கத்தின் செயலாளர் மணமாலை திரு. G.ஸ்ரீனிவாசன் அவர்களிடம் கம்பியூட்டர் மற்றும் கலர் பிரிண்டர் வழங்கி தொடங்கி வைத்தார்.

கூட்டத்தில் தலைவர் A.K.முருகேசன், துணைத்தலைவர் P.அருணாசலம், துணைத்தலைவர் S.கார்த்திகேயன், துணைச் செயலாளர் V.ராஜராஜன், பொருளாளர் வேணி மா.செல்வராஜ், S.பிரனேஷ், C.ஞானகிருஷ்ணன், S.காளிமுத்து, N.S.ஸ்ரீனிவாசன், G.மோகன்குமார், S.பிரகாஷ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.

# நன்றி



தலைமைச் சங்கத்தின் கொரோனா துயர் துடைப்பு நிவாரண நிதிக்கு சென்னை ஆடிட்டர் திரு. **C.N.சிவக்குமார்** அவர்கள் ரூ.10,000/- நன்கொடை வழங்கியமைக்கு தெ.செ.ம.சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.




# வள்ளல் சபாபதி பள்ளியில் கர்மவீரர் காமராஜர் 118வது பிறந்தநாள்

15-07-2020 புதன்கிழமை அன்று வள்ளல் சபாபதி மெட்ரிக் மேனிலைப்பள்ளியில் கர்மவீரர் காமராஜர் அவர்களின் 118வது பிறந்தநாள் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட்டது. தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பொது செயலாளர் திரு.R.P.குமரகுருபரன் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்று, தமிழகத்தில் 9 ஆண்டுகள் முதல்வராக, ஏழை, எளிய மக்களின் குழந்தைகளுக்கு கல்வி அறிவு அளித்து, வயிற்றுப் பசி போக்க மதிய உணவு கொண்டு வந்த பண்பாளர் காமராஜர் அவர்களின் புகழை வெகுவாக விவரித்து பேசினார். பள்ளியின் முதல்வர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவிற்கு, சென்னை பெருநகர் செங்குந்தர் சங்க தலைவர் திரு. D.ஆறுமுகம், பொருளாளர் S.ரமேஷ் துணை பொது செயலாளர் திரு. K.சுந்தரமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். ஆசிரியைகள் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை திருமதி. ரமா மற்றும் ஜெயசித்ரா ஆகியோர் செய்திருந்தனர். விழாவிற்கு அனுமதி அளித்த மாநில தலைவர் திரு K.P.K. செல்வராஜ், பொருளாளர் திரு. R.காந்தி, மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்களுக்கு கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலை பள்ளியில் 2019 – 20ம் ஆண்டு
+1 மற்றும் +2 தேர்வில் படித்த அனைத்து மாணவர்களும் தேர்ச்சி
பெற்றமைக்கு அயராது பாடுபட்ட முதல்வர், ஆசிரியர்கள்,
பணியாளர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் பள்ளியின் சார்பாகவும்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த
வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் 100%
சதவிகித தேர்ச்சியில் முதல் மூன்று நிலைகளை பிடித்த

**+ 2** மாணவியர்

**R. திவ்யா - 557/600 N. சுபித்ரா - 454/600 J. ரம்யா - 441/600**

**+ 1** மாணவ - மாணவியர்

**R. மகேஷ் - 457/600 R. தனுஷ் - 367/600 V.G.பூஜா - 356/600**

மாணவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

# திருமணத் தகவல் மையங்கள் கவனத்திற்கு

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு உட்பட்ட மாவட்ட மற்றும் கிளைச் சங்கங்கள் நடத்தும் திருமணத் தகவல் மையங்கள் தொடர்பான விபரங்களை (முழு முகவரி, தொலைபேசி எண், தொடர்பு கொள்ளவேண்டிய நபர்) 15-08-2020க்குள் sengunthamithiran@gmail.com, senguntharpresidentkpk@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

## வாரியார் அமுதமொழி

தாய் தந்தையருக்குப் பணிவிடை செய்வதைத் தலையாய கடமையாகக் கருதுபவனிடத்திலும், ஒருமைப்பட்ட மனத்துடன் தன் கணவனுக்குப் பணிவிடை செய்யும் மனைவியிடத்திலும், உண்மையே பேசி நாணயமாக நடக்கும் வியாபாரி இடத்திலும், புலனடக்கம் உள்ளவனிடத்திலும் இறைவன் இருக்கிறான்.



## திருமண பதிவுக் கட்டணம்

சென்னை தலைமைச் சங்க அலுவலகத்தில் திருமணத் தகவல் மையத்தில் 1 வருட ஜாதக பதிவுக் கட்டணம் - ரூ.500/-


# செங்குந்த மித்திரன்

RNI No. TNTAM/2000/03982


செங்குந்த மித்திரன் சீரார் இதழ்வாழி
எங்குந்தன் பேர்பரப்பும் ஈடில்லாப் - பொங்குந்தன்
கூத்தர் குலம் வாழி! கோலத் தமிழ் வாழி!
ஏத்துநலம் வாழி இசைந்து

\- வாரியார் சுவாமிகள்


ஜூலை 2020 மலர்: 20 இதழ்: 7

ஆசிரியர்:

**K.P.K.செல்வராஜ்**


## சந்தா விபரம்

தனி இதழ் : ரூ. 15/-

## 1-04-2019 முதல் புதிய விளம்பரக் கட்டண விபரம்

**கலர்**

| | | | |
|---|---|---|---|
| முழுப்பக்கம் | : | ரூ. | 7,000 |
| பின் அட்டை | : | ரூ. | 10,000 |
| நடுப்பக்கம் | : | ரூ. | 18,000 |

**கறுப்பு - வெள்ளை**

| | | | |
|---|---|---|---|
| அரைப்பக்கம் | : | ரூ. | 2,000 |
| முழுப்பக்கம் | : | ரூ. | 3,500 |


**தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்**

South Indian Senguntha Mahajana Sangam

எண்.58, (பழைய எண்.89),
அரண்மனைக்காரன் தெரு,
சென்னை–600001.
அலுவலகம்: 044 – 48653014, 25241431
E-mail: sengunthamithiran@gmail.com
http://www.sengunthamithiran.in



# ஆகஸ்டு மாதத்தின் அற்புதங்கள்!

ஆகஸ்ட் 7 தேசிய கைத்தறி தினம்

ஆகஸ்ட் 14 வேதாத்திரி மகரிஷி பிறந்த தினம்

ஆகஸ்ட் 25 திருமுருக கிருபானந்த சுவாமிகள் அவதார தினம்





ஒவ்வொருமா தமும்மண்ணில் ஒளிரும் ஆனால்
உன்னதத்தில் ஆகஸ்டு உயர்ந்த மாதம்,
கவ்வுகின்ற இருளனைத்தும் கழிக்க நாட்டில்
கவினொளியைத் தருகின்ற கதிரின் மாதம்,
தவ்வுகின்ற உயிரனைத்தும் தவழ்ந்து வந்து
தாரணியில் செழித்தோங்க தர்மம் ஏகும்,
பவ்வியமாய் அடிதொழவே பரமன் பாதம்
பிணிபோக்கி நலம்பெருக்கும் புனித மாதம்!

தானத்தை வலியுறுத்தி தகைமை சேர்க்க
தன்னலத்தைத் துறந்துவிட்டு தரணி யெங்கும்,
மானத்தைக் காப்பதற்கு மனமு வந்த
மாண்பான கைத்தறிக்கு மகிமை செய்ய,
ஞானத்தில் இம்மாதம் ஏழாம் நாளில்
எழில்பூக்க இறைநோக்க இன்பம் நல்க,
கானத்தின் இசையமுதின் களிப்பு ஓங்க
காக்கின்ற நெசவாளர் தினமாய் வெல்க!

மனவளத்தைப் பெருக்குதற்கு மண்ணில் வந்து
மனிதவள மேம்பாட்டின் மகத்து வத்தை,
நனவினிலே நடப்பதற்கு நாளும் ஏந்தி
நற்கருத்தை விதைத்துவிட்டு நலமாய்க் காத்து,
தனம்மட்டும் வாழ்வுக்குத் தகுதி இல்லை
தளிருடலை வளர்ப்பதற்குத் தியானம் சொன்ன,
குணவானாய் இவ்வுலகைக் காக்க என்றும்
குலவிளக்கு மகரிஷியைக் கொடுத்த மாதம்!

விருப்புற்று மாந்தர்தம் வினையைப் போக்க
வேதமுத லானவனை வேண்டிக் கொள்ள ,
பொறுப்புமிக்க அருளுரையில் புனிதம் காத்து
பூவுலகின் அருட்செல்வர் புகழே பூக்க
அறுபத்து நான்காகி அகிலம் தன்னில்
அருள்நிறைந்த நாயனாராய் அன்பின் வள்ளல்
திருமுருகக் கிருபானந் தவாரி யாராய்
தடம்பதிக்க இம்மாதம் தந்தார் வாழ்க !

கவிஞர் அ.முத்துசாமி, தாராமங்கலம்.

# VALLAL SABAPATHY MATRIC HR. SEC. SCHOOL

# 25, Harrington Road, (Behind Pachaiyappa's College), Chennai - 30.

## ADMISSION OPEN

## 100% RESULT IN 12TH STANDARD BOARD EXAMINATION 2019-2020



DIVYA R – 557/600



SUBITHRA N – 454/600



RAMYA J – 441/600

**COURSES OFFERED : Pre.Kg to IX and XI Std**

**SALIENT FEATURES :**

- Van Facilities available
- Best Library
- Well Equipped Computer Labs
- Sports, Yoga facilities available
- 25% RTE Admission available for LKG

*For Admission Please Contact :*

**044 - 2668 0482 / 044 - 42957999**

Email : vallalsabapathy@yahoo.in



# கருத்து சுதந்திரப் போர்வைக்குள் ஒளிந்து கந்தனைப் பழித்த மூடர் கூட்டம்

## கறுப்பர் கூட்டத்தை கைது செய் – தடை செய்!

**22-07-2020 அன்று யூடியூப் சேனலில் தெ.செ.ம. சங்கத் தலைவர் K.P.K.செல்வராஜ் அவர்கள் வெளியிட்ட கண்டன உரை.**

தமிழ் மக்களின் கடவுளாகவும், செங்குந்த மக்களின் குலக்கடவுளாகவும் விளங்குகின்ற முருகப்பெருமானைப் போற்றி பாடப் பெற்ற பாடல்தான் கந்த சஷ்டி கவசம் என்னும் ஒரு அரு மருந்து தரும் தெய்வீகப்பாடல். அந்த பாடலின் உட்கருத்தை முழுமையாக அறியாமல் மேலோட்டமாக எடுத்து ஆபாசமாக விமர்சனம் செய்த கறுப்பர் கூட்டத்தை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் தலைவர் K.P.K.செல்வராஜ் ஆகிய நான் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குன்றுதோறும் வீற்றிருக்கும் குந்தரின் கடவுளாம் கந்தக் கடவுளின் ஆயுதமான, அன்னை பார்வதி தேவி தந்த வேலை ஆபாசமாக விமர்சனம் செய்து கறுப்பர் கூட்டம் என்ற பெயரில் சமூக விரோத கும்பல் முருக பெருமானையும், கந்த சஷ்டி கவசத்தையும் இழிவுபடுத்தி வீடியோ வெளியிட்டு உள்ளனர். அவர்களின் நோக்கம் அமைதியாக உள்ள இந்து தமிழ் மக்களிடம் விரோதத்தை தூண்டிவிட்டு மத கலவரம் உருவாக்கும் நோக்கத்தில் உள்ளது.

ஆன்மீக அடியார்களுக்கு மட்டுமின்றி அடித்தட்டு மக்களுக்கும் அன்றாட வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒன்றாய் செவிவழியாக நுழைந்து இரத்தத்தில் ஊறியது இந்த கந்த சஷ்டி கவசம். அது வெறும் பாடலன்று, அதில் இருக்கும் ஒவ்வொரு வரிகளும் மந்திரத்தன்மை அடங்கியது .

ஒரு மனிதனுக்கு ஏற்படும் துன்பங்கள் மற்றும் நோய்கள் அனைத்தையும் குறிப்பிட்டு அவற்றை தன்னம்பிக்கையோடு முழுமையாக நீக்க உதவும் பெருமைமிக்க கருவியாக திகழ்வது கந்த சஷ்டி கவசம் என்பதை அனுபவத்தினால் மட்டுமே உணர முடியும். கந்த சஷ்டி கவசத்தை தொடர்ந்து பாடுவோருக்கு நோய்கள் அண்டாது. மனம் வாடாது, குறைவின்றி பதினாறு பேறுகளும் பெற்று நீண்ட வாழ்வு வாழ்வார்கள்.

இந்து தர்மத்திற்கும் சைவ பெருந்தகைகளுக்கும் முருகன் மீது பக்தி வைத்திருக்கும் அனைவருக்குமே கந்த சஷ்டி கவசம் மீது தனி பிடிப்பு உண்டு. தலைக்கவசம், முகக்கவசம் போல இதுவும் உயிர்காக்கும் கவசம் தான். இது முருக கவசம் உயிர் காக்கும் கவசம். இதைப்பற்றி அவதூறு பேசியிருக்கிறது கறுப்பர் கூட்டம் என்ற போர்வையில் உலாவிக்கொண்டிருக்கும் மூடர் கூட்டம்.

கந்த சஷ்டி கவசம் உருவான கதையை புரிந்துகொள்ள வேண்டும். ஸ்ரீ பாலன் தேவராய

சுவாமிகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. இன்று கொரோனா போல அன்று அந்த நோய்... பல இடங்களில் வைத்தியம் செய்தார். ஆனால் குணமாகவில்லை. மனம் வெறுத்து திருச்செந்தூர் சென்று முருகன் திருவடிகளை கெட்டியாக பற்றிக்கொண்டு முருகா நீயே மருந்து என்றார்.

*அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்*
*வெஞ்சமரில் அஞ்சலெனவேல் தோன்றும் – நெஞ்சில்*
*ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்*
*முருகா என்று ஓதுவார் முன்...*

என்ற புகழுக்குரிய செந்தூர் முருகனை பற்றிக்கொண்டார். அப்போது முருகன்



காட்சியளித்தார். 'நீ பதிகம்பாடு நான் நோய் தீர்க்கிறேன்' என முருகன் சொன்னார். மகிழ்ந்த தேவராயர் சுற்றிலும் பார்த்தார். அவருக்கு இருந்தது வயிற்று நோய் மட்டுமே ஆனால் அங்கே தலைவலி, நுரையீரல் பாதிப்பு, வெண் குஷ்டம், கல்லீரல் பாதிப்பு, மண்ணீரல் பாதிப்பு என பல நோய்களுடன் பலர் இருந்தனர்.

இதனால் தான் பாடும் பதிகம் அனைத்து நோய்களையும் தீர்ப்பதாக இருக்கட்டும் என நினைத்த தேவராயர் தந்தது தான் இந்த கந்த சஷ்டி கவசம். மிக இனிமையான கீதத்தை சென்னிமலை திருக்கோயிலில் அரங்கேற்றம் செய்து உலகிற்கு தந்துள்ளார். அதை கேட்டாலே உள்ளம் குளிர்ந்து விடும். சாதாரண மானிடர்களால் சொல்லமுடியாத மந்திரங்களை தேவராய சுவாமிகள் அனைவருக்கும் பயனடையுமாறு எளிமையாக தொகுத்த ஒரு அற்புத பதிவே கந்த சஷ்டி கவசம்.

எந்த இடத்திலும் எந்த சூழலிலும் ஒலிபரப்பப்பட்டாலும் அனைவராலும் ரசிக்க முடிகிறது என்றால் அதற்கு இன்னிசையுடன் கூடிய நேர்மறையான அதிர்வுகள் அடங்கியிருப்பதுதான் காரணம்.

கருத்து சுதந்திரம் என்கின்ற போர்வையை போர்த்திக் கொண்டு அடுத்தவரின் இறை நம்பிக்கையில் கை வைக்கும் வேலைகளைச் செய்யாதீர்கள்.

முருகப் பெருமானின் மதிப்புமிக்க தளபதி வீரபாகுவின் வழித்தோன்றலாகிய செங்குந்த முதலியார் சமுதாயத்தினர்கள் என்றும் ஆன்மிக மற்றும் அற வழியில் அடுத்தவர்கள் மனதை புண்படுத்தா வண்ணம் இருந்து வருகின்றோம். ஆனால் இது போன்ற பிறர் மனம் வருத்தப்படும் ஆபாசக் கருத்துக்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சமூக வலைதளங்களில் வெளியிட்ட சமூக விரோதிகளை குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்து மத வழிபாட்டை கேலி செய்து நம்பிக்கை மற்றும் உணர்வுகளை வேதனைப்படுத்தி சமூகத்தில் பிரிவினைகளைத் தூண்டும் இவர்களையும், இந்த சமூக விரோத செயலின் பின்புலத்தில் உள்ள அனைவரின் மீதும் கடும் நடவடிக்கை எடுத்து அரசு அதிகபட்ச தண்டனையை அளித்து வரும் காலங்களில் இது போன்ற தவறுகள் மீண்டும் நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றோம்.

**27.07.2020 அன்று சென்னை மாநகர காவல் ஆணையர் மகேஷ்குமார் அகர்வால் உத்தரவின்பேரில், கறுப்பர் கூட்டம் சுரேந்திரன் , செந்தில்வாசன் ஆகியோர் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

# SENGUNTHAR ENGINEERING COLLEGE
(AUTONOMOUS)

Estd. 2001

ISO 9001 REGISTERED

Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai
Accredited by NAAC with "A" Grade & Recognized Under Section 2(f) and 12(B) of UGC Act, 1956
TIRUCHENGODE (Po.), NAMAKKAL - 637 205,
TAMIL NADU, INDIA.

**B.E.** CIVIL | CSE* ECE* | EEE* MECH*

*Permanently Affiliated

**MBA**

**Ph.D** CSE | ECE

**TNEA 2617**

**M.E.** Structural Engg. CSE | VLSI DESIGN

# SENGUNTHAR COLLEGE OF ENGINEERING

Estd. 2007

(Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai)
An ISO 2001 : 2015 Certified Institution
TIRUCHENGODE - 637 205, NAMAKKAL (Dt)

**B.E.** MEDICAL ELECTRONICS ENGG.*

*Permanently Affiliated

ROBOTICS & AUTOMATION

**B.Tech.** INFORMATION TECHNOLOGY

**TNEA 2629**

**M.E.** COMM & NETWORKING | MEDICAL ELECTRONICS

# SENGHUNDHAR COLLEGE OF PHARMACY

SENGHUNDHAR COLLEGE OF PHARMACY

Estd. 2017

Approved by AICTE, New Delhi & Pharmacy Council of India (PCI)
Affiliated to The Tamil Nadu Dr.M.G.R. Medical University, Chennai
TIRUCHENGODE - 637 205, NAMAKKAL (Dt)



**D.PHARM.** | **B.PHARM.**
Lateral Entry



For Admission Contact

**Phone : 04288 - 254716, 255716, 253716, 255727**

**Cell : 93674 74849, 93600 53352**

Log on : www.scteng.co.in | www.scew.org | www.scpt.co.in




அரசின் 144 தடை உத்தரவை முன்னிட்டு நெசவாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதால் அரியலூர் மாவட்டத்தில் உள்ள நெசவாளர்களுக்கு அரிசி மற்றும் மளிகை பொருட்கள் 8.7.2020 அன்று பொன்பரப்பி கிளைசங்கத்திற்கும் 09.07.2020 அன்று ஜெயங்கொண்டம் நகர சங்கத்திற்கும் மாவட்ட சங்க தலைவர் A.V.M.சாமிநாதன் அவர்களின் வழிகாட்டுதலின்படி கொடுக்கப்பட்டது.இதற்கான உதவி ரூ 25000 K.R.V.சிவகுருநாதன் (மணி) அவர்கள் வழங்கியதோடு அவர்களே நேரில் வந்து கொடுத்து சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலர் து.ப.புனிதம் தலைமை சங்க செயற்குழு உறுப்பினர் S.K.செல்வம் வழக்கறிஞர் S.S.R.சரவணவேல் பொருளாளர் சி.கார்த்திகேயன் மற்றும் பொன்பரப்பி, வாரியங்காவல், மருதூர், ஜெயங்கொண்டம். கிளைச் சங்கத்தினர்கள் கலந்து கொண்டனர்.




விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் பகுதியைச் சார்ந்த தலைமை சங்க செயற்குழு உறுப்பினர் R.சர்வேஷ்குமார் செங்குந்தர் மற்றும் அவரது குடும்பத்தார் ஹோமியோபதி நோய் எதிர்ப்பு சக்தி மருந்தாகிய ஆர்சனிக் ஆல்பம் 30C என்ற மாத்திரைகள் முதற்கட்டமாக சுமார் 1600 குடும்பங்களைச் சார்ந்த சுமார் 7000 நபர்கள் வழங்கினார்கள்.

# மாடர்ன் தியேட்டர்ஸ்
# டி.ஆர்.சுந்தரம்



வெள்ளையர் ஆட்சியில் மக்களின் அபிமானமாக விளங்கிய சினிமாவிற்கும் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. போர் சமயங்களில், பிரிட்டிஷாரின் திறமையை வெளிப்படுத்தும் படங்கள் எடுக்கப்படவேண்டும் என கடுமையான விதிகள் அமல்படுத்தப்பட்ட வரலாறும் தமிழ் சினிமாக்களுக்கு உண்டு. பிரிட்டிஷாரின் கெடுபிடிகளை மீறி, சுதந்திர உணர்வை வளர்த்தன சில சினிமாக்கள். சுதந்திர வீரர்களை தீரர்களாக சித்தரித்து, அவர்கள் தம் படைப்புகளை மறைமுகமாக திணித்து தங்கள் தேச உணர்வை வெளிப்படுத்தின அத்தகைய சினிமாக்கள்.

இந்த நேரத்தில் சுதந்திரத்திற்காக போராடிய தமிழக தளகர்த்தகர்களில் ஒருவரும், மாபெரும் கவியுமான பாரதியின் எழுச்சிமிகு பாடல் ஒன்றை, தம் படத்தில் துணிச்சலுடன் முதன்முறையாக பயன்படுத்தினார். ஒரு தயாரிப்பாளர். அவர், தமிழ்த் திரையுலகில் மறக்கவியலா படங்களை தந்து, மக்களிடம் நற்பெயர் பெற்ற மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபரான டி.ஆர்.எஸ் என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட டி. ஆர். சுந்தரம்.

### சினிமா வளர்த்த சீமான் டி.ஆர்.சுந்தரம்

சேலம் மாவட்டம் திருச்செங்கோட்டில் 1907-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16-ஆம் தேதி பிறந்தார் டி.ஆர்.சுந்தரம். தந்தை ராமலிங்க முதலியார். திருச்செங்கோடு பகுதியில் பருத்தி நூல் விற்பனையில் முக்கிய பிரமுகர். பள்ளிப்படிப்பை முடித்து, இளைஞர் வயதை எட்டிய தன் மகன் சுந்தரத்தை, நெசவுத்தொழிலின் புதிய தொழில் நுட்பங்களை அறிந்துகொள்ள, 1930 ஆம் ஆண்டு பிரிட்டனுக்கு அனுப்பினார் ராமலிங்கம்.

பிரிட்டனில் லீட்ஸ் (Leeds) பல்கலைக் கழகத்தில், பருத்தி நூலின் மீது சாயம் ஏற்றும் புதிய தொழில் நுட்பத்தை பயின்று, பட்டம் பெற்றார் சுந்தரம். பிரிட்டனில் ஆங்கில பிரபு ஒருவர் சுந்தரத்திற்கு நண்பரானார்.

அவரது வீட்டிற்கு அடிக்கடி செல்ல நேர்ந்த சுந்தரம், பிரபுவின் மகள் கிளாடிஸ் மீது காதல் கொண்டார். ஆரம்பத்தில் எதிர்த்த அந்த ஆங்கிலேய நண்பர், பின்னர் சுந்தரத்தின் காதலுக்கு பச்சைக்கொடி காட்டினார். கிளாடிஸ்ஸுடன் 1933 ல் தாய்நாடு திரும்பிய சுந்தரம், தனது காதல் மனைவியை ஏற்காடு மலைவாசஸ்தலத்தில் குடியமர்த்தினார்.

வெளிநாடு சென்றுவந்ததிலிருந்து சுந்தரம், தனது மூதாதையினரின் தொழிலை தொடர்வதில்

நாட்டமில்லாதவராக இருந்தார். அவரது கவனம், அப்போது மக்களிடையே எழுச்சிபெற்றுவந்த சினிமாவின் மீது திரும்பியது. 1934- ல் சேலம் நகரத்தில் அப்பொழுது 'ஏஞ்சல் பிலிம்ஸ்' என்ற கம்பெனி, சினிமா தயாரிப்பில் ஈடுபட்டிருந்தது. அதன் உரிமையாளர்களான சுப்பராய முதலியார், வேலாயுதம் பிள்ளை ஆகியோருடன் ஏஞ்சல் பிலிம்ஸில் பங்குதாரரானார் டி.ஆர்.சுந்தரம்.

புதிய நிறுவனத்தின் சார்பில் கல்கத்தா சென்று ஐந்து பேசும் படங்களை தயாரித்தார். படத் தயாரிப்பிற்காக கல்கத்தா, மும்பை போன்ற நகரங்களுக்கு செல்வதில் நேர்ந்த சங்கடங்களையும், வீண் தாமதத்தையும் மனதிற்கொண்டு சேலத்திலேயே ஒரு ஸ்டுடியோவை நிர்மாணிக்க முடிவு செய்த டி.ஆர். சுந்தரம், சேலத்திலிருந்து ஏற்காடு செல்லும் பாதையில் மலையடி வாரத்தில், சுமார் 10 ஏக்கர் புன்செய் நிலத்தை விலைக்கு வாங்கி 1936 ல் புதிய ஸ்டுடியோவை நிர்மாணித்தார்.

இந்த ஸ்டுடியோவில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, சிங்களம், ஆங்கிலம் இப்படிப் பல மொழிகளில் படங்கள் தயாரிக்கப்பட்டன. இது உலக அளவில் ஒரு சாதனை. இந்த ஸ்டுடியோவில் இதுவரை 118 படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நம் நாட்டில் இது மகத்தான வெற்றியின் அடையாளம்.

'மார்டர்ன் தியேட்டர்ஸ்' என்ற பெயரில் கம்பீரமாக எழுந்து நின்ற அந்த ஸ்டுடியோவை, 1936 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 ஆம் தேதி, அப்போதைய சேலம் மாவட்ட கலெக்டர் ராமமூர்த்தி திறந்துவைத்தார். தன் சொந்த ஸ்டுடியோவில் 1937 ஆம் ஆண்டு, தனது முதல் படமான சதி அகல்யா வின் படப்பிடிப்பை தயாரித்தார். அந்நாளைய ரசிகர்களை கிறங்கடித்த சிங்களத்து குயில், தமிழ் சினிமாவின் முதற் கவர்ச்சி கன்னி எனப்பட்ட தவமணி தேவி, அகல்யாவாக நடித்தார்.

ஆங்கில வீரதீர சாகசப் படங்களை




விரும்பிப் பார்க்கும் சுந்தரத்திற்கு தமிழகத்தில் 'ஸ்டண்ட் படங்கள்" தயாரிக்க விருப்பமாக இருந்தது. இதற்கென ஜெர்மனி யிலிருந்து வாக்கர் (Walker) மற்றும் (Baez) 'பேய்ஸ்' என்ற இரண்டு ஒளிப்பதி வாளர்களை தனது ஸ்டுடியோவிற்கு வரவழைத்தார். இவர்களது ஒளிப்பதிவில் புதிய தொழில் நுட்பங்களில் தேர்ந்த அவர்களைக் கொண்டு, தமிழின் முதல் 'ஸ்டண்ட் படமான மாயா மாயவன் வெளியிடப்பட்டது.

வாக்கரின் திறமையான ஒளிப்பதிவில் உத்தமபுத்திரன் படத்தில் இரட்டை வேடக் காட்சிகள் அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது.

ஒளிப்பதிவாளர் பேஸ்ஸ் அவர்களின் டிரிக் ஷாட் திறமையை சிவலிங்க சாக்ஷி படத்தில் காணலாம்.

தமிழ்த்திரையுலகின் ஆரம்ப கால சூப்பர் ஸ்டார்களில் ஒருவரான பி.யு.சின்னப்பாவை வைத்து, பிரெஞ்சு எழுத்தாளர் 'அலெக்ஸாண்டர் தூய்மா' என்பவர் எழுதிய Mar in the Iron mask என்ற நாவலைத் தழுவி 'உத்தமபுத்திரன்' என்ற படத்தை சுந்தரம் டைரக்ட் செய்தார். இப்படத்தில் சின்னப்பாவிற்கு இரட்டை வேடம். இப்படத்தில்தான் பாரதியாரின் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே...' என்ற பாடலை தன் சொந்தக் குரலில் சின்னப்பா பாடினார். தமிழ்த் திரை வரலாற்றிலேயே முதன் முறையாக பாரதியாரின் பாடல் இடம் பெற்றது




இப்படத்தில்தான். இந்த புகழுக்குரியவர் டி.ஆர்.எஸ்.

24.10-1940ல் வெளியான உத்தமபுத்திரன் பெரும் வெற்றி பெற்றது. உத்தமபுத்திரனை தொடர்ந்து, சுந்தரம் எடுத்த தமிழ்ப் படங்கள் அவ்வளவாக வெற்றி பெறவில்லை. ஆகவே உத்தமபுத்திரனுக்குப் பிறகு மற்றொரு வெற்றிப் படத்தை தர வேண்டிய கட்டாயத்தில் டி.ஆர். சுந்தரம் இருந்தார். அதற்காக சுந்தரம்பிள்ளை இயற்றிய 'மனோன்மணியம்' என்ற கவிதை நடை காப்பியத்தை படமாக்க சுந்தரம் முடிவு செய்தார்.

கதையை தேர்ந்தெடுத்தப்பின் நடிக, நடிகையர் தேர்வை புதுமையான முறையில் நடத்தினார் டி.ஆர்.சுந்தரம். அதாவது, அதற்கு முன் யாருமே செய்யாத வகையில், எல்லா தமிழ் நாளிதழ்களிலும் ஒரு விளம்பரத்தை வெளியிட்டார்.

"சுந்தரம் பிள்ளை எழுதிய மனோன்மணியை திரைப்படமாக தயாரிக்கவுள்ளோம். அப்படத்திற்கு பொருத்தமான கதாநாயகன், கதாநாயகியை ரசிகர்களே தேர்ந்தெடுத்து எங்களுக்கு கடிதம் எழுதுங்கள்" என்பதுதான் விளம்பர வரிகள். இந்த விளம்பரத்தை பார்த்த தமிழ் ரசிகர்கள், 'மாடர்ன் தியேட்டர்ஸ்'க்கு நூற்றுக்கணக்கில் கடிதங்கள் எழுதினர். பெரும் பான்மை ரசிகர்களின் எண்ணப்படி பி.யு. சின்னப்பாவும், டி.ஆர். ராஜகுமாரியும் படத்தின் கதாநாயகன், கதாநாயகியாகவும் நடிக்க தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழ்த் திரையுலகில் பெரும் பொருட் செலவில் உருவான படம் 'மனோன்மணி' என்ற பெயர் கிடைத்தது படத்திற்கு. படத்திற்கு சுமார் 2 லட்சம் ரூபாய் செலவழித்தார் டி.ஆர்.சுந்தரம். இப்படத்தில் இடம்பெற்ற ஒரு போர்க்காட்சியில், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட துணை நடிகர்கள் நடித்தனர். படப்பிடிப்பு ஏற்காடு மலை அடிவாரத்தில் நடந்தது. இப்படப்பிடிப்பில் சேர, பாண்டிய படைவீரர்களாக நடித்தவர்களுக்கு நாள் ஊதியமாக 'மூன்றணா' கொடுக்கப்பட்டது. அவர்களுக்கு உணவு, நீர் அளிக்க பத்து மாட்டுவண்டிகளில் உணவு பொருட்கள் கொண்டு வரப்பட்டு பரிமாறப்பட்டன.

ஆறு காமிராக்கள் பல்வேறு கோணங்களில் நிறுத்தப்பட்டு, போர் காட்சிகளை படம்பிடித்தது. பெரும் பிரம்மாண்டமான இந்த காட்சியை பத்து நாட்களில் எடுத்தார் சுந்தரம். படத்தில் பி.யு. சின்னப்பா மிகவும் கவர்ச்சிகரமாக புலித்தோல் உடையில் தோன்றியது, விமர்சனத்துக்கு உள்ளானது. இருப்பினும் ரசிகர்கள் திரும்ப திரும்ப வந்து படத்தை பார்த்து வெற்றிகரமானதாக்கினர்.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது, பிரிட்டனின் யுத்த முயற்சிகளை ஆதரித்து, ஒரு படத்தை 1944-ல் டி.ஆர்.சுந்தரம் எடுத்தார். பர்மா ராணி என்ற அந்த படத்தை 11000 ஆயிரம் அடியில் தயாரித்தார். இதில் 'சுந்தரமே பஜ்ஜினாமா' என்ற வில்லன் வேடத்தில் நடித்திருந்தார். படத்தின் கதாநாயகன் ஹொன்னப் பாகவதர், கதாநாயகி கே.எல். வி.வசந்தா. ஜப்பான் ராணுவம், பர்மாவை ஆக்ரமித்திருந்ததை முறியடிக்க, பிரிட்டிஷ், இந்திய ராணுவம் போரிடுவதாக கதையை அமைத்தார் சுந்தரம்.

படத்தில் ஜப்பானிய போர் வீரராக நடித்தவர் காளி என்.ரத்தினம். சம்பிரதாயமாக எடுக்கப்பட்ட 'பர்மா ராணி' யில் சுவாரஸ்யமான சம்பவங்களை

கோர்த்திருந்ததால் வெற்றிபெற்றது. நாடு சுதந்திரம் அடைந்ததபின் ஆங்கிலேயர் ஆதரவுப் படம் என்று முத்திரை குத்தப்பட்டு 'பர்மா ராணி' தடை செய்யப்பட்டது.

அடுத்ததாக 'சௌ சௌ' என்ற நகைச்சுவை துண்டுப் படத்தை சுந்தரம் தயாரித்து, இயக்கினார். படத்தில் மூன்று தனிதனித் நகைச்சுவை கதைகள் இடம்பெற்றிருந்தது மக்களை ரசிக்க வைத்தது.

1. கலிகால மைனர் - அதில் காளி என். ரத்தினம், டி.எஸ்.துரைராஜன், மற்றும் சி.டி. ராஜகாந்தம் நடித்திருந்தனர். 2. பள்ளி நாடகம் - இதில் என்.எஸ்.கிருஷ்ணனும், மதுரமும் நடித்திருந்தனர்.

3. சூரப்புலி - இதில் காளி என்.ரத்தினம், சி.டி. ராஜகாந்தம் நடித்திருந்தனர். இவர்கள் பின்னாளில் கணவன் மனைவியானார்கள்.

மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பில் 'ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி', அதுவரை மாடர்ன் தியேட்டர்ஸ் உருவாக்கிய படங்களிலேயே மிக அதிக செலவும், மிகப் பெரிய வெற்றியையும் பெற்ற படம். 1947ல் வெளிவந்த இப்படத்தில், ஊமையனாக நடித்த காளி என்.ரத்தினம்' அந்நாளில் தியாகராஜ பாகவதர் பாடி நடித்த மன்மத லீலையை வென்றார் உண்டோ' என்ற பாடலை தனது நகைச்சுவையான பாணியில் ' .... மம்மும மீமையை மெம்மார்...' என்று பாடி நடித்தது, ரசிகர்களால் பெரிதும் ரசிக்கப்பட்டது.

'சுலோச்சனா' என்ற இராமாயணக் கால கதையை படமாக்க சுந்தரம் முடிவு செய்தார். அப்படத்தின் கதா நாயகன் 'இந்திரஜித்' வேடத்தில் நடிக்க, பி.யு.சின்னப்பாவை ஒப்பந்தம் செய்தார். 1946 ஆம் ஆண்டில் இப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கியது. படப்பிடிப்பின் முதல் நாள், இந்திரஜித்தாக நடிக்க வேண்டிய பி.யு. சின்னப்பா, ஸ்டுடியோவிற்கு உரிய நேரத்தில் வந்து சேரவில்லை. எரிச்சலான சுந்தரம், தானே



இந்திரஜித்தாக மேக்கப் போட்டுக் கொண்டு நடிக்க தொடங்கிவிட்டார்.

பி.யு.சின்னப்பா, கதாநாயகன் வேடத்திலிருந்து நீக்கப்பட்டார். டி.ஆர்.சுந்தரம் கதாநாயகனாக நடித்த முதல் படம் என்ற பெருமையுடன் வந்தது,

டி.ஆர். சுந்தரம், தனது எந்த சினிமா தயாரிப்புக்கும் வெளியிலிருந்து பணம் கடனாக வாங்குவதில்லை. தானே படத்திற்கான பட்ஜெட்டை தயாரித்து, குறித்த தேதியில் படப்பிடிப்பைத் தொடங்கி, குறித்த நேரத்தில் படத்தை வெளியிடுவார். தமிழ் நாட்டிலேயே வெளியிலிருந்து கடன் பெறாமல் சொந்தப் பணத்திலேயே படம் தயாரித்த ஒரே நிறுவனம், மாடர்ன் தியேட்டர்ஸ் ஒன்றுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

பட தயாரிப்பிற்காக அல்லாமல் 'மாடர்ன் தியேட்டர்ஸ்' நிறுவனத்தை வளர்ப்பதற்காக, சுந்தரம் 100 ரூபாய் மதிப்பில் 5000 பங்கு பத்திரங்களை வெளியிட்டு, அந்த காலத்திலேயே ஐந்து லட்சத்தை திரட்டினார். இப்பங்குகள் மாடர்ன் தியேட்டர்ஸ் பெயரில்



வெளியிடப்பட்டன. படத் தயாரிப்பிற்காக தனது ஸ்டுடீயோ வில் நடிகர், நடிகைகள், மற்ற கலைஞர்கள் தங்கி பணிபுரிய, தனி குடியிருப்பு கட்டிக்கொடுத்தார்.

படப்பிடிப்பின்போது கறாரான மனிதராக தோற்றம் காட்டும் டி.ஆர்.எஸ், மற்ற விதங்களில் கலைஞர் களோடு சுமூகமான தயாரிப்பாளராக விளங்கினார். கலைஞர்கள் அவரை முதலாளி என்று அழைத்தனர். இன்றளவும் சினிமா உலகில் முதலாளி என்றால் அது டி.ஆர்.எஸ் தான்.

தினந்தோறும் தனது ஸ்டுடீயோவிற்கு வரும் சுந்தரம், நேரே தன் அறைக்கு செல்லமாட்டார். படப்பிடிப்பு தளங்களுக்கு சென்று, படக்குழுவினரிடம் அவர்களது நிறை குறைகளை கேட்பார். அவர்கள் சொல்கிற குறைகளை உடனடியாக சம்பந்தப்பட்ட துறைக்கு கூறி, நிவர்த்திச் செய்ய நடவடிக்கை எடுப்பார். ஸ்டுடியோ ஊழியர்களிடம், அந்த நேரத்தில் தங்களின் குறைகளை சிறிய தாளில் எழுதித்தரச் சொல்லி பெற்றுக்கொள்வார்.

திராவிட இயக்க தலைவர்களாக பின்னாளில் விளங்கிய பலருக்கு மாடர்ன் தியேட்டர்ஸ் தாய்வீடு போன்று விளங்கியது. கருணாநிதி, எம்.ஜி.ஆர் கண்ணதாசன் உள்ளிட்டவர்கள் மாடர்ன் தியேட்டர்ஸ் படங்களில் பங்கேற்றதனால் புகழ்பெற்றனர். திரைப்பட பாடலாசிரியர்கள் மருதகாசி, கவி கா.மு.ஷெரிப் பாடல்கள் எழுதி புகழ் பெற்றது இங்குதான்.



பாடகர்கள் திருச்சி லோகநாதன், சீர்காழி கோவிந்தராஜன் டி.எம்.சௌந்தர ராஜன் போன்றோர் ஆரம்ப காலத்தில் தங்களை திறமையை வளர்த்துக் கொண்டதும் இந்த ஸ்டுடியோவில் தான். நடிகர் ஜெயசங்கர், மனோகர், நம்பியார் போன்ற திரைப்பட நட்சத்திரங்கள் பிரபலமடைந்ததும் இங்குதான்.

கண்ணதாசனின் திரையுலக பிரவேசம் நிகழ்ந்தது மாடர்ன் தியேட்டர்ஸில்தான். 'சண்டமாருதம்' என்ற தனது பத்திரிகையில் உதவி ஆசிரியராக கண்ணதாசனை நியமித்தார். கண்ணதாசன் முதன்முதலில் சினிமாவிற்கு பாட்டு எழுதியதும் மாடர்ன் தியேட்டர்ஸில்தான். பத்திரிக்கை ஆசிரியராக இருந்த கண்ணதாசனை திரைப்பட கதாசிரியராக மாற்றியது இல்லற ஜோதி படம்.

தெலுங்குப் படங்களில் முன்னணிக் கதாநாயகனாக நடித்த என்.டி.ராமாராவ் இங்கு எடுத்த தெலுங்குப் படங்களில் நடித்துள்ளார். டி.ஆர்.ராஜகுமாரி, லலிதா, பத்மினி, வி.என்.ஜானகி, எம்.வி.ராஜம்மா, அஞ்சலிதேசி, மாதுரிதேவி, பி.எஸ்.சரோஜா, பண்டரிபாய், ஜமுனா, சாவித்திரி, பானுமதி, எம்.என்.ராஜம், எஸ்.எஸ்.ராஜேந்திரன், எம்.ஆர். ராதா, விஜயகுமாரி, மனோகர், கே.ஆர்.ராமசாமி, தேவிகா உள்ளிட்ட எல்லாரையும் நடிக்கவைத்து திரையுலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமை டி.ஆர்.எஸ். அவர்களையே சாரும்.

கண்டிப்புக்கு பேர் போன சுந்தரம், படப்பிடிப்பின் போது ஒரு சர்வாதிகாரிப் போல்தான் நடந்து கொள்வார். படப்பிடிப்பை

திட்டமிட்டு நடத்தி, படத்தை குறித்த நேரத்தில் வெளியிடும் பழக்கமுடையவர். தனது ஸ்டுடியோவில் தயாராகி, எதிர்பாராதவிதமாக எரிந்து போன 'போஜன்' படத்தை ஒரே மாதத்தில் திரும்பவும் படமாக்கி திரையிட்ட சாதனையாளர் சுந்தரம். தமிழ் தவிர மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி, சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் மாடர்ன் தியேட்டர்ஸ் படங்களை தயாரித்தது.

மலையாள மொழியின் முதல் பேசும் படமான 'பாலன்' திரைப்படத்தை 1938 ல் எடுத்தவர் சுந்தரமே. தமிழின் முதல் கலர் படமான 'அலிபாபவும் நாற்பது திருடர்களும்' படத்தை தயாரித்தவரும் சுந்தரமே. அதேபோல் மலையாளத்தில் முதல் வண்ணப் படமான 'கண்டம்பெச்சகோட்டு' என்ற படம் மாடர்ன் தியேட்டர்ஸில் 1961ல் தயாரிக்கப்பட்டது என்பது ஒரு சாதனை. அமெரிக்க படத் தயாரிப்பு நிறுவனத்துடன் இணைந்து, 'Jungle' என்ற ஆங்கில படத்தையும் தயாரித்தார் டி.ஆர். சுந்தரம் .

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு புகழ் கொடுத்த படங்கள் மந்திரி குமாரி, சர்வாதிகாரி, அலிபாபாவும் 40 திருடர்களும். நடிகர் திலகம் சிவாஜி அவர்களுக்கு இல்லறஜோதி, திரும்பிப் பார் முதலிய படங்கள் திருப்புமுனையை ஏற்படுத்தித் தந்தன.

வடநாட்டு நடிகர்களைக் கொண்டு தமிழ் நாட்டின் இந்தி வண்ணப்படமான "கித்நா பதல் கயாசின் கான்" என்ற படத்தை தயார் செய்து வெளியிட்டார்.

பாரதிதாசனின் 'எதிர்பாராத முத்தம்' என்ற கதையை பொன்முடி என்ற பெயரில் சுந்தரம் தயாரித்தார். இப்படத்தை என்ற வெளிநாட்டைச் சேர்ந்த



எல்லிஸ் ஆர்.டங்கன் டைரக்ட் செய்தார். இப்படம் 1950 ஆண்டு வெளிவந்து வெற்றி பெற்றது. படத்தில் பொன்முடியாக நரசிம்ம பாரதியும், பூங்கோதையாக அந்நாளைய கவர்ச்சி ராணி எனப்பட்ட மாதுரிதேவியும் நடித்திருந்தனர்.

இப்படத்தை தொடர்ந்து 'திகம்பர சாமியார்' என்ற படத்தை தானே டைரக்ட் செய்து தயாரித்தார் டி.ஆர்.சுந்தரம். இப்படத்தில் நம்பியார், 10 வேடங்களில் தோன்றினார். இப்படத்தின் கதை வழுவூர் துரைசாமி அய்யங்காரின் துப்பறியும் நாவலைத் தழுவியது.

## மந்திரி குமாரி

'மந்திரி குமாரி' என்ற நாடகம் தமிழ் மக்களிடையே பரபரப்பாக பேசப்பட்டது.




கருணாநிதி எழுதிய இந்த நாடகத்தை விலைக்கு வாங்கிய டி.ஆர்.சுந்தரம், 'மந்திரகுமாரி' என்ற பெயரில் படமெடுத்தார். எல்லிஸ் ஆர். டங்கன் டைரக்டர் பொறுப்பை ஏற்றார். திரைப்படத்திற்கான திரைக்கதை, வசனத்தை எழுத, கருணாநிதி சேலம் வந்து, மாத சம்பளமாக ரூ500/- பெற்று திரைப்படத்தின் வசனத்தை எழுதிக் கொடுத்தார். கனல் பறக்கும் வசனங்கள் படத்தில்




இடம் பெற்றது. படத்தின் கதாநாயகனாக, தளபதியின் வேடம் அப்போது வளர்ந்து வந்த எம்.ஜி.ராமச்சந்திரனுக்கு தரப்பட்டது.

படத்தின் வில்லன் காதாபாத்திரம் பேசும் வசனங்கள் பரபரப்பாக பேசப்பட்டன. தன் காதல் மனைவி, தன் திரைமறைவு வாழ்க்கைக்கு இடையூறாக இருப்பதால், அவளை கொல்ல திட்டம் தீட்டி, மலையுச்சிக்கு கொண்டுவருகிறான் வில்லன். ஆனால் அதை புரிந்துகொள்கிற மனைவி, தன் சாமர்த்தியத்தால் அவனையே கொன்று, தான் தப்பிக்கும் உத்தியை மக்கள் ரசித்து பார்த்தனர். படம் பெரும் வெற்றி பெற்றது.

'Many Rivers to Cross' என்ற ஆங்கிலப் படத்தை தழுவி, 'கொஞ்சும் குமரி' என்ற பெயரில் ஒரு படத்தை தயாரித்தார். அந்த படத்தின் கதாநாயகி, ஒரு ரௌடி டைப். ஹீரோவை முரட்டுத்தனமாகக் காதலிக்க கதாநாயகன் மறுக்க, இறுதியில் அவனை துப்பாக்கி முனையில் தன் சகோதரர்களின் ஆதரவில் மணக்கிறார். இதுதான் படத்தின் கதை. இந்த படத்தின் கதாநாயகி மனோரமா.

மனோரமாதான் இந்த கதைக்கு மிகவும் பொருத்தமாக இருப்பார் என்று நினைத்த டி.ஆர்.சுந்தரம், முதன் முதலாக ஒரு காமெடி நடிகையைக் கதாநாயகி ஆக்கினார். 'கொஞ்சும் குமரி' படம் தயாராகிக் கொண்டிருந்த சமயம்தான் அந்த துக்ககரமான நிகழ்வு நடந்தது. சாதனைகள் பல படைத்த சுந்தரம், திடீர் மாரடைப்பால் 1963 ஆகஸ்ட் 30ஆம் தேதி, சேலத்தில் மரணமடைந்தார். டி.ஆர்.எஸ். முழுமையாகத் தயாரித்த கடைசிப் படம் 'கவிதா'.

டி.ஆர். எஸ் மரணத்திற்குப்பிறகு அவரது மூத்த மகன் S.ராமசுந்தரம் தொடர்ந்து பல வெற்றிப் படங்களத் தயாரித்து புகழடைந்தார்.

அவர் தயாரித்த வெளியிட்ட வல்லவன் வரிசை படங்கள் மகத்தான வெற்றியடைந்தன. அவர் தொடர்ந்து 15 வருடங்களுக்கு மேல் இயக்குநராக இருந்து பல படங்களை தயாரித்து வெளியிட்டார்.

1984க்குப் பிறகு படங்கள் தயாரித்து வெளியிட இயலாத சூழ்நிலைகள் ஏற்பட்டதும் வீடியோ டெலிவிஷன் ஆகியவைகள்



திரைப்படங்கள் வெற்றிக்கு குறுக்கீடாக அமைந்ததும் அவர் மேற்கொண்டு படங்கள் தயாரிக்காததற்கு முக்கியக் காரணங்கள். இந்நிலையில் அவர் திடீரென்று 23-02-1993 அன்று மரணமடைந்தார். திரு. டி.ஆர்.சுந்தரம் அவர்களின் பேரன் திரு.சுமன்சுந்தரம் அவர்கள் படிப்பிற்காக சிறுவயதிலேயே அமெரிக்கா சென்று அங்கு படிப்பை முடித்து தொடர்ந்து பணியில் அமர்ந்துள்ளார்.




டி.ஆர்.சுந்தரத்தை கவுரவிக்கும் விதமாக பாராட்டி, அவரது மார்பளவுச் சிலையை கடந்த 2000 ம் ஆண்டு அன்றைய முதல்வர் கருணாநிதி, சென்னையில் உள்ள தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை வளாகத்தில் திறந்துவைத்தார்.

இருப்பினும் கால மாற்றத்தால் தங்களை மெருகேற்றிக்கொள்ளமுடியாத சூழலில், மாடர்ன் தியேட்டர்ஸ் கொஞ்சம் கொஞ்சமாக படங்கள் எடுப்பதை நிறுத்திக்கொண்டது. தன் புதுமையான தயாரிப்புகளால் மக்களை மகிழ்வித்த மாடர்ன் தியேட்டர்ஸ் தமிழ்சினிமா வளர்ச்சியின் ஒரு மவுன அடையாளமானது.

டி.ஆர். சுந்தரம், இரண்டுமுறை தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையின் தலைவராக பணியாற்றியுள்ளார். தமிழ் சினிமாவின் தவிர்க்கவியலாத அடையாளமாகவும், ஏராளமான திரைக்கலைஞர்களுக்கும் தாய் வீடாக விளங்கிய 'மாடர்ன் தியேட்டர்ஸ்' தற்பொழுது நவீன குடியிருப்பு வளாகமாக மாறிவிட்டது. மாடர்ன் தியேட்டரை ஞாபகப்படுத்தும் ஒரே அடையாளமாக 'மாடர்ன் தியேட்டார்ஸ்' என்ற அலங்கார வளைவு மட்டும் இன்றும் மௌன சாட்சியமாக நின்று கொண்டிருக்கிறது.

---




16.07.2020 அன்று வேலூர் மாவட்டம் காங்கேயம்நல்லூரில் அமைந்துள்ள நம் குலகுரு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் ஞானத் திருவளாகத்தில் பணிபுரிந்து வரும் ஓதுவார்கள் திரு. கலம்பூர் கதிரேசனார் ஓதுவார், திரு. சிவானந்த குருக்கள் ஆகிய இரண்டு பேருக்கு கொரோனா துயர்துடைப்பு நிவாரண நிதியாக தலா ரூ.5,000/= வீதம் மொத்தம் ரூ.10,000/= தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் மாநிலத் துணைத் தலைவர் திரு. C.N.தட்சிணாமூர்த்தி அவர்கள் மூலமாக வழங்கப்பட்டது.




# கொரோனா நிவாரணப் பணியில் செங்குந்தர்கள்

திருவாரூர் மாவட்ட செங்குந்த மகாஜன கல்விச் சங்கத்தின் சார்பில் 29-06-2020 திங்கள் அன்று அரக்கரை கொக்காலடியில் மாவட்டத் தலைவர் திரு. சி.கணபதி அவர்கள் தலைமையில் மாவட்டப் பொதுச் செயலர் திரு. மு.பக்கிரிசாமி M.A.,B.Ed., மாவட்டப் பொருளர் திரு. S.இன்பமூர்த்தி M.Com., மாநில செயற்குழு உறுப்பினர் திரு. S. இராஜகம்பீரன், அரக்கரை கொக்காலடி கிளைச்சங்கத் தலைவர் திரு. I.சரவணன் ஆகியோர் முன்னிலையில் கோவிட் 19 கொரோனா வைரஸ் துயர்துடைப்பு நிவாரண பொருள்கள் வழங்குதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

5 கிலோ அரிசி பை மற்றும் மளிகை சாமான்கள் அடங்கிய பைகள் என ரூ. 700 மதிப்பீட்டில் 110 குடும்பங்களுக்கு 220 நிவாரணப் பொருள் பைகள் வழங்கப்பட்டன.

அரக்கரை கொக்காலடி கிராமத்தில் வசிக்கும் நம் செங்குந்த 96 குடும்பங்களுக்கும், இம்மாவட்ட 6 கிளைச் சங்கங்களுக்கும் நிவாரணப் பொருளடங்கிய பைகளும், 6 கிளைச் சங்கங்களுக்குத் தலா ரூ. 1000/- நிவாரண நிதியாகவும் வழங்கப்பட்டது.

மேற்கண்ட நிவாரணப் பொருள்கள் வழங்கய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் ரூ. 20,000/- வழங்கிய தலைவர் திரு. K.P.K.செல்வராஜ் அவர்களுக்கும், பொதுச் செயலாளர் திரு. R.P.குமரகுருபரன் அவர்களுக்கும், பொருளாளர் திரு. R.காந்தி அவர்களுக்கும் ரூ. 30,000/- நன்கொடை வழங்கிய திட்டக்குடி தொழிலதிபர் திரு. P.T.ராஜன் அவர்களுக்கும், நன்கொடை ரூ. 5000/-ம், வசூல் தொகை ரூ. 18,000/-ம் சேர்த்து ரூ.23,000/-ம் வழங்கிய மாநில துணைப் பொதுச் செயலாளர் திரு, K.சுந்தரமூர்த்தி அவர்களுக்கும், மாநில முன்னாள் தலைவர் திரு. பெண்ணாடம் ஆ.இராஜவேலு அவர்களுக்கும், நிவாரணப் பொருள் பைகளைச் சிறந்த முறையில் தயாரித்துக் கொடுத்த திருவாரூர் மாவட்ட முன்னாள் தலைவர் புரவலர் திரு. Rm.P.R.S.சுந்தரமூர்த்தி அவர்களுக்கும் திருவாரூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

## வாரியார் அமுதமொழி

*துன்பம் இல்லாமல் இன்பமாக வாழ விரும்பினால், மனதால் கூட அடுத்தவருக்கு தீங்கு நினைக்கக் கூடாது.*



# SUCCESS NOTE BOOKS

"You can create and achieve anything by writing"

## Our Products




Short Size | King Size | Long Size

Premium Long Size | A4 Size | Practical Note | Drawing Note

*Manufactured by :*

# ARVIGA ENTERPRISES

**SCHOOL NOTE BOOK SUPPLIERS**

Office : **ARVIGA ENTERPRISES**
1/445 B, NGO Colony, Satchiyapuram, Sivakasi - 626 124. TAMILNADU.

Factory : **ARVIGA ENTERPRISES**
3/1421/1, Sattur Road, Near PRC Depot, Sivakasi - 626 189.

Mobile : 7558112800, 8012337337. Email : arviga2012@gmail.com, successs2004@gmail.com

# தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

# 05.07.2020ம் தேதி நிர்வாகக்குழு மெய்நிகர் செயலி வழிக் கூட்டத் தீர்மானங்கள்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிர்வாகக்குழுக் கூட்டம் 05.07.2020ம் தேதி மெய்நிகர் செயலி (Zoom Meeting) வழியாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் : 1**

வள்ளல் சபாபதி மெட்ரிகுலேசன் பள்ளியில் 19.06.2020 முதல் இணைய வழிக் கல்வி ( Online Class ) தொடங்கப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான மிக வேகமான இணையதள இணைப்பு வசதி செய்து கொள்ளவும், 2020 -21 ஆம் ஆண்டிற்கான நோட்டு, புத்தகங்கள், நாட்குறிப்பு மற்றும் அடையாள அட்டை தயாரிக்கவும் அனுமதி அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் : 2**

சென்னையில் ஊரடங்கு நடைமுறையில் உள்ளதால் பள்ளிகள் திறக்க காலதாமதம் ஏற்படும் என்றாலும், மாணவர்கள் சேர்க்கையை அதிகப்படுத்துவதற்காக துண்டு பிரசுரங்கள், விளம்பரப் பதாகைகள் மற்றும் தினசரி நாளிதழ்களில் மாணவர்கள் சேர்க்கை குறித்து விளம்பரங்கள் வெளியிடவும், நடப்பு ஆண்டில் மழலையர் வகுப்பு (KG) சேர்க்கையை அதிகப்படுத்த ஒப்பந்த அடிப்படையில் வாகனங்கள் ஏற்படுத்திக் கொள்ள அனுமதி அளிப்பது என்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம்: 3**

நமது பள்ளிக்கு பிரத்தியோகமாக இணையதளம் (Web Site) ஏற்படுத்தினால் மாணவர்கள் சேர்க்கை அதிகமாகும் என்று பெற்றோர்கள் ஆசிரியர்கள் கருதுவதால் இணையதள வசதியை ஏற்படுத்திக்கொள்ள நிர்வாகக்குழு அனுமதி அளிப்பது என்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. இதைப்போல தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கும் இணையதள வழி ஏற்படுத்திக்கொள்ள அனுமதி அளிப்பதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் : 4**

1 முதல் 5 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு மிண்ணனு பலகை (Digital Board) மூலமாக பாடங்கள் சொல்லித் தரும் வசதியை ஏற்படுத்துக் கொடுக்கவும் , பழுது நீக்கக் கோரும் கோரிக்கையை பரீசிலனை செய்ததில் அதற்கான அனுமதியை வழங்க ஏகமனதாக தீர்மானம் செய்யப்பட்டது.

**தீர்மானம் : 5**

தமிழக அரசு கல்வித்துறையால் நியமிக்கப்பட்ட கல்விக்கட்டணம் 70 % மிகாமல் கல்விக் கட்டணம் மாணவர்களிடமிருந்து வசூலிக்க, அனுமதி அளிக்கலாம் என முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் : 6**

நம் பள்ளியில் பணிபுரியும் பெரும்பாலான ஆசிரியர்கள் முதுநிலை பட்டதாரிகளாக

இருப்பதால் அவர்களுக்கு நாம் கொடுக்கும் ஊதியம் குறைவு என்ற மனநிலையில் இருப்பதால் அவர்களை ஊக்கப்படுத்துவதோடு, கற்பித்தல் முறையில் அவர்களுக்கு சிறப்பான பயிற்சியை அளிப்பதன் மூலம் கல்வித்தரம் உயர வாய்ப்புகள் உள்ளதால் வரும் கல்வியாண்டில் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோருக்கு அவர்கள் பெறும் மாதாந்திர ஊதியத்தில் 10 % ஊதிய உயர்வு அளிப்பதெனவும், இந்த ஊதிய உயர்வு தமிழக அரசின் ஊரடங்கு முடிந்து பள்ளி திறக்கும் நாள் முதற்கொண்டு நடைமுறைப்படுத்திக் கொள்ள அனுமதி அளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் : 7

சென்ற கல்வியாண்டில் மாணவர்களிடமிருந்து வர வேண்டிய கல்விக் கட்டணம் நிலுவைத் தொகை சுமார் ரூ. 2,15,000 க்கும் மேல் உள்ளது. இதனை வசூலிக்க பள்ளி முதல்வர் தலைமையில் ஆசிரியர் குழு ஒன்றை ஏற்படுத்தி வசூலிக்க அனுமதி அளிப்பது என்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

## தீர்மானம் : 8

ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பள்ளியில் தேனீர் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று பள்ளி முதல்வர் கருத்து தெரிவித்துள்ளதால் அவரது கருத்தை பரிசீலனை செய்து அவ்வண்ணமே செலவு செய்து கொள்ள அனுமதி அளிக்க முடிவு செய்யப்பட்டது.

## தீர்மானம் : 9

M.A ஆங்கிலம், M.Sc., (உயிரியல்) படித்த ஆசிரியர்களின் பணி இடம் காலியாக இருப்பதால் அந்த இடத்தை நிரப்ப செய்தித்தாள்களில் விளம்பரம் செய்து நேர்காணல் நடத்தி ஆசிரியர்களை நியமித்துக் கொள்ள அனுமதி அளிப்பதென முடிவு செய்யப்பட்டது.

## தீர்மானம் : 10

பள்ளியில் ஆசிரியர்களை நியமித்துக் கொள்ளவும், பள்ளி நிர்வாகத்தை பொதுச்செயலாளர் நடத்திக் கொள்ளவும் ஒரு குழு ஒன்றை ஏற்படுத்தி பள்ளியின் நிர்வாகம் எவ்வித தடையுமின்றி சுதந்திரமாக செயல்பட உறுப்பினர்களை நியமித்து, அவ்வப்போது கூட்டங்கள் நடத்தி பள்ளி வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்க்கும் வழிவகை செய்து கொள்ள அனுமதி அளிப்பதென ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

## தீர்மானம் : 11

அரசின் கொரோனா தடை உத்தரவு காலத்தில் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் ஊதியம் 50%வழங்கி வருவதை பின்னேற்பு செய்து கொள்ள அனுமதி அளிப்பதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் : 12

தலைமைச் சங்கம் அமைந்துள்ள பகுதி பள்ளியின் அமைவிடத்தைக் காட்டிலும் கொரோனா தொற்று அதிகமாக இருப்பதால், அங்கு சென்று சங்க வேலைகளை கவனிக்க முடியாத நிலை உள்ளது. தங்கும் அறைகளும் தொடர்ந்து காலியாகவே இருந்து வருகிறது. தினசரி அலுவல்கள், கணக்குகள் பராமரித்தல், விளம்பரம் பெறுதல் மற்றும் செங்குந்தமித்திரனுக்கு வேண்டிய செய்திகளை சேகரித்து அனுப்ப இயலாத நிலை இருப்பதால் பள்ளி நிர்வாகத்தையும் , செங்குந்தர் மாளிகை நிர்வாகத்தையும் ஒன்று சேர்த்து நிர்வகிக்கத் தக்க வகையில் பள்ளி வளாகத்தில் ஒரு பகுதியை தற்காலிக அலுவலகம் அமைத்துக் கொள்வது என்றும், பின்னர் நிரந்தரமாக கலையரங்கத்தின் பின்பகுதியில் சுமார் 250 பேர் அமரக்கூடிய 2500 சதுர அடியில் காலி இடம், ஒரு தங்கும் அறையுடன் உள்ள அக்கட்டிடத்தில் சில பழுதுகளை மேற்க்கொண்டு, வர்ணம்

பூசி பொது நிர்வாக அலுவலகம் ஒன்றை ஏற்படுத்தினால் சிறப்பாக இருக்கும் என நிர்வாகக்குழு கருதுகிறது.

அமையவுள்ள அறையில் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், அலுவலக மேலாளர், பணியாளர், கணினி அறை என்று தனித்தனியாக தடுப்புகள் அமைத்து ஒட்டுமொத்த பள்ளி மற்றும் மாளிகையின் வரவு செலவுகளைக் கவனிக்கவும் , ஆயுள் உறுப்பினர் / செங்குந்தமித்திரன் மற்றும் திருமணத் தகவல் மையத்தை விரிவுபடுத்துவது தொடர்பாகவும் தலைவர் நிர்வாகக் குழு கூட்டத்தை அங்கேயே நடத்திக் கொள்ளலாம் எனவும் பள்ளி நிர்வாகத்திற்கு இடையூறு இன்றி பள்ளி நிர்வாகத்தை கவனித்து வரும் அறக்கட்டளை போன்ற நிர்வாகங்களில் அலுவலகம் அமைத்துக் கொள்ள விதி இருப்பதால் அந்த முறையில் பின்பற்றலாம் எனவும் பின்நாளில் பள்ளியை விரிவுபடுத்தினால் அதற்குத் தகுந்தால் போல் ஒருங்கிணைந்த அலுவலகத்தை மாற்றி அமைக்கலாம் என்ற கொள்கை முடிவுக்கு நிர்வாகம் இதன் மூலம் அனுமதி வழங்கிடவும் திட்ட அறிக்கை தயாரித்து, நிதி ஒதுக்கீடு எவ்விதம் திரட்டுவது எவ்வளவு செலவு செய்வது போன்ற விவரங்களை தனியாக சமர்பிக்க பொதுச்செயலாளர் அறிக்கை சமர்பிக்க அனுமதி அளித்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### தீர்மானம் : 13

தற்போது தலைமைச் சங்கத்தில் கணக்குகள் எழுதுவதில் பயிற்சி பெற்ற கணக்காளர், கணினித் துறையில் பயிற்சி பெற்ற முழு நேர ஊழியரும் இல்லாத காரணத்தால் கணக்குகள் உடனுக்குடன் முடிக்கப்பட்டு நிர்வாகக் குழுவிற்கு வைக்க காலதாமதமாகின்றது. பள்ளியிலும் இதே நிலை இருப்பதால் பள்ளி வளாகத்தில் நிர்வாக அலுவலகம் அமைத்து எழுத்தர், வேலையாள் உள்பட நான்கு பேர் வேலைக்கு பணி அமர்த்தினால் அனைத்துப் பணிகளையும் ஒன்று சேர்ந்து கவனிக்க முடியும் என்று நிர்வாகக்குழு கருதுவதால் மேற்படி பணியாளர்களை நியமனம் செய்ய தினசரி பத்திரிக்கைகளில் விளம்பரம் வெளியிட அனுமதி அளித்து தீர்மானம் இயற்றப்பட்டது.

### தீர்மானம் : 14

செங்குந்தர் மாளிகை பராமரிப்பு தொடர்பாக 18.07.2019 அன்று நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் ஒரு அறையினை மாதிரி அறையாக தயார் செய்து அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி பராமரிப்புப் பணியைத் தொடங்கலாம் என்று தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை சேர்ந்து முடித்திட 19.11.2019ம் தேதிய நிர்வாகக் குழு கூட்டத்தில் செயலாளர், பொருளாளர் மற்றும் திரு. ஆத்தூர் K.P.மகாலிங்கம் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

தற்போது புதிய நிர்வாகம் அமையப் பெற்றுள்ளதால், முந்தைய நிர்வாகக்குழுவின் பரிந்துரைகளை சிறு திருத்தத்துடன் ஏற்றுக் கொள்ளும் வகையில், ஊரடங்கு தளர்வு ஏற்படும் நிலையில் மாளிகைப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகளை அஞ்சல் வழி / மின் அஞ்சல் மூலமாகப் பெற்று, பணிகளை பார்வையிட பொதுச்செயலாளர், பொருளாளர் இவர்களுக்குத் துணையான துணைப் பொதுச்செயலாளருக்கும் அனுமதி வழங்கிடவும் , ஒப்பந்ததாரர்களில் நமது செங்குந்தர்களுக்கு முன்னுரிமை வழங்கிடவும் அனுமதி அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### தீர்மானம் : 15

கொரோனா துயர் துடைப்பு நிவாரண நிதியாக ரூ. 4,07,501 /= நாளது தேதி வரை பெறப்பட்டுள்ளது. நிவாரண உதவி கேட்டு கோரிக்கை அனுப்பிய மாவட்டங்களுக்கு நிதியாக ரூ.4,00,000/= வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. திருநெல்வேலி | - | ரூ. 50,000 |
| 2. தூத்துக்குடி | - | ரூ. 50,000 |
| 3. சிவகங்கை | - | ரூ. 15,000 |
| 4. மதுரை | - | ரூ. 25,000 |
| 5. தஞ்சாவூர் | - | ரூ. 50,000 |
| 6. திருவாரூர் | - | ரூ. 20,000 |
| 7. அரியலூர் | - | ரூ. 20,000 |
| 8. திருவள்ளூர் | - | ரூ. 50,000 |
| 9. விழுப்புரம் | - | ரூ. 30,000 |
| 10. கள்ளக்குறிச்சி | - | ரூ. 25,000 |
| 11. புதுக்கோட்டை | - | ரூ. 20,000 |
| 12. இராமநாதபுரம் | - | ரூ. 20,000 |
| 13. மகாராஷ்டிரா | - | ரூ. 25,000 |
| **மொத்தம்** | - | **ரூ. 4,00,000** |

கொரோனா நிவாரண உதவி செய்த நன்கொடையாளர்களுக்கு நன்றி தெரிவிக்கவும், மாவட்ட சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள துயர் துடைப்பு நிதி ரூ.4,00,000 ஐ பின்னேற்பு அனுமதி வழங்கிட அனுமதி அளிப்பது என்று ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டது.

## தீர்மானம் : 16

சங்கம் வரவு செலவு செய்யும் அனைத்து வங்கிகளின் சேமிப்புக் கணக்கு, வைப்புத் தொகைக் கணக்கு ஆகியவற்றை நிர்வாகிக்க, புதிய நிர்வாகிகள் பெயரில் மாற்றம் செய்து வங்கிகளுக்கு அளித்துள்ள தீர்மானத்தை பின்னேற்பு செய்வது தொடர்பாகவும்...

செங்குந்தமித்திரன் ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் பொறுப்பில் இருந்து தலைவர் திரு. K.P.K.செல்வராஜ் அவர்களே தொடர்ந்து நீடிக்க வகை செய்வது தொடர்பாகவும்...

பள்ளி வளாகத்தில் தண்ணீர் பற்றாக்குறை இருந்து வருவதால், புதிய நிலத்தடி குழாய் போட்டுக் கொள்வது தொடர்பாகவும்....

செங்குந்தர் மாளிகை புதுப்பிக்கப்பட்டு வசதிகள் மேம்படுத்தும் நிலையில் பழுதடைந்துள்ள மின் தூக்கியை சரி செய்வது தொடர்பாகவும்...

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் துணை அமைப்புகளுக்கு பொறுப்பாளர்களை நியமனம் செய்யவும், அலுவலக நிர்வாக மாற்றங்கள் குறித்து சூழ்நிலைக்கு ஏற்ப முடிவெடுக்கவும், புதிய பணியாளர்களை பணியமர்த்தவும், தலைவர், பொதுச்செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியை பின்னேற்பு செய்ய முடிவு செய்து ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் : 17

சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக உறுப்பினர்களுக்கு செங்குந்தமித்திரன் மாதாந்திர இதழ் அனுப்பப்பட்டு வருகின்றன. பயனாளிகளின் முழு விவரங்களை குறிப்பாக இறந்து போனவர்களின் பட்டியலை மாவட்ட சங்கங்களிடமிருந்து இன்னமும் பெற வேண்டியுள்ளது. 01.01.2010 தேதிக்கு முன்பாக உள்ள செங்குந்தமித்திரன் சந்தாதாரர்கள் புதுப்பிக்க வேண்டியவர்களாக உள்ளார்கள். ஆகவே வரும் ஜூலை மாத செங்குந்தமித்திரன் இதழை மேற்படி பழைய சந்தாதாரர்களுக்கு அனுப்புவதை நிறுத்தி புதிய தகவல் படிவத்தில் விபரங்களையும், கட்டணத்தையும் பெற்று புதுப்பித்த பின்னர் அடுத்து வரும் மாதந்தோறும் செங்குந்தமித்திரன் இதழை வெளியிட முடிவு செய்து கொள்ள தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## தீர்மானம் : 18

புதியதாக மின் அஞ்சல் மூலம் PDF வடிவில் செங்குந்தமித்திரன் இதழ் சந்தா கோருபவர்களுக்கு சலுகைக் கட்டணத்தில் அனுப்பி வைக்க ஏகமனதாக முடிவு செய்து தீர்மானம் இயற்றப்பட்டது.

## தீர்மானம் : 19

2020 தேர்தலுக்குப் பின்னர் சில குறிப்பிட்ட கிளைச் சங்க, மாவட்டச் சங்க, மாநில செயற்குழு உறுப்பினர்கள் செங்குந்த மித்திரன் இதழ் வாங்கவில்லை என்று தெரிகின்றது. ஆகவே வரும் 30.09.2020 க்குள் அனைத்துக் கிளைச் சங்க, மாவட்டச் சங்க நிர்வாகிகள், மாநிலப் பொறுப்பிலுள்ள நிர்வாகிகள் அனைவரும் செங்குந்தமித்திரன் இதழ் பெறுவதை கட்டாயமாக்க முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## தீர்மானம் : 20

மாவட்டம் தோறும் குறைந்தது 3 லிருந்து 5 விளம்பரங்களையாவது செங்குந்தமித்திரன் இதழுக்குப் பெற்றுத்தர மாவட்ட தலைவர், செயலாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்ள முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## தீர்மானம் : 21

செங்குந்தமித்திரன் வளர்ச்சிக்கு புரவலர்களை நியமனம் செய்து அவர்களை செங்குந்தமித்திரன் வளர்ச்சிக்குழு உறுப்பினர்களாக செயல்படும்படியும், ஒவ்வொரு வளர்ச்சிக்குழு உறுப்பினர்களுக்கும் குறைந்தது ரூ.10,000 நன்கொடை என்றும் முடிவு செய்யப்பட்டது.

மேலும் மண்டலத்திற்கு 5 நபர்கள் வீதம் 25 நபர்களை செங்குந்தமித்திரன் வளர்ச்சிக்குழு உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ள முடிவு செய்து அதன் அடிப்படையில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## தீர்மானம் : 22

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிர்வாகக்குழு அனுமதி பெறாமல் எந்த ஒரு தனி நபரோ , கூட்டமைப்போ, இயக்கமோ தலைமைச் சங்கத்திற்குச் சொந்தமான பெயர், கொடி, சேவல், வேல், குந்தம் போன்ற சின்னங்களைப் பயன்படுத்தக் கூடாது. சமூக வலைதளங்களால் பராமரிக்கப்படும் முகநூல், புலனம், தொலைவரி, மின் அஞ்சல் ( Facebook, WhatsApp, Telegram, Email ) ஆகியவற்றில் மேலே கண்ட சின்னங்களைப் பயன்படுத்தக் கூடாது. மீறி பயன்படுத்துபவர்கள் மீது சங்கத்தின் சட்ட விதிகளுக்குட்பட்டு நடவடிக்கை எடுக்கவும், தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கவும் நேரிடும் என்று எச்சரிக்கைப்படுகின்றது.

சங்க உறுப்பினர்கள் சிலர் நிர்வாகக்குழு உறுப்பினர்கள், தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகியோர் மீது அவதூறு செய்திகளையும், சங்க உறுப்பினர் நலனுக்கு எதிரான நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். அத்தகையோர் இனி வரும் காலங்களில் அத்தகைய பரப்புரைகளை செய்யலாகாது என்றும், தொடர்ந்து செய்யும்பட்சத்தில் அவர்கள் மீது கண்டனத் தீர்மானம் ஏற்படுத்தி மேல் நடவடிக்கைத் தொடரலாம் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# மாநில அணிகள் மற்றும் குழுக்களில் இணைந்து பணியாற்ற விருப்பம் உள்ளவர்கள் மட்டும்...

நிகழ்ச்சி அமைப்பாளர் | அமைப்புச் செயலாளர்

## அணிகள்:

| | | |
|---|---|---|
| இளைஞர் அணி | மகளிர் அணி | நெசவாளர் அணி |
| ஆன்மீக அணி | ஆடிட்டர் அணி | மருத்துவர் அணி |
| வழக்கறிஞர் அணி | வர்த்தகர் அணி | பொறியாளர் அணி |
| ஆசிரியர் அணி | இலக்கிய அணி | விவசாய அணி |

தகவல் தொழில்நுட்ப அணி | மாநில செய்தி தொடர்பாளர்கள் அணி

## குழுக்கள்:

| | |
|---|---|
| சொத்துப்பாதுகாப்புக்குழு | நிதிக்குழு |
| செங்குந்தமித்திரன் ஒருங்கிணைப்புக் குழு | தீர்மானக்குழு |
| கொள்கை பரப்புச் செயலாளர்கள் குழு | சட்டதிட்டத் திருத்தக்குழு |
| ஒழுங்கு நடவடிக்கைக் குழு | சமுதாய வளர்ச்சிக் குழு |

போன்ற அணிகள் மற்றும் குழுக்களில் இணைந்து பணியாற்ற விருப்பம் உள்ளவர்கள் தங்கள் மாவட்டத் தலைவரின் ஒப்புதலுடன் **31.08.2020**-க்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு கடிதம் அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

**பொதுச்செயலாளர்**
**தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்**
**வள்ளல் சபாபதி மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி வளாகம்**
**25, ஆரிங்டன் சாலை (பச்சையப்பன் கல்லூரி பின்புறம்),**
**சென்னை - 600 030.**
**தொலைபேசி: 044 - 42957999, 26680482**

## தலைமைச் சங்கம் மற்றும் மித்திரனுக்கு தபால் அனுப்புவோர் கவனத்திற்கு

கொரோனா நோய் தொற்று ஊரடங்கு காரணமாகவும், தலைமைச் சங்க மேலாளர் உடல் நலம் குன்றி மருத்துவ விடுப்பில் சென்றுள்ளதாலும் தற்போது செங்குந்தர் மாளிகை அலுவலகப் பணிகள் வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் செயல்பட தொடங்கியுள்ளன. ஆகவே நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பெயருக்கு அனுப்பும் கடிதங்கள், படிவங்கள், பார்சல்கள் மற்றும் சந்தாக்கள் அனைத்தும் மறு அறிவிப்பு வரும் வரையில் கீழ்க்கண்ட பள்ளி முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தலைவர் / பொதுச்செயலாளர்**
**தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்**
**வள்ளல் சபாபதி மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி வளாகம்**
**25, ஆரிங்டன் சாலை (பச்சையப்பன் கல்லூரி பின்புறம்), சென்னை – 600 030.**
**தொலைபேசி: 044 – 42957999, 26680482**

## மாவட்ட சங்கங்கள் கவனத்திற்கு

தலைமைச் சங்கம் அனுப்பிய கொரோனா நிவாரணத் தொகை பெற்றுக் கொண்ட மாவட்டத் தலைவர் & நிர்வாகிகள் அப்பணியை சிறப்பாக முடித்திருப்பீர்கள் என்று நம்புகின்றோம்.

ஒப்புதல் கடிதம் மற்றும் நிவாரணப் பணிகளை முழுமையாக செய்தி மற்றும் போட்டோக்களை அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

செங்குந்தமித்திரன் சந்தாதாரர்கள் முகவரி மாற்றம் , பிழை திருத்தம் மற்றும் காலமானவர்களின் விவரங்களைக் கோரியிருந்தோம். மாவட்டச் சங்கங்கள் மேற்படி விவரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் 10 ஆண்டுகளுக்கு மேலாக செங்குந்தமித்திரன் இதழ் பெறும் சந்தாதாரர்கள் ரூ.1000 /= செலுத்தி உடன் புதுப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சங்கங்களின் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் சங்கப் பதிவினை புதுப்பிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக இறந்துபோன உறுப்பினர்களின் பட்டியல் நாளது தேதி வரை கோரப்பட்டுள்ளது. அவற்றை அந்தந்த மாவட்ட நிர்வாகிகள் அந்தந்த கிளைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு விவரங்களை சேகரித்து விரைந்து தலைமைச் சங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

**- பொதுச்செயலாளர்**

# பொது அறிவிப்பு

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிர்வாகக்குழு அனுமதி பெறாமல் எந்த ஒரு தனி நபரோ , கூட்டமைப்போ, இயக்கமோ தலைமைச் சங்கத்திற்குச் சொந்தமான பெயர், கொடி, சேவல், வேல், குந்தம் போன்ற சின்னங்களைப் பயன்படுத்தக் கூடாது. சமூக வலைதளங்களால் பராமரிக்கப்படும் முகநூல், புலனம், தொலைவரி, மின் அஞ்சல் ( Facebook, WhatsApp, Telegram, Email ) ஆகியவற்றில் மேலே கண்ட சின்னங்களைப் பயன்படுத்தக் கூடாது. மீறி பயன்படுத்துபவர்கள் மீது சங்கத்தின் சட்ட விதிகளுக்குட்பட்டு நடவடிக்கை எடுக்கவும், தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கவும் நேரிடும் என்று எச்சரிக்கைப்படுகின்றது.

- பொதுச்செயலாளர்

# நன்கொடைகள் தொடர்பான அறிவிப்பு

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பெயர், கொடி மற்றும் பதவியைப் பயன்படுத்தி யாரும் தனிபட்ட முறையில் நன்கொடைகளையும், பொருட்களையும் பெறக்கூடாது என்றும், நன்கொடைகள் மற்றும் பொருட்கள் அளிக்க விருப்பம் இருப்பின் தலைமைச் சங்கத்திற்கு அளித்து சங்க வளர்ச்சியிலும், சமுதாய வளர்ச்சியிலும் தங்களையும் இணைத்துக் கொள்ள அன்புடன் வேண்டுகின்றோம்.

பாரதிதாசன் கல்வி அறக்கட்டளை மூலம் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே.

நடப்புக் கல்வி ஆண்டிற்கு மாணவர்கள் பரிசளிப்புக்கான நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன.

- பொதுச்செயலாளர்

# மாணவர்களுக்கான அறிவிப்பு

செங்குந்தமித்திரன் இதழில் வெளியிடுவதற்காக +2 வகுப்பு பொதுத் தேர்வு மற்றும் CBSE தேர்வில் 80 % க்கும் அதிகமான மதிப்பெண்கள் எடுத்தவர்கள் தங்களுடைய மதிபெண் பட்டியல் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை அந்தந்த மாவட்ட செயற்குழு உறுப்பினர்களின் பரிந்துரையுடன் வள்ளல் சபாபதி மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி சென்னை முகவரிக்கு 15.08.2020 க்குள் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

- பொதுச்செயலாளர்

# பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளை

# கல்வி நிதியளிக்க வேண்டுகோள்

தமிழ்நாடு மாநில அரசு பாடத்திட்டம் +2 தேர்வில் 2019 - 2020ம் கல்வி ஆண்டு தேர்ச்சி பெற்ற நமது செங்குந்த மாணவர்களுக்கு பரிசுத்தொகைகள் தலைமைச் சங்கத்தின் சார்பில் மாநில அளவிலும், மண்டல அளவிலும் வழங்கப்படுவதற்கு நன்கொடையாளர்கள், தொழிலதிபர்கள், தன்னார்வலர்கள், மாநில, மாவட்ட, கிளைச் சங்க மற்றும் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரிடமிருந்தும் அறக்கட்டளைகள் (Endowments) வரவேற்கப்படுகின்றது.

## பனிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான பரிசுத்தொகை விபரம்

| நிலைகள் | மாநில அளவில் | மண்டல அளவில் |
|---|---|---|
| முதல் பரிசு | ரூ. 10,000 | ரூ. 7,500 |
| இரண்டாம் பரிசு | ரூ. 7,500 | ரூ. 5,000 |
| மூன்றாம் பரிசு | ரூ. 5,000 | ரூ. 2,500 |
| ஆறுதல் பரிசு | ரூ. 2,500 | ரூ. 2,000 |
| | ரூ. 25,000 | ரூ.17,000 |

மொத்த மண்டலங்கள் 5 மண்டலத்திற்கான பரிசுத் தொகை 17000 X 5 = ரூ. 85,000

மாநிலம் - ரூ. 25,000 + மண்டலங்களுக்கு ரூ. 85,000 மொத்தப் பரிசுத்தொகை = ரூ. 1,10,000

ஆண்டிற்கு தோராயமாக **ரூ. 1,10,000/=** பரிசுத் தொகை தேவைப்படுகின்றது.

இதற்கு வேண்டிய வைப்புத் தொகை **ரூ.20 இலட்சம்**

கீழ்க்கண்டவாறு அறக்கட்டளைகள் (Endowments) வரவேற்கப்படுகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1,00,000 | X | 5 நன்கொடையாளர்கள் | = | ரூ. | 5,00,000 |
| 50,000 | X | 12 நன்கொடையாளர்கள் | = | ரூ. | 6,00,000 |
| 25,000 | X | 20 நன்கொடையாளர்கள் | = | ரூ. | 5,00,000 |
| 10,000 | X | 25 நன்கொடையாளர்கள் | = | ரூ. | 2,50,000 |
| 5,000 | X | 30 நன்கொடையாளர்கள் | = | ரூ. | 1,50,000 |
| | | | | ரூ. | 20,00,000 |

**நன்கொடைகள் அளிக்கப்பட வேண்டிய கணக்கு எண் விவரங்கள் :**

**Pavendar Bharathidasan Arakkattalai**

**A/c. No. : 420141716** **Bank : Indin Bank**

**Branch : MGT Branch, Thambu St Chennai** **IFSC : IDIB000M002**

**இப்படிக்கு,**

**தலைவர் மற்றும் நிர்வாகிகள், பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளை**



தெய்வத்திரு. **கே.எம்.கோவிந்தராசனார்** அவர்கள்

நிறுவனர் : கே.எம்.ஜி. கல்வி நிறுவனங்கள்
குடியேற்றம் நகராட்சி முன்னாள் சேர்மன் (1964-1969)
1993-ஆம் ஆண்டு குடியேற்றம் நகரில் 2 நாட்கள் நடைபெற்ற
அகில உலக செங்குந்தர் மகாஜன சங்கத்தின்
மாபெரும் மாநாட்டின் வரவேற்புக்குழு தலைவர்

## திருவள்ளுவர் தொடக்கப்பள்ளி
## திருவள்ளுவர் மேனிலைப் பள்ளி
## கே.எம்.ஜி. கல்வியியல் கல்லூரி
## கே.எம்.ஜி. கலை & அறிவியல் கல்லூரி

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் நிரந்தர இணைவு பெற்றது.
பல்கலைக்கழக மானியக்குழுவால் 2(f) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது.
தேசிய தர மதிப்பீட்டுக் குழுவால் (NAAC) B+ தர மதிப்பீடு பெற்றது.

### இளநிலை (UG)

- **B.A** - ஆங்கிலம்
- **B.B.A** - வணிக ஆள்முறையியல்
- **B.Com(General)** - வணிகவியல்
- **B.Com(CA)** - கணினி பயன்பாட்டு வணிகவியல்
- **B.C.A** - கணினி பயன்பாட்டியல்
- **B.Sc** - கணினி அறிவியல்
- **B.Sc** - உயிர்வேதியியல்
- **B.Sc** - நுண்ணுயிரியல்
- **B.Sc** - வேதியியல்
- **B.Sc** - கணிதம்

### முதுநிலை (PG)

- **M.A** - ஆங்கிலம்
- **M.Com(General)** - வணிகவியல்
- **M.Com(CA)** - கணினி பயன்பாட்டு வணிகவியல்
- **M.Sc** - உயிர்வேதியியல்
- **M.Sc** - தகவல் தொழில்நுட்பவியல்
- **M.Sc** - கணிதம்
- **M.Sc** - வேதியியல்
- **M.Sc** - பயன்பாட்டு நுண்ணுயிரியல்
- **M.B.A** -

### ஆய்வியல் நிறைஞர் (M.Phil)

- **M.Phil** - வணிகவியல்
- **M.Phil** - உயிர்வேதியியல்
- **M.Phil** - கணினி அறிவியல்
- **M.Phil** - கணிதம்
- **M.Phil** - வேதியியல்

### முனைவர் பட்டப்படிப்பு (Ph.D)

- **Ph.D** - வணிகவியல்
- **Ph.D** - உயிர்வேதியியல்
- **Ph.D** - நுண்ணுயிரியல்
- **Ph.D** - வேதியியல்



## கே.எம்.ஜி கல்வி நிறுவனங்களின் நிர்வாகக் குழு



**K.M.G.பாலசுப்பிரமணியன்**



**K.M.G.சுந்தரவதனம்** B.A.,B.G.L.,



**K.M.G.இராஜேந்திரன்** B.Sc.,M.L.,
வழக்கறிஞர்



**K.M.G.முத்துக்குமார்** B.Com.,




# புதிய கல்விக் கொள்கையில் கொண்டு வரப்படும் புதிய மாற்றங்கள்:

- 2030க்குள் பள்ளிக் கல்வியில் 100 சதவீத ஒட்டுமொத்த சேர்க்கை வீதத்துடன் மழலையர் கல்வி முதல் இடைநிலைக் கல்வி வரை ஒரே மாதிரியான கல்வி முறையை அறிமுகப்படுத்தப்படும். இது அனைவருக்கும் கல்வி என்பது உறுதி செய்யப்படும்.
- பள்ளிக்குச் செல்லாத 2 கோடி குழந்தைகளை, மீண்டும் கல்வி நீரோட்டத்திற்குக் கொண்டுவர தேசிய கல்வித் கொள்கை 2020 உதவும்.

## பள்ளிக்கூடப் பாடத்திட்டம் மற்றும் கற்பித்தல் சீர்திருத்தங்கள்

- 8 வயது வரையிலான குழந்தைகளுக்கு முன் குழந்தைப்பருவ கவனிப்பு மற்றும் கல்விக்கான தேசியப் பாடத்திட்டம் மற்றும் கற்பித்தல் கட்டமைப்பை (National Curricular and Pedagogical Framework for Early Childhood Care and Education - NCPFECCE) தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT) உருவாக்கும்.
- தற்போதுள்ள 10 + 2 பாடத்திட்ட முறை மாற்றப்பட்டு, முறையே 3-8, 8-11, 11-14 மற்றும் 14-18 வயதுக்கேற்ற 5 + 3 + 3 + 4 ஆண்டு பாடத்திட்ட முறை அறிமுகப்படுத்தப்படும்.
- அடிப்படை எழுத்தறிவு மற்றும் கணக்கறிவுடன், கடுமையான பிரிவினை இல்லாத பாடமுறை, பாடத்திட்டம் சாரா அம்சங்கள், பள்ளி அளவிலேயே தொழிற்கல்வி பயிற்றுவித்தலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.
- கல்லூரிகளுக்கு தரம் வாரியாக தன்னாட்சி வழங்குவதன் மூலம் 15 ஆண்டுகளில் இணைவு முறை படிப்படியாக அகற்றப்படும்.
- அனைத்து தொடக்கப் பள்ளிகளிலும் 2025-க்குள் 3-ஆம் நிலை வரை அனைவரும் பயில ஏதுவாக, உலகளாவிய அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண் அறிவு பெறுவதற்கான திட்டத்தை செயல்படுத்த மாநில அரசுகள் தயாராக வேண்டும்.
- தேசிய புத்தக மேம்பாட்டுக் கொள்கை ஒன்றும் வகுக்கப்பட வேண்டும்.

## பன்மொழி மற்றும் மொழியின் ஆற்றல்

- குறைந்தபட்சம் 5-ஆம் வகுப்பு வரையிலும், ஆனால் 8-ஆம் வகுப்பு மற்றும் அதற்கு

மேலும் முன்னுரிமை அடிப்படையிலும் , தாய்மொழி/ உள்ளூர் மொழி/ பிராந்திய மொழி , பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என கொள்கை வலியுறுத்துகிறது.

- இந்தியாவின் இதர செம்மொழிகள் மற்றும் இலக்கியங்களும் விருப்பப் பாடங்களாக இருக்கும். எந்த மாணவர் மீதும் எந்த மொழியும் திணிக்கப்படமாட்டாது.

## மதிப்பீட்டு மற்றும் இதர சீர்திருத்தங்கள்

- மதிப்பீட்டு முறையில், மதிப்பெண் அட்டை, கற்றல் விளைவுகளை அடைய ஏதுவாக, மாணவர்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல் உள்ளிட்ட 360 டிகிரி ஒட்டுமொத்த சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.
- புதிய கல்வி கொள்கை 2020 , சுருக்கமான மதிப்பீட்டிலிருந்து , வழக்கமான , முறையான மதிப்பீட்டுக்கு மாறுவதை எதிர்நோக்குகிறது. இது ஆய்வுகள், விமர்சன சிந்தனை, கருத்தியல் தெளிவு போன்ற உயர் திறன்களுக்கு ஏற்ற வகையில் ,திறன் அடிப்படையிலான, கற்றல் மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கிறது.
- எம்.பில். படிப்பு நிறுத்தப்படுகிறது.
- சட்டம், மருத்துவப் படிப்புகளைத் தவிர்த்து உயர்கல்விக்கான அமைப்புகளை ஒழுங்குபடுத்த வாரியம் அமைக்கப்படும்.
- தேசியத் தேர்வுகள் முகமை சார்பில் அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் மாணவர் சேர்க்கைக்குஒரே நுழைவுத் தேர்வு வைக்கப்படும். இது விருப்பத் தேர்வு மட்டுமே, கட்டாயமல்ல.
- பொறியியல் போன்ற உயர்கல்வி படிப்புகளில் மாணவர்கள் விடுப்பு எடுத்துக்கொண்டு மீண்டும் படிக்கலாம்.

## சமமான மற்றும் உள்ளடக்கிய கல்வி

- புதிய கல்வி கொள்கை 2020, எந்தக் குழந்தையும் பிறந்த சூழ்நிலை காரணமாகவோ அல்லது பின்புலம் காரணமாகவோ ,கற்பதுடன் சிறந்து விளங்கும், எந்த வாய்ப்பையும் இழந்துவிடக் கூடாது என்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பாலினம், சமூக-கலாச்சாரம், புவியியல் அடையாளங்கள், உடல் குறைபாடுகள் உள்பட சமூக, பொருளாதார ரீதியில் பின்தங்கிய குழுக்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படும்.
- பின்தங்கிய பகுதிகள் மற்றும் குழுக்களுக்காக பாலின உள்ளடக்க நிதி, சிறப்புக் கல்வி மண்டலங்கள் அமைப்பதும் இதில் அடங்கும். உடல் குறைபாடு உள்ள குழந்தைகள், வழக்கமான பள்ளிப்படிப்பை அடிப்படையிலிருந்து உயர் கல்வி வரை முழுமையாக மேற்கொள்ள இது வழிவகுக்கும்.
- முழுமையான உடல் குறைபாட்டுப் பயிற்சி, ஆதார மையங்கள், வசதிகள், உதவிகரமான கருவிகள், பொருத்தமான தொழில்நுட்ப அடிப்படையிலான உபகரணங்கள், அவர்களது தேவைக்குப் பொருத்தமான இதர பொறிமுறை ஆதரவு ஆகியவற்றுடன் கல்வி கற்பிப்போரின் உதவியும் இதில் இருக்கும்.

## வலுவான ஆசிரியர் சேர்க்கை மற்றும் தொழில் பாதை

- ஆசிரியர்கள், வலுவான, வெளிப்படையான நடைமுறைகளின் அடிப்படையில் பணியமர்த்தப்படுவார்கள்.
- தகுதி அடிப்படையிலும், பல ஆதார,

கால அளவிலான செயல்திறன் மதிப்பீடு, கல்வியியல் நிர்வாகிகள் அல்லது ஆசிரிய கற்பிப்பாளர்களாக உயரும் வகையிலான முன்னேற்ற வழிமுறைகளின்படியும், பதவி உயர்வு இருக்கும்.

## ஒழுங்குமுறை

- மருத்துவ மற்றும் சட்டப் படிப்புகளைத் தவிர ஒட்டுமொத்த உயர் கல்விக்கும் ஒரே முதன்மை அமைப்பாக இந்திய உயர் கல்வி ஆணையம் அமைக்கப்படும். இந்திய உயர் கல்வி ஆணையம் நான்கு பிரிவுகளைக் கொண்டிருக்கும்.
- தொழில்நுட்பத்தின் உதவியுடன் முகமில்லா இடையீடு மூலமாக செயல்படும் இந்திய உயர் கல்வி ஆணையம், விதிகள் மற்றும் தரங்களைப் பின்பற்றாத உயர்கல்வி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கும்.
- ஒழுங்குமுறை, அங்கீகாரம் மற்றும் கல்வித் தரத்தில் அரசு மற்றும் தனியார் உயர் கல்வி நிறுவனங்கள் ஒரே மாதிரியான விதிகளின் கீழ் நிர்வகிக்கப்படும்.

## நெறிமுறைப்படுத்தப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு

- உயர்தரக் கற்றல், ஆய்வு மற்றும் சமூகத் தொடர்பை வழங்கும் மிகப்பெரிய, நல்ல வளங்களையுடய, துடிப்பான பல்துறை நிறுவனங்களாக உயர்கல்வி நிறுவனங்கள் மாற்றியமைக்கப்படும்.
- ஆய்வில் அதிக கவனம் செலுத்தும் பல்கலைக்கழகங்கள், கற்பித்தலில் அதிக கவனம் செலுத்தும் பல்கலைக்கழங்கள் மற்றும் தன்னாட்சி பெற்ற பட்டம் வழங்கும் கல்லூரிகள் என பல்கலைக்கழகத்துக்கான விளக்கம் பல்வேறு கல்வி நிறுவனங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.
- கல்லூரிகளுக்கான இணைப்பு அனுமதி 15 வருடங்களில் காலாவதி ஆகும் மற்றும் கல்லூரிகளுக்கு தன்னாட்சியை கட்டம் கட்டமாக படிப்படியாக வழங்குவதற்காக பல படிநிலைகளைக் கொண்ட ஒரு அமைப்பு உருவாக்கப்படும். சில காலத்துக்கு பிறகு, ஒவ்வொரு கல்லூரியையும் தன்னாட்சியுடைய பட்டங்களை வழங்கும் கல்லூரியாகவோ அல்லது ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாகவோ மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## பள்ளி நிர்வாகம்

- பள்ளிகள் வளாகங்களாகவோ, தொகுப்புகளாகவோ அமைக்கப்படும். உள்கட்டமைப்பு, கல்வி நூலகங்கள், வலுவான தொழில்முறை ஆசிரியர் சமூகம் உள்ளிட்ட அனைத்து வளங்களும் கிடைப்பதை உறுதி செய்யும் விதத்தில், நிர்வாகத்தின் அடிப்படை அலகாக அது இருக்கும்.

## கல்விக்கு நிதியுதவி

- கல்வித் துறையில் பொதுமுதலீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தை விரைவில் எட்ட மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து பணியாற்றும்.
- 2.5 லட்சம் கிராமப் பஞ்சாயத்துகள், 6600 வட்டங்கள், 6000 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், 676 மாவட்டங்கள் ஆகியவற்றில் இருந்து 2 லட்சத்துக்கும் அதிகமான ஆலோசனைகளைப் பெற்று முன்னெப்போதும் இல்லாத அளவிலான ஆலோசனை செயல்முறையுடன் தேசிய கல்விக் கொள்கை 2020 வடிவமைக்கப்பட்டுள்ளது.

தகவல் உதவி: பிஐபி

# மீண்டும் நிவாரணம்



தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் அளித்த கொரோனா நிவாரண நிதியுடன் மதுரை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்கமும் நிதி சேர்த்து மதுரை மாவட்டத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் நிவாரணம் சுமார் 200 நபர்களுக்கு பலசரக்குப் பொருட்கள் மாவட்ட சங்க அலுவலகத்தில் வழங்கப்பட்டது.

# பாப்பாரபட்டியில் நிவாரண உதவிகள் வழங்கும் நிகழ்வு



பாப்பாரபட்டி செங்குந்தர் சமுதாய கூடத்தில் 11-07-2020 அன்று மாவட்ட செங்குந்தர் சங்கமும் மற்றும் பாப்பாரபட்டி செங்குந்தர் கிளை சங்கமும் இணைந்து கணவனை இழந்த 50 பெண்களுக்கு ரூபாய் 500/- மற்றும் 10 கிலோ அரிசி, 1 கிலோ மொச்சைக் கொட்டையும் மற்றும் 90 ஏழை நெசவாளர் குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி, 1 கிலோ மொச்சைக்கொட்டையும் ரூபாய் 95000 மதிப்பில் வழங்கப்பட்டது.

விழாவிற்கு திரு.M.K.S.உத்தண்டி தலைமையிலும் மற்றும் மாவட்ட செயலாளர் திரு. P.சச்சிதானந்தம், மாவட்ட பொருளாளர் திருநாவுக்கரசு, A. பாபு முன்னாள் பேரூராட்சி தலைவர், திருவேங்கடம் முன்னாள் பேரூராட்சி தலைவர், P.P.சுப்பிரமணியம் கிளைத் தலைவர், V.சண்முகம் முன்னாள் செயற்குழு உறுப்பினர், A.வரதராஜன் கிளை தலைவர், தேவராஜ் கிளை பொருளாளர், ஞானசேகரன் தர்மகர்த்தா பழைய கோவில், S.R. முருகேசன் செட்டிகாரர், ரங்கசாமி காரியகாரர், புதிய கோவில் குணசேகரன் செட்டிகாரர், பொன்னுசாமி காரியகாரர் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். அனைவரும் ஒருங்கிணைந்து திரு V.சண்முகம் மற்றும் கிளை சங்கத்தினர் சிறப்பாக ஏற்பாடுகளை செய்தனர். மாவட்ட தலைவர் அவர்களை வெகுவாகப் பாராட்டினார்.

# உங்கள் பக்கம்

அன்பும், பண்பும், ஆன்மீகமும், வீரமும், விவேகமும் நிறைந்த செங்குந்த சொந்தங்களுக்கு, வணக்கம்.

ஆன்மீக அரசியல், இது இன்று தமிழ்நாட்டில் உரக்கக் கேட்கும் சொற்கள் ஆகும். தமிழகத்தில் மட்டுமே அங்கு தொட்டு, இங்கு தொட்டு கடைசியில் தமிழர்களின் ஆன்மீகத்தை கொச்சைப்படுத்தாமல் சிலரால் இருக்க முடியவில்லை. தமிழகத்தில் பல்வேறு சாதி அமைப்புகள் இருந்தாலும், நம்மைப் போன்று அடக்கமாக இருப்பவர்கள் குறைவு. அதனால்தான் எங்கு, யாராலும் சாதி கணக்கெடுப்பு எடுத்துக் கொடுத்தாலும் அதில் நம்மவர்களை சேர்க்கமாட்டார்கள். முதல் ஐந்து சாதி அமைப்புகளில் நாமும் ஒருவர் என்பதை எவரும் சொல்லமாட்டார்கள். நாமும் அதைக் கண்டு கொள்ளமாட்டோம். இப்படியே காலத்தைக் கடத்தி நமக்கான ஒதுக்கீட்டை எங்கும் எதிலும் கேட்காமல் நிறைய இழந்திருக்கிறோம். இனி இழப்பதற்கு ஒன்றுமில்லை. இது இயலாமையோ, முயலாமையோ இல்லை. நாமும் ஒதுக்கப்பட்டுக் கொண்டே இருந்திருக்கின்றோம், இருக்கின்றோம்.

இந்துக் கடவுள்கைளையும், மத நம்பிக்கைகளையும் சீண்டிப் பார்ப்பதே சிலருக்கு வேலையாகிவிட்டது. தற்பொழுது "கந்த சஷ்டி கவசம்" பற்றிய தவறான, கீழ்த்தரமான விமர்சனங்களைப் பரப்பினர். பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு அது தடுக்கப்பட்டது. இது போன்ற நடைமுறைகளைப் பார்க்கும்பொழுது




அமைதியாக இருப்பவர்களை வம்புக்கு இழுப்பதே வேலை என்று சில கூட்டங்கள் இருக்கின்றன. இதற்கு சில அரசியல் கட்சிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவிகள் புரிகின்றார்கள்.

வேல் எங்களுக்கு கடவுள்தான் ! கந்தர் சஷ்டி கவசம் வேதம்தான்! இதில் தலையிடுவதற்கு நீங்கள் யார்?

*சாது மிரண்டால் காடு கொள்ளாது - இது பழமொழி.*

*சாதுக்கள் மிரண்டால் நாடு கொள்ளாது - இது புதுமொழி.*

**இனி எங்கள் வழி “ஆன்மீக அரசியல்” வழிதான்.**

*புது வெள்ளம் பாயப் போகின்றது. அதற்கு அணை போடமுடியாது,*

*புயலெனப் புறப்பட்டாயிற்று வேல் படை! குந்தர் படை!*



மீண்டும் சந்திப்போம்

பிரியமுடன்...

KPK செல்வராஜ்




ஜெ.எஸ். இளைஞர் படை சார்பாக கொரோனா தடுப்பு மருந்தாக ஹோமியோபதி ஆர்சனிக் ஆல்பம் 30c மாத்திரைகள் செங்குந்தர் மகாஜன சங்க ஈரோடு மாவட்டச் செயலாளர் சோழா மு.ஆசைத்தம்பி, விகோப் டெக்ஸ் தலைவர் யுனிவர்சல் K.N.நந்தகோபால், மொண்டிபாளையம் பூதப்பாடி கிளை குருவரெட்டியூர் கிளை, ஆலம்பாளையம் கிளை, வெள்ளித்திருப்பூர் கிளை, அந்தியூர் கிளை, எண்ணமங்கலம் கிளை செங்குந்தர் சொந்தங்கள் முழுவதுமாக மொத்தம் 1000 செங்குந்தர் குடும்பங்களுக்கு கொடுப்பதற்காக கிளை சங்க நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஜெ.எஸ். இளைஞர் படை செங்குந்தர் குல மக்களுக்கு அரிசி வழங்கியபொழுது காய்கறி மளிகைப் பொருள் வழங்கிய கிளை சங்க நிர்வாகிகளுக்கு மரியாதை நிமிர்த்தமாக கைத்தறி ஆடை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

நிகழ்வில் கவிமாமணி சேலம் பாலன்









ஐயா, செயற்குழு உறுப்பினர்கள் கிருஷ்ணசாமி, வஜ்ரவேல் சிவகிரி இளைஞர் கிளை தலைவர் S.N.K.யோகானந்தன் B.COM(CA), சிவகிரி இளைஞர் கிளை துணைத் தலைவர் செங்குந்தர் நகர் கிளை வைரம் BOXER கிருபா கலந்து கொண்டனர். அனைத்து செங்குந்தர் குடும்பங்களுக்கும் ஆர்சனிக் ஆல்பம் 30c ஹோமியோபதி மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டது








## தூத்துக்குடி மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்கத்தின் சார்பாக

## கொரோனா நிவாரணம் வழங்கிய வரவு செலவு

| வ. எண் | ஊர் | நிவாரணம் வழங்கியவர்கள் | வரவு | செலவு |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் | 50,000 | |
| 2. | மதுரை | V.S.S.R. காந்தி, மாநில பொருளாளர் வரவு | 30,000 | |
| 3. | திட்டக்குடி | P.T. ராஜன் தலைமை சங்க செயற்குழு உறுப்பினர் | 30,000 | |
| 4. | ஏரல் | லெ. ஆனந்த முதலியார் ஜவுளி கடை | 15,000 | |
| 5. | கோவில்பட்டி | K.S. செல்வராஜ், தலைமைச் சங்க செயற்குழு உறுப்பினர் | 10,000 | |
| 6. | சென்னை | சென்னை வாழ் ஈராச்சி, செமப்புதூர் செங்குந்தர் சங்கம் சார்பாக | 10,000 | |
| 7. | எட்டையபுரம் | V.S.S. சண்முகவேல், ஆசிரியர், தூத்துக்குடி மாவட்ட கௌரவ தலைவர் | 10,000 | |
| 8. | எட்டையபுரம் | JCB. S.சங்கரநாராயணன், மாவட்ட தலைவர் | 7,000 | |
| 9. | எட்டையபுரம் | C.K. முத்தையா, தலைமை சங்க செயற்குழு உறுப்பினர் | 7,000 | |
| 10. | கோவில்பட்டி | M. ராமலிங்கம், தூத்துக்குடி மாவட்ட செயலாளர் | 7,000 | |
| 11. | தூத்துக்குடி | A. ராமசாமி B.E., | 5,000 | |
| 12. | சென்னை | P. பாலகிருஷ்ணன் மைலாப்பூர் | 5,000 | |
| 13. | சென்னை | க. சூரியராஜ் மைலாப்பூர் | 5,000 | |
| 14. | சென்னை | A. அய்யனார் ஆயிரம் விளக்கு | 5,000 | |
| 15. | சென்னை | S. பூசாரி முருகன் மந்தைவெளி | 5,000 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 16. | சென்னை | M.S. ராஜா திருவான்மியூர் | 5,000 | |
| 17. | எட்டையபுரம் | T.R.S.A.A. அய்யனார் | 5,000 | |
| 18. | எட்டையபுரம் | P. ராமசாமி B.E., | 5,000 | |
| 19. | எட்டையபுரம் | L. கண்ணன் | 5,000 | |
| 20. | எட்டையபுரம் | L. கோபால் | 5,000 | |
| 21. | எட்டையபுரம் | C.K. கணேசன் | 5,000 | |
| 22. | எட்டையபுரம் | V.T.C. சுந்தரபாண்டியன் | 5,000 | |
| 23. | எட்டையபுரம் | S. முருகதாஸ் | 5,000 | |
| 24. | எட்டையபுரம் | அ. சுந்தர அய்யனார் | 5,000 | |
| 25. | எட்டையபுரம் | R. அய்யனார் ஆசிரியர் | 5,000 | |
| 26. | எட்டையபுரம் | R. பழனிக்குமார் ஆசிரியர். | 5,000 | |
| 27. | எட்டையபுரம் | முத்துக்குமார் VAO | 5,000 | |
| 28. | ஏரல் | P. மாரிமுத்து KC & Co | 5,000 | |
| 29. | எட்டையபுரம் | P. மூர்த்தி VAO | 3,000 | |
| 30. | கோவில்பட்டி | ஆதிசங்கரன் | 1,000 | |
| 1. | பயன்பெற்ற பகுதிகள் தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி, ஈராச்சி, செம்மபுதூர், புதியம் புத்தூர், முக்காணி, ஏரல், விளாத்திகுளம், கழுகுமலை, அயன் பொம்மையாபுரம், நாகலாபுரம், கடலையூர், எட்டயபுரம், நடுவிற்பட்டி ஆகிய ஊர்களில் வாழும் 700 செங்குந்தர் குடும்பங்கள் | 700 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ பொன்னி அரிசி | | 2,70,000 |
| | | மொத்தம் | 2,70,000 | 2,70,000 |

# தூத்துக்குடி மாவட்டத்தில் செங்குந்தர்களின் சார்பாக நலிவடைந்த நெசவாளர்களுக்கு கொரோனா நிவாரணம் வழங்கிய விபரம்

| வ. எண் | கொடையாளர் | பகுதி | நபர்கள் | மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|
| 2. | சென்னை வாழ் எட்டையபுரம் பெரிய தெரு செங்குந்தர் சார்பாக. | எட்டையபுரம் பெரிய தெரு செங்குந்தர் சங்கம் | ரூ.1000/- வீதம் பணமாக கொடுத்தது 300 குடும்பம் 340x1000=340000 | 3,40,000 |
| 3. | தெய்வத்திரு ச.சொக்கலிங்கம் முதலியார் நினைவாக அவரது குடும்பத்தார் | எட்டையபுரம் பெரிய தெரு | அரிசி பருப்பு எண்ணெய் 160 பேருக்கு வழங்கியது. | 1,00,000 |
| 4. | ஊர் கணக்குபிள்ளை மா.சின்ன அய்யனார் | எட்டையபுரம் பெரிய தெரு | அரிசி காய்கறி 72 ஏழை எளிய குடும்பங்களுக்கு வழங்கியது | 26,500 |
| 5. | எட்டையபுரம் நடுவிற்பட்டி செங்குந்தர் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்கள் சார்பாக. | எட்டையபுரம் மற்றும் பக்கத்து ஊர் மாணவர்கள் வழங்கியது | அரிசி, பருப்பு, மளிகை, காய்கறிகள் 200 மாணவர்கள் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கியது | 1,20,000 |
| 6. | சண்முக முதலியார் தெரு ஊர் பண்டிலிருந்து கொடுத்தது | எட்டையபுரம் சண்முக முதலியார் தெரு | அரிசி காய்கறி வழங்கியது 60 குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கியது | 72,000 |
| 7. | மேகலிங்க முதலியார் தெரு ஊர் பண்டிலிருந்து கொடுத்தது | எட்டையபுரம் மேகலிங்க முதலியார் தெரு | அரிசி, பருப்பு, மளிகை, காய்கறிகள் 60 குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கியது | 70,000 |
| 8. | சென்னை வாழ் மேலத்தெரு செங்குந்தர் இளைஞரணி சார்பாக | எட்டயபுரம் மேலத்தெரு | அரிசி பை கிகி குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கியது | 73,000 |
| 9. | சென்னை வாழ் நாகலாபுரம் செங்குந்தர் இளைஞர் அணி மற்றும் S.M மூக்கையா சேலம் S.M தர்மராஜ் | நாகலாபுரம் தூத்துக்குடி மாவட்டம் | அரிசி, பருப்பு, காய்கறி நிவாரணம் வழங்கியது | 60,000 |
| 10. | சென்னை வாழ் அயன் பொம்மையாபுரம் செங்குந்தர் மக்களின் சார்பாக | அயன் பொம்மையாபுரம் கிராமம் | ரொக்கம் ரூ அரிசி, பருப்பு ரூ.2000/- மதிப்பில் 70 குடும்பங்களுக்கு | 1,40,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | சென்னை வாழ் அயன் பொம்மையாபுரம் மேற்கு உறவின்முறை செங்குந்தர் மக்களின் சார்பாக | அயன் பொம்மையாபுரம் மேற்கு பகுதி | ரொக்கம் ரூ அரிசி, பருப்பு ரூ.800/- மதிப்பில் 100 குடும்பங்களுக்கு | 80,000 |
| 12. | அயன் பொம்மையாபுரம் P.பாலகிருஷ்ணன் சென்னை | அயன் பொம்மையாபுரம் | ரொக்கம் ரூ.500/- வீதம் 20 குடும்பங்களுக்கு | 10,000 |
| 13. | அயன் பொம்மையாபுரம் செங்குந்தர் ராமலிங்கம் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் | பள்ளி மாணவர் 25 பேர் குடும்பத்தார் | அரிசி மற்றும் மளிகை பொருட்கள் | 16,000 |
| 14. | சென்னை வாழ் கடலையூர் குமரன் தெரு செங்குந்தர் நலச்சங்கம் | கடலையூர் குமரன் தெரு | செங்குந்தர் உறவுகளுக்கு 25 கிலோ அரிசி ஏனையோருக்கு 10 கிலோ அரிசி மற்றும் ஊராட்சி துப்புரவு தொழிலாளர்களுக்கு 10 கிலோ அரிசி 66 குடும்பங்களுக்கு | 66,000 |
| 15. | கடலையூர் குமரன் தெரு அறிஞர் அண்ணா இளைஞரணி சார்பாக | கடலையூர் குமரன் தெரு | அரிசி பருப்பு காய்கறி நிவாரணம் வழங்கியது | 50,000 |
| 16. | சென்னை வாழ் கடலையூர் வடக்குத் தெரு செங்குந்தர் மக்கள் சார்பாக | கடலையூர் வடக்குத் தெரு | அரிசி பருப்பு காய்கறி மளிகை வழங்கியது 28 குடும்பம் | 56,000 |
| 17. | கடலையூர் தெற்குத் தெரு | கடலையூர் தெற்குத் தெரு | 58 குடும்பத்திற்கு அரிசி பருப்பு மளிகை | 41,000 |
| 18. | கடலையூர் தெற்குத் தெரு சென்னை கு.மாரிமுத்து சார்பாக | கடலையூர் தெற்குத் தெரு | 58 குடும்பத்திற்கு ரூபாய் 500 வீதம் நோக்கம் பணம் கொடுத்தது | 29,000 |
| 19. | கடலையூர் செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி மற்றும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் | உயர்நிலைப்பள்ளி மற்றும் தொடக்கப் பள்ளியில் பயிலும் 433 மாணவர்கள் குடும்பத்தார் | அரிசி மற்றும் மளிகை பொருட்கள் | 1,70,000 |
| | | | ஆக மொத்தம் | 17,89,500 |








# செய்யாறு குறிஞ்சி குகன் மேட்ரிமோனி

**(செய்யாறு வட்டச் செங்குந்தர் நலவாழ்வு சங்கத்தால் இயக்கப்படுகிறது)**

**(செங்குந்தர் திருமண தகவல் மையம்)**

**குறிஞ்சி குகன் நிலையம்**

15/2, கோபால் தெரு, கிருபானந்தவாரியார் நகர்,
ரேணு மஹால் அருகில், செய்யாறு – 604 407. தி.மலை மாவட்டம்.
மேலும் தொடர்புக்கு: **04182 - 222784, 89739 32751, 94871 07254**

**www.cheyyarkurinjikuganmatrimony.com**

**E-mail : senguntharsmanamaalai@gmail.com**

அன்புள்ள சொந்தங்களே,

தங்கள் வீட்டில் திருமணத்திற்குக் காத்திருக்கும் வரனின் முழு ஜாதக விபரத்துடன் (Bio Data) + புகைப்படத்தை (Post Card Size) இணைத்து நேரில் (அல்லது) ஆன்லைனில் (Online) பதிவு செய்யுங்கள். பொருத்தமான வரன் உள்ளது. வரனின் திருமணம் முடியும் வரை பதிவு நீடிக்கும்.

திருமணம் நடந்து முடிந்த உடன் நீக்க தகவல் தெரிவிக்கவும்.

**சேவைக் கட்டணம்: ரூ. 1000/- மட்டுமே!**

**CHEYYAR TALUK SENGUNTHAR WELFARE SOCIETY payable - CHEYYAR**
**என்ற பெயருக்கு DD (or) Postal Money Order (or) Indian Overseas Bank (IOB),**
**Cheyyar Branch, A/c No. 189101000007819 IFSC CODE: IOBA0001891**
**NEFT/IMPS Banking ஏதாவது ஒன்றிற்கு சேவை கட்டணம் அனுப்பலாம்.**

**வரன் பார்க்க வாங்க:**
**பகல் 10:00 - 1:00 மாலை 4:00 - 7:00 மணி வரை**

**விடுமுறை: பிரதி சனிக்கிழமை மற்றும் நமது பண்டிகை நாட்கள்.**

# திருநெல்வேலி மாவட்ட சங்க மெய்நிகர் செயலி வழிக் கூட்டம்

5.7.2020 அன்று காலை 10.30 மணியளவில் திட்டமிட்டபடி மெய்நிகர் செயலி வழிக் கூட்டம் (ZOOM Meeting) நடத்தப்பட்டது.

1) அம்பையில் இருந்து பிரம்மதேசம் இடைகால் கிளைகளுக்கும் கல்லிடையிலிருந்து வீரவநல்லூர், சேரன்மகாதேவி கிளைகளுக்கும் தச ஆயுள் உறுப்பினர் படிவம் பெற்று குடும்பத்துக்கு ஒருவரை 2 மாதங்களுக்குள் சேர்க்கவும்.

2) கிளைச்சங்க நிதி திரட்டவும், மாதம் ஒரு முறை தவறாது கூடவும்

3) 25-8-2020 வாரியார் அவதார தினத்தை கொண்டாடவும்

4) கொரோனா முடக்கம் முடிந்தவுடன் கிளையில் ஆண்டு விழா நடத்தி 12ம் வகுப்பில் உயர் மதிப்பெண் பெற்ற மாணவர்களையும், கொரானா மருத்துவ உதவி, பிற உதவி வழங்கிய ஆர்வலர்களை பாராட்டவும் வேண்டும்

5) செங்குந்த மித்திரன் சந்தாதாரர்களைச் சரிபார்த்து விபரம் தெரிவிக்கவும் சந்தா சேர்க்கவும்


6.) 7-8-20 அன்று பேட்டை கூட்டுறவு ஆலை வளாகத்தை பயனுள்ளதும் வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் பயனபடுத்த மாவட்ட ஆட்சியரை சந்தித்து முறையீடு கொடுக்கவும்

7) அணிகளின் அமைப்பாளர்கள் நியமிக்க முன்மொழிவுகள் அனுப்பிடவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.


8) முடக்கம் முடிந்தபின் விரிவான செயற்குழு நடத்திடவும் முடிவு செய்யப்பட்டது

அனைவரையும் வணங்கி சமுதாய முன்னேற்றத்திற்கு உழைத்திட கேட்டுக் கொள்ளப்பட்டது.

30.7.2020 அன்று திருநெல்வேலி மாவட்டத்தின் 8 கிளைகளிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட அஞ்சல் கோரிக்கை அட்டைகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.



மாவட்ட ஆட்சியாளர் அவர்களை
வணக்கம்
பேட்டை கூட்டுறவு நூற்பாலை மற்றும் பழையபேட்டை சொஸைட்டி நிலைத்தையும், கட்டிடங்களையும் வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் சிறிய ஜவுளிப் பூங்கா சிறிய தொழில் பூங்கா, பல் வகைத்திறன் மேம்பாட்டு பயிற்சியையும், ஒருங்கிணைந்த மகளிர் தையலகம், ஆயத்த ஆடைகள் தயாரிப்பு கூடங்கள், விசைத்தறி பட்டுத்தறி கூடங்கள், விற்பனை காட்சியகம் போன்றவற்றிற்கு பயன்படுத்த அரசுக்கு பரிந்துரை செய்து ஆணைகள் பெற்றிட மாவட்ட ஆட்சியர் அவர்களை இருகரம் கூப்பி வணங்கி கேட்டுகொள்கிறோம்
தங்கள் உண்மையுள்ள
M. செண்பகம்
நெசவாளர்



M. செண்பகம் முருகன்
82 சுழுக ரெங்கையன்
கட்டளை தெரு
சந்தான புரம்
பழையபேட்டை

மாவட்ட ஆட்சியாளர்
(தி.லி)
திருநெல்வேலி

# நோய்கள் அண்டாத நம் பாரம்பரிய வாழ்வியல் முறை



மறந்தான்
மறந்தான்
மனிதன் மறந்தான்..
இன்றைக்கு !!!

நோய்கள் அண்டாத
நம்முடைய தற்காப்பான
பழைய வாழ்வியல் முறை!



சாவு வீட்டில் சமைக்க
கூடாது என்றார்கள்.

---

ஏன்?
கிருமிகள் 14 நாட்கள் இறந்த
வீட்டில் வாழலாம். 8:18 AM ✓




தனிமனித ஆரோக்கியம்,
சமூகத்தில் சுத்தம், அண்டை
அயலாரோடு அகலாது
அணுகாது உறவாடுதல்
போன்ற நம் மூதாதையர்
வாழ்வியல் நெறியை
கிண்டலடித்து, திட்டமிட்டு
சிதைத்த மேலைநாட்டு
நாகரிகம் அதற்கான
விலையை இன்று கொடுத்து
கொண்டிருக்கிறது. 8:18 AM ✓



பிறந்தாலோ,இறந்தாலோ
தீட்டு என்று 10, 16 நாட்கள்
தனிமைப்படுத்தினர்.

---ஏன்?

நுண்ணுயிர் கிருமிகள்
தடுத்து நிறுத்தல். 8:18 AM ✓



கழிவறையும்,குளியலறையும்
வீட்டிற்குள் வைக்காமல்
கொல்லைபுறத்தில்
வைத்தார்கள்.

---

ஏன்?
பெயர் வைக்காத கண்ணுக்கு
தெரியாத கிருமிகளை
அழித்தல். 8:18 AM ✓



செருப்பை வீட்டின்
வெளியே விட்டார்கள்.

---ஏன்?


எச்சில் நரவை மூலம் பரவும்
கிருமிகளை தற்காத்தல்.



சலூனுக்கும், சாவுக்கும்
சென்று வந்தால் எதையும்
தொடாமல் குளித்தபின்
வீட்டிற்குள் வந்தார்கள்.

---ஏன்?

தொற்று கிருமிகள்
தொடராமல் இருத்தல்.



இனியாவது இளந்
தலைமுறையினர்
"மூத்தோர் சொல்
வார்த்தையும், முழு
நெல்லிக்காயும் முதலில்
கசக்கும் பின்பு இனிக்கும்"
என்றுணர்ந்து வளமான
வாழ்வு வாழ்தல் நன்று.



பெண்கள் வாசல் பெருக்கி,
சாணம், மஞ்சள் தெளித்து
கோலமிட்டார்கள்.

---

ஏன்?
கிருமி நாசினியாக
பயன்படுத்தி கொள்வதற்கு. 8:18 AM ✓



பெரியோர்கள் வாரம் வாரம்
எண்ணை தேய்த்துக்
குளித்தார்கள்.

---

ஏன்?
உடல் சூட்டைத் தணித்து
சளிக் கிருமிகளை போக்கி
நுரையீரலை தூய்மையாக
வைத்து இருந்தனர். 8:18 AM ✓



மண், செம்பு, வெண்கலம்,
ஈயம் பூசிய பித்தளை
பாத்திரங்களை
உபயோகித்தார்கள்.

---

ஏன்?
கிருமிகள் அண்டாத நோய்
எதிர்ப்பு ஆற்றலுடையது.



பொன்விழா காணும் பாரம்பரியம்
SINCE 1961
50
NATIONAL
SINCE 1961
NATIONAL
COTTON DHOTIES AND SHIRTINGS
MADE WITH 100% SUPER FINE COTTON
NATIONAL KHADI STORES
2/646 A & 2/646 B, VENUS GARDEN,
MANGALAM MAIN ROAD,
ANDIPALAYAM (PO)
TIRUPUR - 641 687
PHONE:0421 2262180, 2262380
FAX:2262124
EMAIL:khadiking@airtelmail.in



# வாழ்வியலில் யோகா

இன்று உலகளவில் புகழ்பெற்றிருக்கும் அலோபதி மருத்துவமாகட்டும், மற்ற பிற வெளிநாட்டு மருத்துவ முறைகளாகட்டும் நோய் ஒரு மனிதனுக்கு வந்தபிறகே அதை நீக்கிக் கொள்வதற்கான வழிமுறைகளை கூறுகிறது. ஆனால் இந்திய மருத்துவ முறையான சித்த மருத்துவம் மற்றும் ஆயுர்வேதம் நோய் வராமலேயே வாழ்நாள் முழுக்க ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கான வழிமுறைகளை முதலில் போதிக்கிறது.

அதாவது ஆரோக்கியமானவர்கள் தொடர்ந்து ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், நோயாளிகள் நோய்களிலிருந்து விடுபடுவதற்கும் உரிய முறைகளை ஆயுர்வேதம் கூறுகிறது. ஆனால் யோகா நோய் வராமல் காப்பதற்கான வழிமுறைகளையும், நோய் வந்த பிறகு அவற்றிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளையும் கூறுவதுடன் ஒழுக்கத்துடன் நல்ல மனிதனாக வாழ்வதற்கான பக்குவத்தையும், மனோபலத்தையும் அளிக்கிறது. இறைத்தன்மையை அடைவதற்கும் வழிகாட்டுகிறது என்பதே யோகாத்தின் ஒரு தனிச்சிறப்பு.

### உடல் தூய்மை:

காலையில் வெறும் வயிற்றோடு ஆசனங்களை செய்யவேண்டும். மலச்சிக்கல் உள்ளவர்கள் காலையில் மூன்று டம்ளர் வெந்நீர் குடித்துவிட்டு 10 நிமிடம் கழித்து ஆசனங்களை செய்யத் துவங்கவேண்டும். சில சுற்றுகள் நிதானமாக சூரிய நமஸ்காரம் செய்து முடிப்பதற்குள் மலம் கழிப்பதற்கான உணர்வுகள் தோன்றும். கழிப்பறைக்கு சென்று மலம் கழித்துவிட்டு வந்து மீண்டும் ஆசனங்களை தொடர்ந்து செய்து முடிக்கவும்.

### குளியல்:

குளிப்பதற்கு முன்போ அல்லது பின்போ ஆசனங்களை செய்யலாம். ஆனால் அரைமணி நேரம் இடைவெளி இருப்பது நல்லது. குளிப்பதற்கு தண்ணீர் பயன்படுத்துவது நல்லது. தண்ணீரில் குளிக்கும் பழக்கமில்லாதவர்கள் வெதுவெதுப்பாய் இருக்கும் நீரில் குளிக்கப் பழகி, பிறகு குளிர்ந்த நீரில் குளிக்க ஆரம்பிக்கலாம். வெளிக்காற்றின் வெப்பத்தால் அதிகமாக பாதிக்கப்படுவது நம் வெளித்தோலை தொடும் மிக நுண்ணிய நரம்புகளாகும். நாம்

தண்ணீரில் குளிக்கும்போது இந்த நரம்புகள் குளிர்ச்சியடைகின்றன. அதனால் நமக்கு அதிக உற்சாகமும் தெம்பும் உண்டாகிறது.

காலையில் குளிர்ந்த நீரில் குளித்த பிறகு ஆசன பயிற்சி செய்தால், உடலை வளைப்பதற்கு சுலபமாக இருக்கும் மற்றும் இரவு படுக்கப்போகும் வரை சுறுசுறுப்பு குறையாமல் இருக்கும்.

## பயிற்சிக்குரிய காலம்:

யோகாப் பயிற்சிக்கு உரிய காலம் விடியற்காலை 4 மணி முதல் 6 மணி வரை ஆகும். இந்த நேரத்தில் இயற்கைச் சூழ்நிலை அமைதியுடனும், சூரிய காந்த அலைகள் நிரம்பியதாகவும் இருக்கும். மற்றும் உடலில் இரைப்பையும், குடல்களும் காலியாக இருப்பதால் மனமும், மூச்சும் அடங்கி பயிற்சியில் அதிக கவனம் செலுத்த உதவுகிறது. காலையில் விரைவாக எழ முடியாதவர்கள் 6 மணிக்கு மேல் 8 மணி வரை செய்யலாம். மாலையில் 5.30 மணிக்கு மேல் 8.00மணி வரை செய்யலாம்.



## சூழ்நிலை:

சுத்தமான காற்று நிறைந்த தூய்மையான அறை யோகாப் பயிற்சிக்கு சிறந்தது. அந்த இடத்தில் உள்ள காற்றில் அதிக வெப்பமோ, குளிர்ச்சியோ இல்லாமல் இருக்கவேண்டும். மனதிற்கு அமைதி தரும் இயற்கை காட்சிகள் உள்ள பூந்தோட்டம் மற்றும் அருவி, நதி போன்ற நீர் நிலைகளின் கரைப்பகுதி போன்ற இடங்களில் பயிற்சி செய்ய வசதி இருந்தால் இன்னும் அதிகமான பயன் கிடைக்கும்.

## இருக்கை:

பயிற்சியை வெறும் தரையில் செய்யக்கூடாது. மேடு பள்ளம் இல்லாத தரையில் ஜமுக்காளம் அல்லது சற்று அழுத்தமான போர்வையை விரித்துப்போட்டு அதன் மேல் பயிற்சி செய்யவும், கட்டிலின் மீதோ, மெத்தையின் மீதோ இருந்து கொண்டு செய்யக்கூடாது.

## உடை மற்றும் அணிகலன்:

இறுக்கமான உடைகளை அணிந்து கொண்டு ஆசனங்களை செய்யக்கூடாது. உடலின் அசைவுகள் இயல்பாக இருக்க தளர்வான உடைகளை அணிந்து செய்வது நல்லது. பெண்கள் சுடிதார் அல்லது குளிக்கும் அங்கிகளை அணிந்து செய்யலாம். ஆண்கள் கோவணம் அல்லது ஜட்டியை அணிந்து செய்யலாம். அதிக குளிர் அல்லது வெப்ப பிரதேசத்தில் உள்ளவர்கள் அதற்கேற்ற உடை அணிந்து செய்யலாம். பயிற்சியின் போது அணியும் ஆடைகளையும், தரைவிரிப்புகளையும் மற்ற காரியங்களுக்கு பயன்படுத்தக்கூடாது. இறுக்கமான உடை, விலாப்பகுதி, இருதயத்தின் துடிப்பு மற்றும் இயல்பான மூச்சுக்கு தொந்தரவை உண்டு பண்ணும்.

## சுவாச இயக்கம்:

ஆசனப்பயிற்சியின் போது மூச்சை மூக்கின் வழியாக நடத்த வேண்டும். வாய்வழியாக நடத்தக்கூடாது. எந்தெந்த ஆசனத்தில் சுவாச இயக்கம் எப்படி இருக்க வேண்டும் என்பதை ஆசனங்களின் செய்முறை பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளபடி கடைபிடிக்க

வேண்டும். பொதுவாக ஆசன நிலையில் மூச்சை ஆழமாகவும், மெதுவாகவும் இழுத்து விடவேண்டும்.

## மன நிலை:

ஆசனங்களை பயிலும்போது மனதை அதில் முழுமையாக ஈடுபடுத்தி உற்சாகத்துடன் செய்ய வேண்டும். மனதினில் வேறு வேலைகளைப் பற்றி சிந்தித்துக் கொண்டு ஆசனங்களை செய்தால், பயிற்சியில் ஏற்படும் பிழைகளை அறியமுடியாது மற்றும் ஆசனத்தினால் உண்டாகும் முழு பலனையும் பெறவோ முடியாது.

## கண்கள்:

புதிதாக ஆசனங்களை பழகும்போது கண்களை திறந்தபடி வைத்துக்கொண்டு உடல் வளைவுகளை கவனித்து அதை சரிபடுத்த முயலவும், ஆசன நிலைகளில் சரியாக, அசையாமல் நீண்ட நேரம் நிலைத்திருக்கக் கூடிய அளவு முன்னேறிய பிறகு புறக்கண்களை மூடிக்கொண்டு மனக்கண்களால் ஆழந்த உள் உணர்வோடு பார்த்து செய்யலாம்.

## ஆசனம் செய்யவேண்டிய முறை:

ஆசனங்களை வேகமாக, அவசரத்துடன் செய்யக்கூடாது. நிதானமாக உடல், மனம், மூச்சு இவை மூன்றும் ஒன்றித்த நிலையில் ஆசனங்களை செய்ய முயற்சிக்க வேண்டும்.

ஆரம்பத்தில் ஒவ்வொரு ஆசனத்தையும் ஒரு சில வினாடிகள் மட்டுமே செய்யவேண்டும். தொடர்ந்த பயிற்சியில் உடலின் ஆற்றலுக்கு ஏற்ப நேரத்தை கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்த வேண்டும். எடுத்தவுடனேயே முரட்டுத்தனமாக அதிக நேரம் ஆசனத்தில் நிலைத்திருக்க முயலக்கூடாது. எந்த ஒரு ஆசன நிலையின் உச்சத்தையும் பயிற்சி செய்ய ஆரம்பித்தவுடனேயே அடைய முயலாதீர்கள். உடலின் வளையும் தன்மைக்கு ஏற்ப சிறிது சிறிதாக அடைவதே சிறந்த வழி.

ஒவ்வொரு ஆசன நிலையிலும் உடலின் எந்தப் பகுதி அழுத்தப்பட்டு மடக்கவோ அல்லது நீட்டப்படுகிறதோ அந்த இடத்திலும், அந்தப் பகுதியில் உள்ள சக்கரத்தின் மீதும் கவனம் செலுத்தினால் அதிகமாக நன்மைகள் கிடைக்கும்.

## இரு ஆசனங்களுக்கிடையே ஓய்வு:

ஒரு ஆசனத்தை செய்தபிறகு அடுத்த ஆசனத்தை செய்வதற்கு 15 அல்லது 20 வினாடி (4 முதல் 5 மூச்சு) ஓய்வு கொள்ளலாம். மூச்சு சமநிலைக்கு வரவில்லை என்றால் இன்னும் சிறது நேரம் ஓய்வு தேவைப்படலாம். உடல் வலிக்கிறது என்று அதிக நேரம் ஓய்வு எடுத்துக்கொள்ளக்கூடாது. இதனால் உடல் ஜடநிலைக்குப் போய், மனம் அலைய ஆரம்பித்து மற்ற ஆசனங்களை செய்ய சோம்பேறித்தனம் உண்டாகும். கடினமான ஆசனங்களை பயிற்சி செய்யும் போது தேவைப்பட்டால் 30 வினாடிக்கு மேல் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். நோயாளிகள் தேவைப்பட்டால் இரண்டொரு நிமிடம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்.

## பயிற்சி மற்றும் ஓய்வு:

முதலில் ஆசனப் பயிற்சி, பிறகு பிராணாயாமம், தியானம், கடைசியில் சவானத்தில் ஓய்வு பெற வேண்டும். வெளியே சென்று விட்டு வந்தவுடன் முதலில் ஆசனப் பயிற்சியை செய்யாமல் சிறிது நேரம் சவானத்தில் ஓய்வாக இருந்து உடலை தளர்த்திக்கொண்டு பிறகு ஆசனப் பயிற்சியை துவங்கலாம்.

## ஆசனப் பயிற்சியை எப்போது செய்யக்கூடாது:

தலைக்கு எண்ணெய் தேய்த்து குளித்தபிறகும், சூரிய குளியலுக்குப் பிறகும், உணவு உண்ட உடனேயும், தலைவலி, காதுவலி, கண்வலி, பல்வலி உள்ளபோதும் செய்யக்கூடாது. கடுமையான வெயிலிலும், குளிரிலும் செய்யக்கூடாது. கவலை,




துக்கத்தோடு இருக்கும்போது செய்யக்கூடாது. இரவு முழுவதும் கண்விழித்த பிறகு மறுநாள் காலை கடினமான ஆசனப் பயிற்சிகளை செய்யக்கூடாது.

## உணவு:

காலையில் வெறும் வயிற்றுடன் ஆசனம், பிராணாயாமம் முதலான யோகாப் பயிற்சிகளை செய்ய வேண்டும். வெறும் வயிற்றோடு செய்வதற்கு பலகீனமாக இருந்தால், பால் அல்லது பழச்சாறு ஒரு டம்ளர் அருந்தி 15 நிமிடம் கழித்து பயிற்சி செய்யலாம். அதிக உணவிற்கு பிறகு 4 மணி நேரமும், சிற்றுண்டிக்கு பிறகு 2 மணிநேரமும் கழித்த பிறகு ஆசனப் பயிற்சி செய்யவேண்டும்.

உணவு உட்கொண்டவுடன் செய்யக்கூடிய ஆசனங்கள்: வஜ்ராசனம் மற்றும் பத்மாசனம் அமரலாம். உணவு உட்கொண்ட பிறகு உடனே உட்கார்ந்து கொண்டு வேலை செய்பவர்கள் வஜ்ராசனம் அல்லது பத்மாசனத்தை அப்பியாசித்தால் ஜீரண செயலுக்கு உதவி மற்றும் பாரமான வயிறு லேசாகும்.

## பெண்கள்:

மாதவிலக்கு நாட்களில் ஆசனப்பயிற்சி செய்யக்கூடாது. ஆனால் அந்த நாட்களில் இடுப்பு வலி, வயிற்று வலி மற்றும் ரத்தப்போக்கு அதிகமாக இருந்தால் ஜானு சிரசாசனம், உபவிஷ்ட கோணாசனம், பத்த கோணாசனம், பச்சிமொத்தாசனம், மார்ஜாரி ஆசனம், சவாசனம் மற்றும் நாடி சோதனா, அனுலோம விலோம பிராணாயாமத்தை செய்து பயன் பெறலாம்.

கர்ப்பிணிகள் முதல் மூன்று மாதம் வரை வயிற்றை அதிகமாக அழுத்தும்படியான ஆசனங்களை விடுத்து மற்ற ஆசனங்களை செய்யலாம். அதற்கு பிறகு குழந்தை பேறுகாலம் வரை அடிக்கடி நேரம் கிடைக்கும்போதெல்லாம் பத்தகோணாசனத்தில் முதல் நிலையில் உட்கார்ந்திருக்கலாம். இதனால் கூபக எலும்பு நன்கு விரிந்து நல்லமுறையில் குழந்தை பிறக்க உதவுகிறது.

கர்ப்பிணிகள் நாடிசோதனா, அனுலோம விலோம, உஜ்ஜாயி போன்ற பிராணாயாமத்தையும், தியானத்தையும், யோகா நித்திரையையும் தொடர்ந்து செய்து வந்தால் குழந்தை நல்ல ஆரோக்கியத்துடனும், நல்ல குணமுடையதாகவும் உருவாகும்.

குழந்தை பிறப்பிற்கு பிறகு ஒரு மாத காலம் வரைக்கும் ஆசனப் பயிற்சியை துவங்கக் கூடாது. அதற்குப் பிறகு சுலபமான ஆசனத்தை செய்து வந்து, மூன்று மாதத்திற்கு பிறகு, எல்லா ஆசனங்களையும் செய்யலாம்.

# M.P. நாச்சிமுத்து M. ஜெகநாதன்
## பொறியியல் கல்லூரி

சுத்தானந்தன் கல்வி நகர்,
சென்னிமலை, ஈரோடு - 638 112.

**Phone : 04294 - 250242, 250220, 251617**

E-mail : mpnmjec@mpnmjec.ac.in Visit us at : www.mpnmjec.ac.in



'உத்யோக் ரத்னா'
திரு. ஜெ. சுத்தானந்தன் B.Sc.
நிறுவனர்

**Counselling Code**
**2713**



'பாரத் வித்யா சிரோமணி'
Dr. வசந்தா சுத்தானந்தன் M.A., B.Ed.
தாளாளர்

**B.E.**
- Civil Engineering
- Computer Science Engineering
- Electronics and Communication Engineering
- Electrical and Electronics Engineering
- Mechanical Engineering

கல்விச் சேவையில் 35 வருடங்கள் MPNMJEC

**B.Tech. I.T.**

**M.E.**
- CAD / CAM
- Computer Science and Engineering
- Power Systems Engineering
- Structural Engineering
- VLSI - Design

**M.B.A**
**M.C.A**

தொடர்புக்கு : 98652 33600, 98655 33800, 98655 33700, 73736 44088

Placement Record 394 Offers

# சமைக்க... ருசிக்க...




*தேவையானவை:* வெண்டைக்காய் - 100 கிராம், எண்ணெய் - 3 டேபிள் ஸ்பூன், கடுகு, சீரகம், மஞ்சள் தூள் - தலா அரை டீஸ்பூன், சின்ன வெங்காயம் - 50 கிராம், பச்சை மிளகாய் - 4, தக்காளி - 2, இஞ்சி-பூண்டு பேஸ்ட் - ஒரு டேபிள்ஸ்பூன், மிளகாய்த் தூள் - ஒரு டீஸ்பூன், மல்லித் தூள் - அரை டேபிள் ஸ்பூன், கெட்டித்தயிர் - 2 டேபிள் ஸ்பூன், கரம் மசாலா - அரை டீஸ்பூன், உப்பு - தேவையான அளவு, கொத்தமல்லி - சிறிதளவு

*செய்முறை:* பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி, சிறிதாக நறுக்கிய வெண்டைக்காயைப் போட்டு வதக்கி எடுத்துக்கொள்ளுங்கள். அதே பாத்திரத்தில் கடுகு, சீரகம், சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் ஆகியவற்றைச் சேர்த்து வதக்கி, பிறகு அதில் இஞ்சி-பூண்டு பேஸ்ட், தக்காளியையும் சேர்த்து வதக்கவும். பிறகு மிளகாய் பொடி, மல்லிப் பொடி, கரம் மசாலா, மஞ்சள் தூள், தேவைக்கேற்ப உப்பு சேர்த்து கிளறவும். இந்தக் கலவையுடன் வதக்கிய வெண்டைக்காய், தயிர் இரண்டையும் சேர்த்து, சிறிதளவு தண்ணீர் சேர்த்து பத்து நிமிடம் மூடிவைத்து வேகவைக்கவும். வெந்ததும் கிளறிவிட்டு, கொத்தமல்லித் தழையைச் சேர்த்து இறக்கிப் பரிமாறவும்.




*தேவையானவை:* மரவள்ளிக் கிழங்கு (துருவியது) - ஒரு கப், துவரம் பருப்பு - கால் கப், அரிசி – கால் கப், சின்ன வெங்காயம் – சிறிதளவு, பச்சை மிளகாய், காய்ந்த மிளகாய் – தலா இரண்டு, சீரகம் - அரை டீஸ்பூன், பெருங்காயம் - இரண்டு சிட்டிகை

*செய்முறை:* பருப்பு, அரிசி இரண்டையும் தனித்தனியாக ஊறவைக்கவும். நன்றாக ஊறியதும் அரிசியுடன் காய்ந்த மிளகாயையும் சீரகத்தையும் சேர்த்து அரைக்கவும். பருப்பைத் தனியே கொரகொரப்பாக அரைத்துக்கொள்ளவும். துருவிய மரவள்ளிக் கிழங்கை தனியாக அரைத்துக் கொள்ளவும். அரைத்த மாவுக் கலவைகளை ஒன்றாகச் சேர்த்துப் பிசையுங்கள். நறுக்கிய வெங்காயம் பச்சை மிளகாய், உப்பு, பெருங்காயம் ஆகியவற்றை மாவில் சேர்த்துப் பிசையுங்கள். மாவைச் சிறு சிறு வடைகளாகத் தட்டி எண்ணெய்யில் போட்டுப் பொரித்தெடுங்கள். இதை மாலை நேரச் சிற்றுண்டியாகச் சாப்பிடலாம்.




*தேவையானவை:* இளசான இஞ்சி – 200 கிராம், சுத்தமான பாகு வெல்லம் – 300 கிராம், கோதுமை மாவு – ஒரு டேபிள் ஸ்பூன், ஏலப் பொடி – ஒரு டீஸ்பூன், நெய் – 2 டேபிள் ஸ்பூன்

*செய்முறை:* இஞ்சியைத் தோல் நீக்கி மிக்ஸியில் போட்டு மையாக அரைக்கவும். தேவையெனில் சிறிது தண்ணீர் தெளிக்கலாம். வெல்லத்துடன் சிறிது தண்ணீர் ஊற்றிக் காய்ச்சவும். இளம் பாகு பதம் வந்ததும் இஞ்சி விழுது சேர்த்து, சிறிது நேரம் கிளறவும். கோதுமை மாவில் சிறிது தண்ணீர் விட்டுக் கரைத்து ஊற்றிக் கிளறவும். நெய், ஏலப் பொடி இரண்டையும் சேர்த்துக் கிளறி பாத்திரத்தில் ஒட்டாமல் வரும்போது நெய் தடவிய தட்டில் கொட்டி, துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். ஜீரண கோளாறுகளுக்கு நல்லது.

# செங்குந்தர்

## எண்ணங்கள்

## ஆலோசனைகள்

## சொந்தக்கருத்து




நிவாரணம் வழங்கிய விபரங்களையும் படவேடு ரேணுகாம்பாள் திருக்கோயில் வரலாற்றையும், மாநில சங்கத்தின் மூலம் கொரோனா நிதி கொடுத்த செய்தியையும் ஜூன் மாத மித்திரன் இதழில் வெளியிட்டமைக்கு நன்றி!

**– சு.முத்துமாரி,** *ரெகுநாதபுரம்.*

ஜூன் மாத செங்குந்தமித்திரனில் படவேடு சென்று ரேணுகாம்பாள் அம்மனை தரிசித்தால் வளமான வசந்தம் வீசும் வாழ்க்கை அமையும் என்ற செய்தியும், படங்களும் அருமையாக இருந்தது.

**– செ.மோகன்,** *தலைமைச்சங்க செயற்குழு உறுப்பினர், பரமக்குடி.*

ஜூன் மித்திரனில் இன்றைய சூழலில் மருந்துன்னும் காலம் பற்றிய விபரமும் இளைஞர்களின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் அமைந்துள்ள மாநில மத்திய அரசுகளின் திட்டங்களை வெளியிட்டது மிகவும் சிறப்பு, நெசவாளியின் சிறப்பை அகரவரிசையில் கவிதையாக வந்தது ஈடு இணையில்லாதது.

**– மு.சந்திரசேகரன்,** *தாராசுரம்.*

*மதி(ப்பு)மிகு தலைவா!*
*பாதை அறிந்து பயணம் புரிபவரே! நின்*
*நன்றிதனை நவிலும் மடல்தனை பெற்றேனின்று!*
*நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை காள்!*
*நித்திலமாய் திகழ்கின்றாய்! சமுதாயக் குழுமத்துள்!*
*நீங்காத சரிதம் நிச்சயமாய் உமக்குண்டு!*
*நுண்ணிய கருத்துகளை நீரெழுதும் மடல்களில்*
*நூலாகத் தொகுத்திடலாம் உண்மை இது!*
*நெடிய பயணம் சமூகமதில் காத்திருக்க*
*நேர்மையுடன் பணியாற்றி நலமதையே புரிந்திடுக!*
*நைந்தவர்தம் வாழ்வுயர நாளுமே நிமிர்ந்திருப்பாய்!*
*நோக்கமது உயர்வானால் நல்லதே நடந்திடுமாம்! ஆதலின்*
*ஒளவையார் அற்நெறியில் பிழையாது என்றும் நீவிர்*
*வாழ்கவே எம்மான்! நீர் வாழ்கவே பல்லாண்டு!*

**– E.லோகநாதன்,** *ஆசிரியர், மாநில செயற்குழு உறுப்பினர், காங்கேயநல்லூர்.*

படவேடு ரேணுகாம்பாள் திருக்கோயில் ஆன்மீக கட்டுரை அருமை. திருமண பாக்கியம், குழந்தை பாக்கியம் வழங்கும் பெருமையுடைய அம்மன் கோயில் சிறப்பு வாய்ந்தது. இந்த கோவில் அருமை பெருமை எல்லாம் பட்டியல் இட்டு தந்த மித்திரன் இதழின் ஆன்மீக பணி சிறக்க வாழ்த்துக்கள் .

**– வி.மருதவாணன்,** *திட்டக்குடி.*

அட்டையில் செங்குந்தர் குல செம்மல். சோ.தட்ஷணாமூர்த்தி அவர்கள் புகைப்படம் அருமை. அவர்கள் வாழ்க்கையில் நடந்த உண்மை சம்பவத் தொகுப்பு கட்டுரை மிகவும் சிறப்பு வாய்ந்தது.

**– கே.ஆளவந்தான்,** *சின்னசேலம், விழுப்புரம்.*

கொரோனா நிவாரண நிதிக்கு நிதி அளித்தவர்களும் நிதி பெற்றவர்களின் பட்டியல் வெளியிட்டுள்ளது சிறப்பு ஏனென்றால் நிதியை கொடுத்தவர்களும் நிதியை பெற்றவர்களும் சந்தோஷம் அடைவார்கள் இதுவரை நிதி கொடுக்காதவர்கள் தாமும் இனி நிதி கொடுக்கலாம் என்ற எண்ணம் தோன்றும் விதமாக இந்த பட்டியல் வெளியிட்டுள்ளது மற்றும் மறைந்த முன்னாள் தலைவர் J.S அவர்களின் 10ஆம் ஆண்டு நினைவு போற்றுதல் சிறப்பு.

***- D.தணிகாசலம்,***
*தலைமை சங்க செயற்குழு உறுப்பினர்,*
*காஞ்சிபுரம்.*

ஃஃஃ

செங்குந்தர்கள் செய்த நிவாரண பணிகள் பலவற்றைப் பட்டியல் இட்டு தந்த மித்திரன் இதழில் வெளிவந்த கட்டுரைகள் நம் நிவாரண நிதி மற்றும் பொருள்கள் கொடுத்து காட்சிகள் மனதுக்கு மிகவும் பெருமை மகிழ்ச்சி அடைகிறேன். உதவிநிதி கொடுத்தோர் பட்டியல் தொகுப்பு அருமை.

***- சித.வீரமணி*** *, தமிழ் ஆசிரியர், சென்னை..46.*

ஃஃஃ

திங்கள் ஒரு திருக்குறள்.. நிலையாமை அதிகாகவிஞர் அ. முத்துசாமி தாரமங்கலம அவர்களின் கவிதை அருமை. ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்த பெட்டகம் சிந்தனைக் குவியல். தமிழ்ப் பணி சிறக்க வாழ்த்துகிறேன் வாழ்க அவர்கள் புகழ் ஓங்குக தமிழ்.

***- கந்தசுப்ரமணியன்.கே*** *, கூடுவாஞ்சேரி.*

ஃஃஃ

விதை.. விருச்சம் வித்தகரே.. கவிதை அருமை ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்த அடிகள் அத்தனையும் தேன் குழைத்து திகட்டாத தேள்ளமுதாய் உள்ளது. திட்டக்குடி கவிஞர். தி.க.வேல்முருகன் அவர்கள் தமிழ் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

***- பொன். ராஜசேகர்,*** *ஆத்தூர்.*

ஃஃஃ

உங்கள் பக்கம் தலைவர் கடிதம் நம்சமூகம் உயர நல்வழியில் நடக்க வேண்டும் என்று நீங்கள் கூறுவது சிறந்த வரிகள் மேலும் கற்குவியலில் உள்ள முதல் கல் அஸ்திவாரம் ஆகவும் இருக்கும் கடைசி கல் கோபுரத்தின் உச்சியில் இருந்து அழகு அருமை. உங்கள் உவமை மிகவும் பெருமை மகிழ்ச்சி அடைகிறேன்.

***- பெ.மதனகோபால்,*** *பட்டுக்கோட்டை.*

ஃஃஃ

ரம் குறள். ஓவியம் மற்றும் கருத்துக்கள். அருமை. நிலையாக இயல்பினை கொண்ட செல்வத்தை சேமித்து நல்ல வழியில். அறவழியில் செலவுகள் செய்வதே சிறந்தது என்பது . கருத்துக்கள் நிறைந்த அடிகள் அத்தனையும் தேன் ஓவியம் அருமை.சிவன். மலை பித்தன் நடராஜன் தமிழ் பணிச் சிறக்க வாழ்த்துக்கள் பாராட்டுக்கள்.

***- வேல். வெற்றி வேந்தன்,*** *திட்டக்குடி.*

ஃஃஃ

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் முன்னாள் தலைவர் கைத்தறிக் காவலன் தெய்வத்திரு என்.பி.நாச்சிமுத்து முதலியார் அவர்கள் 33வது நினைவு நாள் விழாவின் தொகுப்பு பட்டியலும் . நெசவாளர் நேசன் சிவத்திரு ஜெ.சுத்தானந்தன் அவர்கள் 10 வதுநினைவுநாள் விழாக்களின் தொகுப்பும் சிறப்பாக இருந்தது.

***- தி.க.வேல்முருகன்,*** *திட்டக்குடி.*

ஃஃஃ

சென்ற மாதம் மித்திரனில் வெளிவந்த சமைக்க ருசிக்க பகுதியில் பிரண்டைத் தொக்கு மற்றும் கோதுமை ரவை இட்லி சத்தாகவும் ருசியாகவும் இருந்தது. சமூக நலன் மட்டுமல்லாமல் உடல் நலம் மிக்க குறிப்புகளை வெளியிட்டுவரும் மித்திரன் பணி சிறக்க வாழ்க்கள்.

***- க.பூவதி,*** *சின்னக்காளிபாளையம்.*

ஃஃஃ

# ஒரு வரியில் இயற்கை மருத்துவம் பற்றித் தெரிந்து கொள்வோம்!



01. வரட்டு இருமலுக்கு சிறந்தது திராட்சை.!
02. முதுகுத்தண்டு வலிக்கு பாப்பாளிப்பழம் சாப்பிடு!
03. இரத்த அழுத்தம் குறைய எலுமிச்சை!
04. மூளைக்கு வலியூட்ட வல்லாரை!
05. காது மந்தம் போக்கும் தூதுவளை!
06. மூத்திரக்கடுப்பு மாற்ற பசலைக் கீரை!
07. பித்த மயக்கம் தீர புளியாரை!
08. உடற் சூடு அகல முருங்கைக் கீரை!
09. நீரிழிவு நோய்க்கு துளசி இலை!
10. இரத்தத்தை சுத்திகரிக்க வெள்ளைப்பூடு!
11. கண் பார்வை அதிகரிக்க கரட், புதினா, ஏலக்காய்!
12. கடுமையான ஜலதோசத்திற்கு தேனும் எலுமிச்சையும்!
13. வாழ்நாளை நீடிக்க நெல்லிக்கனி!
14. சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும் வெந்தயம்!
15. கொழுப்புச் சத்தை மிளகு குறைக்கும்!
16. இளைத்த உடல் பெருக்க மிளகு!
17. பொடுகைப் போக்க தயிரில் குளி!
18. மூலநோய்க்கு கருணைக்கிழங்கு!
19. இதயப் பலவீனம் போக்க மாதுளை!
20. வெள்ளை வெட்டை தீர அன்னாசி!
21. காதுவலி தீர எலுமிச்சம் சாறு நாலு துளி காதில் விடுக!
22. பீனீசம் தலைவலி நீங்க மிளகுப் பொடியுடன் வெல்லம் சேர்த்து உண்!
23. பொன்னாங்காணி உண்டால் நோய் தணிந்து உடல் தேறும்!
24. வாழைத்தண்டு சிறுநீரகக் கற்களை கரைக்கும்!
25. மலத்தை இளக்கும் ரோஜா இதழ்கள்!
26. மாதுளம் பிஞ்சு பேதியை நிறுத்தும்!
27. கருப்பை நோய்க்கு வாழைப்பூ!
28. ஜீரண சக்தியை அதிகரிக்கும் மிளகும் இஞ்சியும்!
29. மூளைக்கு வலுவூட்டுவது பேரிச்சம்பழம் பாதாம் பருப்பு!
30. மருதோன்றி வேர்ப்பட்டையை அரைத்துக் கட்ட கால் ஆணி குணமாகும்.!

# யாளி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.,

# YALEY CHITFUNDS (P) LTD.,

GSTIN: 33AAACY0719M2Z9

Since 1986

மத்திய மாநில அரசுகளின் சீட்டு நிதிச் சட்டப்படி பதிவு பெற்ற சீட்டுகள் நடத்தும் நிறுவனம்



தெய்வத்திரு
Dr. Lion.யாளி S.மதிவாணன்
நிறுவனர்

223, எழில் இல்லம், மேட்டூர் ரோடு, ஈரோடு – 638 011.

Ph : 0424 - 2259007, 4020258 94431 28386 / Email : yaleychitfunds@gmail.com

**எமது பெருமை மிகு சீட்டு குரூப்புகள்**

| மாதத் தவணை | மாதங்கள் | சீட்டு தொகை |
|---|---|---|
| ₹. 2,00,000 | 25 | ₹. 50,00,000 |
| ₹. 1,00,000 | 25 | ₹. 25,00,000 |
| ₹. 50,000 | 25 | ₹. 12,50,000 |
| ₹. 50,000 | 40 | ₹. 20,00,000 |
| ₹. 25,000 | 40 | ₹. 10,00,000 |
| ₹. 30,000 | 40 | ₹. 12,00,000 |
| ₹. 15,000 | 40 | ₹. 6,00,000 |
| ₹. 20,000 | 30 | ₹. 6,00,000 |
| ₹. 10,000 | 30 | ₹. 3,00,000 |
| ₹. 20,000 | 25 | ₹. 5,00,000 |
| ₹. 10,000 | 25 | ₹. 2,50,000 |
| ₹. 8,000 | 25 | ₹. 2,00,000 |
| ₹. 4,000 | 25 | ₹. 1,00,000 |

**JC பிரேம்சரண் மதிவாணன்**
நிர்வாக இயக்குநர்
94433 28386

புதிய சீட்டில் இணைய தொடர்புக்கு

94433 28701 | 94432 28731 | 94877 28386

தினசரி, வார மற்றும் மாத கலெக்‌ஷன்கள் உண்டு

# பூஜையில் நைவேத்யங்களின் சமஸ்க்ருத பெயர்கள்



1) வெற்றிலைப் பாக்கு - தாம்பூலம்
2) முழுத்தேங்காய் - நாரிகேலம்
3) பல தேங்காய் மூடிகள் - நாரிகேல கண்டாணீ
4) வாழைப்பழம் - கதலி பலம்
5) மாம்பழம் - ஆம்ர பலம்
6) விளாம்பழம் - கபித்த பலம்
7) நாகப்பழம் (நாவல்பழம்) - ஜம்பு பலம்
8) பலாப்பழம் - பனஸ பலம்
9) சாத்துக்குடி - நாரங்க பலம்
10) ஆப்பிள் பழம் - காஷ்மீர பலம்
11) பேரிக்காய் - பேரீ பலம்
12) கொய்யாப் பழம் - பீஜா பலம்
13) திராட்சை பழம் - திராட்ஷா பலம்
14) பேரீச்சம் பழம் - கர்ஜீர பலம்
15) பிரப்பம் பழம் - வேத்ர பலம்
16) கரும்பு - இக்ஷு தண்டம்
17) மாதுளம்பழம் - தாடிமீ பலம்
18) எலுமிச்சம்பழம் - ஜம்பீர பலம்
19) வடை - மாஷாபூபம்
20) மஞ்சள் பொங்கல் - ஹரித்ரான்னம்
21) எள்ளுச்சாதம் - திலோன்னம்
22) சர்க்கரைப் பொங்கல் - குடான்னம்
23) அக்காரவடிசல் - சர்க்கரான்னம்
24) வெண்பொங்கல் - முத்கான்னம்
25) புளியோதரை - திந்திரிணியன்னம்
26) வெள்ளைசாதம் - சுத்தான்னம்
27) எலுமிச்சைசாதம் - ஜம்பீரபலன்னம்
28) தேங்காய் சாதம் - நாரிகேலன்னம்
29) தயிர்சாதம் - தத்யோன்னம்
30) பலவித சாதங்கள் - சித்ரான்னம்
31) சுண்டல் - க்ஷணகம்
32) பால் பாயாசம் - க்ஷீர பாயஸம்
33) வெல்ல பாயாசம் - குட பாயஸம்
34) புட்டு - குடமிச்சபிஷ்டம்
35) முறுக்கு - சஷ்குலி
36) இட்லி - லட்டுகானி

37) கொழுக்கட்டை - மோதகானி

38) அப்பம் - குடாபூபம்

39) மாவிளக்கு - குடமிஸ்ஸபிஷ்டம்

40) அதிரசம் - குடாபூபம்

41) உளுந்து - மாஷம்

42) பயறு - முத்கம்

43) எள் - திலம்

44) கடலை - க்ஷணகம்

45) கோதுமை - கோதுமா

46) அரிசி - தண்டுலம்

47) அவல் - ப்ருதுகம்

48) நெய் - ஆஜ்யம்

49) பருப்பு பாயாசம் - குடபாயஸம்

50) பால் - க்ஷீரம்

51) சுக்கு வெல்லம் கலந்த நீர் - பானகம்

52) வெண்ணெய் - நவநீதம்

53) கல்கண்டு - ரஸ கண்டாளீ

56) மல்லிகைப்பூ - மல்லிகாபுஷ்பம்

57) செவ்வந்திப்பூ - ஜவந்திபுஷ்பம்

58) தாமரைப்பூ - பத்மபுஷ்பம்

59) அருகம்புல் - தூர்வாயுக்மம்

60) வன்னிஇலை - வன்னிபத்ரம்

61) வில்வ இலை - பில்வபத்ரம்

62) துளசி இலை - துளஸிபத்ரம்

63) ஊதுபத்தி / சாம்பிராணி - தூபம்

64) விளக்கு - தீபம்

65) சூடம் - கற்பூரம்

66) மனைப்பலகை - ஆசனம்

67) ரவிக்கைத்துணி - வஸ்த்ரம்

68) மஞ்சள்/குங்குமம் கலந்த அரிசி - மங்களாட்சதை

69) ஜலம் நிரப்பிய சொம்பு - கலசம்

70) திருமாங்கல்ய சரடு - மங்கலசூத்ரம்

71) மற்ற பட்சணங்கள் - விசேஷபக்ஷணம்

72) பூநூல் - யக்ஞோபவீதம்

73) சந்தனம் - களபம்

74) விபூதி - பஸ்பம்

75) வாசனை திரவியங்கள் - ஸுகந்தத்ரவ்யா



நம் வீட்டில் கணபதி ஹோமம், தன்வந்தரி ஹோமம், லட்ஷ்மி ஹோமம் மற்றும் நவக்கிரக ஹோமம் நடத்தும்போது அய்யர் சொல்வது நமக்கு புரியாது. இதை படித்தோமானால் நமக்கு புரியும். இந்த தகவல் உபயோகமானதாக இருக்கும்.

**- அன்னக்கொடி காந்தி M.A.**
**மதுரை.**

# கோவை மாவட்ட செங்குந்த மகாஜன சங்க அவசர ஆலோசனைக் கூட்டம்

19.07.2020 ஞாயிறன்று இருகூர் அசோக் தலைமையில் காணொளி மூலம் இந்த அவசர ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள், கௌரவத் தலைவர் என். ஆர். பாலகிருஷ்ணன் முதலியார், அனைத்து கிளைச் சங்க நிர்வாகிகள், இளைஞரணியினர், மகளிரணியினர் மற்றும் இதர அணி நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் பல்வேறு முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை, நம் செங்குந்தர் குலக் கடவுள் முருகப்பெருமானையும், கந்தசஷ்டி கவசத்தையும் அவதூறாகப் பேசிய கறுப்பர் கூட்டத்தை வன்மையாகக் கண்டித்து கண்டன தீர்மானமும், சட்டத்திற்குட்பட்டு கோவை மாவட்ட சங்கம், கிளைச் சங்கங்கள் சார்பில் அந்தந்த பகுதி காவல் நிலையங்களில் நம் குலக் கடவுளை அவதூறாகப் பேசி தமிழகத்தில் மதக்கலவரம் உண்டாக்கும் விதத்திலும், இந்திய நாட்டின் இறையாண்மைக்கு எதிராகவும், இந்துக்களின் மனதைப் புண்படுத்தும் வகையிலும் வீடியோ வெளியிட்டு பெரும் சர்ச்சையைக் கிளப்பிய கறுப்பர் கூட்டம் என்கிற யுடியூப் சேனலை தடை செய்யக் கோரியும், அந்த சேனலில் உள்ள அனைத்து நிர்வாகிகளையும் கைது செய்ய வலியுறுத்தியும் புகார் மனு அளிப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.




ஆந்திர காளாஹஸ்தி கோவிலுக்கும் நம் செங்குந்தர் கைக்கோள முதலியார்” சமூகத்துக்கும் உள்ள வரலாறு.

*பல ஆயிரம் ஆண்டுகளுகு முன்பு நம் சமூகத்தில் உள்ள வெள்ளாத்தூரார் கோத்திரத்தில் பிறந்து, கடவுளாக மாறியவர் “ஞானப்பூங்கோதை அம்மன்”. *கடவுள் காளத்தீஸ்வரர்(சிவன்) சுவாமிக்கும் ஞானபூங்கோதை அம்மனுக்கும் காளாஹஸ்தி கோவிலில் திருமணம் நடைபெற்றது.

வருடம் தேறும் திருகல்யாணத் திருவிழா நம் சமூகத்தார் சார்பில் நடைபெறும்.

ஆந்திர மாநிலம், காளஹஸ்தி கோவிலில் சிவராத்திரி நாளன்று ஞானபூங்கோதை அம்மனுக்கு வாயுலிங்கேஸ்வரர் கோவிலில் நடக்கும் திருக்கல்யாணத்தில், செங்குந்தர் சமூக வல்லாத்தூர் கோத்திர பங்காளிகளின் சார்பில், பெண் வீட்டு சீதனம் கொண்டு சென்று சமர்ப்பிப்பது வழக்கம். ஆந்திர மாநிலத்தில் நம் சமூகத்தாரை செங்குந்தர் / செங்குந்தம் / கைக்காளபக்தலூ என்று அழைக்கின்றார்கள்.

நடைபெறும் இடம் : கைக்காள வாரி மண்டபம், காளாஹத்தி சிவன் கோவில், சித்தூர்.

# நித்தம் நித்தம் குளிர்விக்கும் தத்துவ சிகரம்



மண்ணில் நெசவுநெய்து மானம் காத்த
மாண்புடை காவலனாம் நெசவாளி
கைத்தறியியே தனதுயிர் என்று வாழுகிறான்
நெசவாளர் நலம்காக்கும் திருநாளாம் – இன்னாள்
அனைவருக்கும் ஆடைநெய்து தந்தவன்
அவனுடுத்த உடையுண்டா எண்ணிப்பார்
அவன்வாழ நல்வழிப் படுத்தும் பொன்னாளாம்
கொண்டாட்டம் போதாது கூனைநிமிர்த்து
அவன் குறைகளை போக்கிடுவோம் நாம் தினம்
குன்றின் விளக்காக குவலயம் காக்கட்டும்.

சென்னை மாநகரில் பிறந்த வேதாத்திரி
சென்றுபடித்தது மூன்றாம் வகுப்பேயாம்
சிறுதொழில்கள் பலசெய்து பின்னாளில்
பெரு தொழிற்சாலை சொந்தமாகக் கண்டார்
தத்துவம் ஆன்மீகம் கற்றுத் தேர்ந்தார்
யோக மையம் ஆழியாற்றில் தவச்சாலை
அமைத்து மனவளக்கலை வளர்த்த வள்ளல்
வாழ்க வளமுடன் வேதமந்திரம் ஒளிர்கிறது
உலகெங்கும் யோகாமையம் அமைத்து
யோகாக்கலை உன்னதமாய் வளரச்செய்தார்

எல்லோரும் ஏற்றம்பெற அருட்தந்தை மகரிஷி
ஆனபல பணிசெய்தார் அவரை போற்றுவோம்!
அறுபத்தி நான்காவது நாயன்மாராய் நம்குலத்தில்
அவதரித்தார் வான்புகழ் வாரியார் சுவாமிகள்
வயலூர் வள்ளல் முருகப்பெருமானின் அடியவர்
அவன் கோயில் உயர பணிசெய்து உயர்த்தியகோமான்
திருப்புகழ் உலகறிய செய்த உத்தமர்
எப்பொழுதும் முப்பொழுதும் திருப்புகழ் பரப்பியதேனீ



கிண்டலாய் கேளியாய் சிரிப்பாய் பேசியபேச்சு
கேட்பவரை மகிழவைக்கும் திறம்பட்ட பேச்சாற்றல்
மங்களமாய் புராணங்கள் அழகுறு ஆன்மீக
சொற்பொழிவுகள் தினம் தினம் புதுப்பொருள்
செந்தமிழ்த்தேனமுது வாரியார் சுவாமிகள் வார்த்தைகள்
செங்குந்தர்க்கு பாடம் படிப்பினை வாழ்க்கை
வாரியார் சுவாமிகள் ஆன்மீகம் அறிவோம்
அவர்தம் அவதாரத்திருநாளில் அவர்புகழ் பாடுவோம்!

கவிஞர் **தி.க.வேல்முருகன்,**
திட்டக்குடி.

# வருந்துகிறோம்



விழுப்புரம் மாவட்ட சங்கத்தின் முன்னாள் புரவலரும், சென்னை பின்னி மில் உரிமையாளருமான தொழிலதிபர்
திரு. **M.எத்திராஜ் முதலியார்** அவர்கள்
10.07.2020 அன்று காலமானார்.



கடலூர் மாவட்டம் கருங்குழி செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவரும்,
வடலூர் அரிமா சங்கத்தின் தலைவருமான
திரு. **S.இராஜேந்திரன் செங்குந்தர்** அவர்களின் தந்தை
திரு.. **T. சம்பந்தம் செங்குந்தர்** அவர்கள்
18.07.2020 அன்று காலமானார்.



கோட்டாறு செங்குந்தர் மகாஜன சங்கத் தலைவர்
திரு. **P.ராமசந்திரன் முதலியார்** அவர்கள்
19.07.2020 அன்று காலமானார்.



தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாநில செயற்குழு உறுப்பினர்
ரெகுநாதபுரம் திரு. **K.குணசேகரன்** அவர்களின் மாமனாரும்,
தெய்வத்திரு. **காளிமுத்து முதலியார்** அவர்களின் மகனுமாகிய
திரு. **K.சாத்தையா செங்குந்தர்** அவர்கள்
22-07-2020 அன்று காலமானார்.

**இவர்களது மறைவுக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில்
ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:
11.09.1946

மறைவு:
17.07.2020

## R.ராஜமார்த்தாண்டன் B.E., (SRT)

(தொண்டு மன்ற உறுப்பினர்) மதுரை

SRT MAALIGAI, SRT COMPLEX, SRT SMALL SAVINGS,
SRT PRODUCTS, RAJAM PRODUCTS

உங்கள் நினைவில்

மனைவி: R. ராஜம்மாள்

| மகன்கள்: | மருமகள்கள்: |
| --- | --- |
| R.செந்தில்குமார் B.E., MBA., - | வர்ஷினி பெரியநாயகம் |
| R.ராஜவேதமூர்த்தி B.Sc., MCA., - | சுபா |

| மகள்: | மருமகன்: |
| --- | --- |
| ஜெயா கிரி | குககிரி |

பேரன்கள் - பேத்திகள்:

வர்ஷினி கிரி, ராகவ் செந்தில்குமார், ராஜீவ் கிரி,
மிருதுள் கிரி, தர்ஷன் செந்தில்குமார், குட்டிப் பாப்பா



வீட்டில் செய்யக்கூடிய எளிய

# மருத்துவ குறிப்புகள்

- வெண்டைக்காயை உணவில் அடிக்கடி சேர்த்து வந்தால் நரம்புகள் வலிமை பெறும். மூளையின் இயக்கத்தைச் செம்மைப்படுத்துவதுடன் நல்ல ஞாபக சக்தியையும் உண்டாகும்.
- சுக்கு, மிளகு, திப்பிலி, தாமரை இதழ், வெல்லம் சேர்த்து தண்ணீரில் விட்டுக் கொதிக்க வைத்து வடிகட்டி இரவில் ஒரு டம்ளர் சாப்பிடுவதால் மாரடைப்பைத் தடுக்கலாம்
- வெள்ளைப் பூசணிக்காயை பூந்துருவலாக துருவி, உப்பு சேர்த்து இஞ்சி, பச்சை மிளகாய், கொத்துமல்லி, கருவேப்பிலை, கடுகு, தாளித்து தயிரில் கலந்து தயிர்ப் பச்சடியாக சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருக்கும். பூசணிக்காய் ரத்தக்கொதிப்பு, கொலஸ்ட்ரால் தலைசுற்றல் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும்.
- கை சுளுக்கு உள்ளவர்கள் நீரில் மிளகுத் தூளும், கற்பூரத்தையும் போட்டுக் கொதிக்க வைத்து அந்தத் தண்ணீரைத் துணியில் நனைத்துச் சுளுக்கு உள்ள இடத்தின் மீது போடுங்கள். அல்லது டர்ப்பன்டைன் எண்ணெயைத் தடவினாலும் சுளுக்கு விட்டு விடும்.
- அருகம்புல் சாறை மோருடன் குடித்தால் நீரிழிவு குறையும். உலர் திராட்சைப் பழத்தை வெது வெதுப்பான தண்ணீரில் அரை மணி நேரம் ஊறவைத்து காலையில் அருந்தினால் மாதவிடாய்க் கோளாறுகள், இதய நோய் தீரும்.
- புடலங்காயின் இலைச்சாறு, காலையில் குழந்தைகளுக்குத் தருவதால் கக்குவான், இருமல் குணமாகும். மலச்சிக்கல் நீங்கும். புடலங்காய் சமைத்து உண்பதால் தேவை யில்லாத உடல் பருமன் குறையலாம்
- கேரட் சாறும் சிறிது தேனும் பருகி வந்தால் கர்ப்பிணிப் பெண்களுக்கு வாந்தி மட்டுப்படும். எலுமிச்சை பழச் சாற்றில் ரசம் செய்து சாப்பிட்டால் உஷ்ணம் குறையும். கடுகை அரைத்து வலியுள்ள பகுதி யில் போட்டால் வலி குறைந்து விடும்.
- நுரையீரல் சம்பந்தமான நோய்கள் குணமாக வெற்றிலைச் சாற்றில் இஞ்சி சாற்றை சேர்த்து குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். எள், எள்ளில் இருந்து வரும் நல்லெண்ணெய்யைக் கொடுக்க உடல் இளைந்துக் காணப்படுபவர்கள் தேறி, உடல் எடை அதிகரிக்கும்.

Printed by T.Parvathi, Published by K.P.K.Selvaraj
on behalf of South Indian Senguntha Mahajana Sangam
Printed at: Arul Vinayaga Fine Arts, 5/158, Samipuram Colony, Sivakasi - 626 189.
Published from 58, Armenian Street, Chennai - 600 001. Editor: K.P.K.Selvaraj

# தென்னிந்திய
# செங்குந்த மகாஜன சங்கம்
## தலைமைச் சங்க நிர்வாகிகள்
## (2020 – 2023)

### தலைவர்



திரு. **K.P.K.செல்வராஜ்,**
20, பெத்தி செட்டிபுரம் கிழக்கு
2வது வீதி, திருப்பூர் – 641601.
செல்: **98430 43590**

### பொதுச்செயலாளர்



திரு. **R.P.குமரகுருபரன்**
61, சந்தானம் தெரு,
V.G.P. புஷ்பா நகர், மேடவாக்கம்,
சென்னை – 600100.
செல்: **91766 90404**

### துணைப் பொதுச்செயலாளர்



திரு. **K.சுந்தரமூர்த்தி**
2/53, மெயின் ரோடு,
இளவங்கார்குடி, பௌத்திரமாணிக்கம்,
திருவாரூர் – 610 001.
செல்: **98406 11567**

### பொருளாளர்



திரு. **R.காந்தி**
10, பழைய அக்ரஹாரம் தெரு,
சின்ன சொக்கிகுளம்,
மதுரை – 625 002.
செல்: **99932 75599**

### துணைத் தலைவர்கள்



திரு. **C.N.தட்சணாமூர்த்தி**
144/44F, நரிமுருகப்ப முதலி தெரு,
பிச்சனூர், குடியாத்தம் – 632 602.
கைபேசி: **94439 64556**



திரு. **மெட்டல் M.மணி**
76, VCV லே அவுட், R.S.புரம்,
கோயம்புத்தூர் – 641 002.
செல்: **94437 16040**



திரு. **A.பாலதண்டபாணி**
1/311-1, செங்குந்தர் நகர்,
செங்குந்தர் பொறியியல் கல்லூரி,
மண்டகப்பாளையம் – 637 205.
திருச்செங்கோடு.
கைபேசி: **98427 53349**



திரு. **C.கார்த்திகேயன்**
219/18, Kavyam
Hari Shankar Road,
Tharekkad, Palakkad - 678 001
Kerala State
செல்: **070341 40659**



திரு. **P.G.செல்வராஜ்**
5-4-144, S.V. Koil Street
Ekambarakuppam-517 592
Nagari Mandal,
Chittoor Dist (A.P)
செல்: **94402 70600**

### செயலாளர்கள்



திரு. **சீனி. கார்த்திகேயன்**
42/73, இராஜராஜன் தெரு,
திருவண்ணாமலை – 606 601.
கைபேசி: **97512 99999**



திரு. **க.பாலசுப்ரமணியம்**
12/33A, ரெகுநாதபுரம் கிழக்கு,
தேவக்கோட்டை – 630 302.
சிவகங்கை மாவட்டம்.
செல்: **97887 86878**



திரு. **M.உதயசங்கர்**
551/3, சங்கமம் வீதி,
காமராஜ் நகர்,
பவானி – 638 301.
செல்: **98426 92234**



திரு. **R.கந்தசாமி**
No. 231, 1st Main, 3rd Croos,
KSTRC Layout,
J P Nagar 2nd Phase,
Bangalore - 560 078.
செல்: **098450 29016**



திரு. **ப.இராஜாக்கண்ணு**
2, தமிழ் இல்லம், பாரதி வீதி,
சாந்தி நகர், இலாசுப்பேட்டை
புதுச்சேரி – 605 008.
செல்: **94422 33381**

REGISTERED_REGISTRATION NO. TN/CNI-GPO/222/2018-2020
TO POST WPP No.TN/PMG(CCR)/WPP109/2018-2020
Registrar of Newspapers for India No. TNTAM/2000/03982
Date of Publication 25th day of Every Month.
Due Date of Posting 25th - 30th of Every Month. Posted at Egmore R.M.S. Patrika Channel, Chennai - 600008.



To,

If undelivered, Please return to:
**Sengunth Mithiran,**
**South Indian Senguntha Mahajana Sangam,**
**58, Armenian Street, Chennai - 600 001.**
**Phone: 044 - 48653014, 25241431**

